நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR சரிநிகர்

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 207 ஒக். 29-நவ.04, 2000 விலை ரூபா 12.00

**எழுதுகோல் தூக்கியவர் இறப்பதுண்டோ?**

உண்மை உரைத்தால் உயிர் குடிப்போர் அதிகாரம்
வன்மையுடன் உயிர்குடிக்கும் வளநாட்டில் திண்மையுடன்
எழுதுகோல் தூக்கியவர் இறப்பதுண்டோ?; கொன்றவரே
பழுதுண்டார்! வாழ்வதற்குப் பாழ்!

சுபோகம்





## பண்டாரவளை: இனவாதத்தின் திட்டமிட்ட படுகொலை!

பேரினவாதத்தை எதிர்த்து பேரினவாதிகளுடன்!



# நிமல்ராஜன் கொலை: அரசே பதில் சொல்!



## தொடரும் போராளியின் கதை...



## தலைமை தரப்போவது யார்?

நன்றி - நூலகத்திட்டம்




# "எனக்கு ஏதாவது நடந்தால் இவர்கள்தான் பொறுப்பு!"

## - நிமலராஜன்

எழுவான்

"நீ சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள வில்லை. அதனைச் சொல்ல உனக்கிருக்கும் உரிமையை என் உயிரைக் கொடுத்தும் காப்பேன்"



ஜனநாயகத்தின் - மக்களாட்சியின் மகத்தான மகுட வாக்கியங்களில் முதன்மையானது இது.

ஆனால், இன்று இந்த வார்த்தைகளின் அர்த்தத்தை அவசியத்தை கற்பனை பண்ணிப்பார்க்கும் நிலை கூட இந்த நாட்டில் இல்லை.

-யாழ்ப்பாண நகரத்து பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் ஊரடங்கு நடைமுறையில் உள்ள வேளையில் --கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி வெளியானதும் மேற்சொன்ன வாசகம் தான் நினைவுக்கு வந்தது.

குடாநாட்டைத் துப்பாக்கிகள் அரவணைத்துக் கொண்ட காலம் முதல் சாதாரண தமிழ் மக்கள் அனுபவித்த கொடூரங்களை இங்குள்ள தமிழ்ப் பத்திரிகையாளர்களும் அனுபவிக்க நேர்ந்தது. இன்றும் அனுபவிக்க வேண்டி உள்ளது.

1989இல் 'முரசொலி' பத்திரிகையின் ஆசிரியர் எஸ்.திருச்செல்வத்தை தேடி அவரது வீட்டுக்கு வந்த ஆயுதபாணிகள் அங்கிருந்த அவரது மகனை வாகனத்தில் பலவந்தமாக ஏற்றிச்சென்று சுட்டுக்கொன்று வீதியில் வீசிவிட்டுச் சென்றனர். குடாநாட்டு பத்திரிகைச் சுதந்திரத்தில் இது மோசமான கறைபடிந்த சம்பவம். அதன் பின்னரும் பல சம்பவங்கள் நிகழ்ந்தன. பத்திரிகையாளர்கள் விசாரிக்கப்பட்டனர். தாக்கப்பட்டனர். இன்று நிமலராஜனைத் தேடிவந்த துப்பாக்கிதாரிகள் அவரையும் கோரமாகக் கொன்று, அவரது குடும்பத்தவரையும் பழி தீர்த்துள்ளனர். யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்கள் அதிர்ந்து போய் இருக்கிறார்கள்.

துடிப்பான துணிச்சல் மிகுந்த பத்திரிகையாளன் நிமலராஜனின் கொலைக்கான பின்னணி, காரணம், நோக்கம், சூத்திரதாரிகள் என்பன அவரது மரணத்துக்குப்பின் எழுந்துள்ள உணர்வலைகளிடையே மக்களால் ஊடகவியலாளர்களால் - உணரப்பட்டு விட்டன என்றே சொல்லலாம்.

தெற்கில் ஆட்சியில் இருந்தோர் தமது நலன்களை நடவடிக்கைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அன்று ஒரு ரிச்சார்ட் டி சொய்ஸாவை சுட்டு வீசினர். இன்று குடாநாட்டில் ஆட்சியில் இருப்போர் நிமலராஜன் என்கிற தனிமனிதனைக் கொன்று போட்டுள்ளனர்.

குடாநாட்டு மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ அரச பயங்கரவாதத்தையும், அரசு சார்பு சக்திகளின் அராஜகங்களையும் சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்தியதன் மூலம் அவர் தனிமனிதன் என்ற நிலையில் இருந்து யாழ்ப்பாண சமூகத்தின் குரலாக மாறினார்.

யாழ்ப்பாணத்தில் செயற்படும் அரச சார்பு தமிழ்க்கட்சி ஒன்றின் மிரட்டலுக்கு நிமலராஜன் உள்ளாகி வந்தார் என்பது பல ஊடக நிறுவனங்களும், அமைப்புகளும் வெளியிட்ட இரங்கல் செய்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட பிரதான விடயமாகும்.

"எனது உயிருக்கு ஏதாவது நடந்தால் அதற்கு சம்பந்தப்பட்ட தமிழ்க் கட்சியே பொறுப்பு" என்று தனது பத்திரிகையுலக நண்பர்களிடமும், அண்மைக் காலமாக நிமலராஜன் கூறி வந்துள்ளார். அவரது மறைவுக்குப் பின் பலரும் இதனை நினைவு கூருகின்றனர்.

'ஆதவன்' வார இதழில் தான் வரைந்த கட்டுரை ஒன்றுக்காக அந்தக் கட்சியின் தலைவர் ஒருவரால் தான் எச்சரிக்கப்பட்ட தகவலையும் 'ஆதவன்' ஆசிரிய பீடத்தினருக்குத் தெரியப்படுத்தி இருந்தார் நிமலராஜன்.

நீண்ட காலமாகவே பத்திரிகைத் துறையில் ஈடுபட்டு வந்தவர் நிமலராஜன். எனினும், 1996ஆம் ஆண்டு குடாநாட்டை இராணுவம் கைப்பற்றிய பின்னரே அவரது பத்திரிகை உலகப் பணிகள் தீவிரமடைந்தன. குடாநாட்டுடனான வெளி உலகத் தொடர்புகள் குறிப்பாக தொலைபேசித் தொடர்புகள் ஓரளவு சீரான நிலைக்கு வந்தபோது கொழும்பு மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடிந்தது. அச்சமயம் குடாநாட்டில் இருந்து கிடைக்கும் ஒவ்வொரு சிறுதகவலும் சர்வதேச ஊடகங்களுக்கு மிகவும் பரபரப்பான முக்கியமான செய்திகளாகின. இந்தக் கட்டத்தில் தான் நிமலராஜனின் பணிகள் தீவிரமடைந்தன. ஊடகத்துறையில் அவர் பிரகாசிக்கத் தொடங்கினார். பலராலும் வேண்டப்பட்ட மதிக்கப்பட்ட ஒரு ஊடகவியலாளராகத் தோற்றம் பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் நிறுவனம் சாராத பத்திரிகைத் துறையின் (Freelance Journalism) வளர்ச்சியின் முக்கிய காலகட்டம் என்றும், இதனைக் குறிப்பிடலாம். நிறுவனம் சார்ந்த பத்திரிகையாளர்களைவிட, நிறுவனம் சாராத பத்திரிகையாளர்களின் நிலை குடாநாட்டைப் பொறுத்தவரை மேலும் அச்சுறுத்தல் மிக்கதாகவும், தொழில் ரீதியில் நிச்சயமற்ற தன்மையைக் கொண்டதாகவும் இருந்தது. நிறுவனம் சார்ந்த பத்திரிகையாளர்கள் தாம் சார்ந்த நிறுவனம் தவிர்ந்த ஏனைய செய்தியூடகங்களுக்குச் செய்திகளை வழங்க கட்டுப்பாடுகள் இருந்ததால் நிறுவனம் சாராத பத்திரிகையாளர்களுடனான தொடர்புகளை அதிகரிப்பதில் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும், தென்னிலங்கை ஊடகவியலாளர்களும் அதிக அக்கறை காட்டினர். சூட்டோடு சூடாகச் செய்திகளை வழங்குவதில் தனித்திறன் பெற்றிருந்த நிமலராஜன் தென்னிலங்கை ஊடகவியலாளர்களுக்கும், குடாநாட்டு ஊடகத்துறைக்கும் இடையே ஒரு பாலமாக விளங்கினார். தெற்கில் உள்ள நிறுவனம் சாராத, சார்ந்த ஊடகவியலாளர்களுடனும், சர்வதேச மட்டத்திலும் அவர் கொண்டிருந்த தொடர்பும் உறவுமே அவரைக் கொல்லத் திட்டமிட்டவர்களுக்குப் பாதகமாக அமைந்த காரணிகளில் பிரதானமானதாக இருந்திருக்கும்.

நிமலராஜனின் மறைவுக்குப்பின் யாழ்ப்பாணத்தில் நிறுவனம் சாராத பத்திரிகைத்துறையில் ஏற்பட்டிருக்கும் பெரிய வெற்றிடத்தை ஈடுசெய்ய வேண்டிய பொறுப்பு அங்கு உள்ள ஏனைய நிறுவனம் சாராத செய்தியாளர்கள் மீது சுமத்தப்படுகிறது. அவர்கள் நிமலின் பணியைத் தொடர்வதே அவருக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்.

⊙

# விலைத் தவிருனி

## பட்டியல் ஒன்று தாருங்கள்!

திருமலையில் த.வி.கூ உட்பட எந்தவொரு தமிழ்க கட்சியும் வெல்ல முடியாது தோற்றுப் போனதற்கான காரணம் என்ன?

தமிழ்க் கட்சிகளுக்கும் சுயேட்சைக் குழுக்களுக்கும் தமக்கு வெற்றி வாய்ப்பு முற்றாக இல்லை என்று தெரிந்திருந்தும் ஒற்றுமையின்மையால் தேர்தலில் நின்றதே இப்படிப்பட்ட ஒரு நிலை உருவாகுவதற்குக் காரணம் என்று தெரிவித்திருக்கின்றார் த.வி.கூ செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன்.

திருமலை போன்ற பல்லினங்களும் வாழ்கின்ற, தமிழர்கட்குப் பிரதிநிதித்துவம் மிகுந்த அவசியமான ஒரு பிரதேசத்தில் பலரும் போட்டியிடுவது தவறான ஒரு செயல் என்பதை இந்தக் கட்சிகளும் குழுக்களும் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பது அவரது கருத்து.

போட்டியிட்டவர்கள் இருக்கட்டும். மக்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் ஏன் இப்படி நடந்து கொண்டார்கள்?

ஒருவேளை தமிழ்ப் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் இருந்த காலத்தில் அப்படி என்னத்தைத் தான் அதனால் சாதிக்க முடிந்தது என்று யோசித்து விட்டார்களோ?

இப்போது போட்டியிட்ட மற்றையவர்களை வேண்டுமானால் சுயநலத்துக்காகப் போட்டியிட்டதாகச் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் சுயநலமில்லாமல் பொதுநலத்திற்காக பாராளுமன்றம் சென்றதாகக் கூறும் த.வி.கூட்டணியினர் கூட வேறெதையும் செய்ததாகத் தெரியவில்லையே!

ஒருவேளை நமக்குத் தெரியாமல் அவர்கள் ஏதாவது செய்திருக்கக் கூடுமோ?

முன்னைநாள் த.வி.கூ. பா.உக்கள் தாங்கள் தமது கடந்த பாராளுமன்றக் காலத்தில் செய்த பொதுநல விடயங்கள் பற்றிய ஒரு பட்டியலை சரிநிகருக்கு அனுப்பி வைத்தால், மக்கள் இவ்வாறான தேர்தல் காலங்களில் தவறிழைக்காமல் இருப்பதற்கு சரிநிகராலும் உதவ முடியுமே!.

## வெட்கப்பட வேண்டாமோ!

மு.கா. தலைவர் அவர்களின் மறைவுக்குப்பின் கட்சிக்குள் தலைமைப் பூசல் வெடித்ததும் அதை சமாளிப்பதற்கு ஏற்ற விதத்தில் ஹக்கிம் அவர்களும், தலைவர் அஷ்ரஃப் அவர்களின் மனைவி பேரியல் அஷ்ரஃப் அவர்களும் சேர்ந்த கூட்டுத்தலைமை ஒன்று உருவாக்கப்பட்டது சகலருக்கும் தெரிந்த கதை.

அஷ்ரஃப் இருந்த காலத்தில் அவருக்கு அடுத்ததாக தலைமைக்கு வரக்கூடியவர்கள் என்ற குறிப்பிட்டுச் சொல்லும்படியான இரண்டாம் மட்ட தலைவர்களாக யாரும் இனங் காணப்பட்டிருக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவர் என்று கருதப்படும் ஹிஸ்புல்லா அவர்களும் கூட இரண்டாம் மட்டத் தலைவராக இருந்தவர் என்று சொல்ல முடியாது.

அவர் நடந்து முடிந்த தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அவருக்கு தேசியப்பட்டியல் பா.உ. பதவி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகூட அவரது ஆதரவாளர்களால் முன்வைக்கப்பட்டது.

ஆனால், மு.கா. அரசியல் பீடம் அந்த முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆக, அவருக்கு அடுத்ததாக தலைமைக்கு வரக்கூடிய யாரும் இருக்கவில்லை.

திடீரென நடந்த அரவது மரணம் காரணமாக இப்போது கூட்டுத்தலைமை உருவாகியிருக்கிறது.

இந்தக் கூட்டுத்தலைமை அஷ்ரஃப் அவர்கள் செயற்பட்ட வேகத்துடனும், திறமையுடனும் செயற்பட்டு கட்சியை வழிநடாத்திச் செல்லுமா என்ற கேள்விகள் ஐயங்களாக பலரிடமும் இருக்கின்றன.

அது அந்தக் கட்சியின் பிரச்சினை.

இந்தப் பத்தியில் இதுபற்றி எழுத நான் நினைத்ததற்கு முக்கிய காரணம், பேரியல் அஷ்ரஃப் அவர்களுக்கு பதவி வழங்கப்பட்டது சரியல்ல என்ற தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பீடாதிபதி ஒருவரால் தெரிவிக்கப்பட்ட கருத்தும் அதற்கு அவர் சொன்ன காரணமும்.

அவரது கருத்து பத்திரிகைகளில் செய்தியாக வெளியாகியிற்று. பீடாதிபதிக்கு, பேரியல் அஷ்ரஃப் அவர்களின் தெரிவு பொருத்தமற்றது என்று குறிப்பிட பூரண சுதந்திரம் உண்டு. ஆனால், பேரியல் ஒரு பெண் என்பதால், 'பெண்களால் முஸ்லிம் காங்கிரசுக்கு தலைமை தாங்க முடியாது' என்றும் 'பெண் தலைமை தான் இத்தனை பிரச்சினைக்கும் காரணம் என்றும் அவர் கூறுவதை சகித்துக் கொள்ள முடியாது.

பேரியல் அஷ்ரஃப் பொருத்தமற்றவர் என்பதற்கு அவர் ஒரு ஒரு பெண் என்ற காரணத்தை ஒரு பல்கலைகழகப் பீடாதிபதி மறுப்பது ஒருபுறம் சிரிப்புக்குரியது மட்டுமல்ல மறுபுறம் சுத்த அடாவடித்தனமானதும் கூட.

அடிப்படை மனித உரிமைகட்கு எதிரான இந்தக் கருத்தை துணிந்து கூறியதற்காக அவர் வெட்கப்பட வேண்டாமோ?

நன்றி - நூலகத்திட்டம்



இலங்கை
இனப்பிரச்சினைக்கான தீர்வு:

# சுவிஸ் கன்ரோன் அமைப்பு:

# ஒரு மறுதலிப்புக் குறிப்பு!

1.

இது சந்தைப் பொருளாதார விருப்புக்கள் இயக்க சக்தியாகத் திகழும் ஒரு காலகட்டம். இணைந்து வாழ்வதற்கான எல்லா வழிகளும் மக்களுக்கு மூடப்பட்ட நிலையில் பிரிந்து போவதற்கான வெளியுலக சுயநிர்ணய உரிமையைக் கொண்டு உலக நாடுகளை அங்கீகரிக்கக் கோரும் சட்டச் சார்பான செயற்பாடுகள் தற்போது பல நாடுகளில் வரலாறாகி வருவதை அவதானிக்க முடிகிறது.

பிரிட்டனால் தமது காலனித்துவ ஆட்சியின் வசதி கருதி தனித்தனியாக இயங்கி வந்த ராச்சியங்கள் 1833ல் பலவந்தமாக இணைக்கப்பட்டதிலிருந்து இன்று வரை அரசியல், பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றில் ஒடுக்குதல்களைச் சந்தித்து வரும் தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக போராடி வருகின்றனர்.

மிகக் கூர்மையடைந்துள்ள இப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு முயற்சி தீர்மானகரமான கட்டத்திற்கு வராத நிலையில் சில அரசியல் அவதானிகளாலும் ஆய்வாளர்களாலும் அரசியல் கட்சிகளாலும் பல அரசியல் மாதிரிகளும் அதிகாரப் பரவலாக்கல் முறைமைகளும் ஆலோசனைகளாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் சுவிற்சலாந்து நாட்டில் நிலவும் கன்ரோன் முறையும் ஒன்றாகும். இவ்வமைப்பு முறைமை தமிழ் மக்களின் போராட்ட நோக்கிற்கு ஒரு மாற்றீடாக அமையுமா?

2.

1847ல் ஏற்பட்ட மோசமான உள்நாட்டுக் கலவரங்களைத் தொடர்ந்து பல மாநிலங்கள் ஒன்று சேர்ந்து ஒரு மத்திய கூட்டாட்சி முறையொன்றை ஏற்படுத்தி தாம் பிரத்தியேகமாகக் மேற்கொண்டு வந்த ராணுவம், நாணயம், வெளியுறவு, போக்குவரத்து, தபால்சேவை போன்ற துறைகளை தேசியமயப்படுத்தின.

ஐரோப்பாவின் இதயமாக வர்ணிக்கப்படும் 41,000 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இங்கு 25 மாநிலங்கள் உள்ளன. இவற்றில் 19 முழுமையான மாநிலங்கள் எனவும் 6 அரை மாநிலங்கள் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 75 இலட்சம் மக்களில் 65% மானோர் ஜேர்மன் மொழியையும் 18% மானோர் பிரெஞ்சு மொழியையும் 10% மானோர் இத்தாலிய மொழியையும் 1% மானோர் சுவிஸ் ரோமானிய மொழியையும் 6% மானோர் ஏனைய மொழியையும் பேசுபவர்களாக உள்ளனர்.

ஜேர்மன், பிரெஞ்சு, இத்தாலி, சுவிஸ்ரோமன் ஆகிய நான்கு மொழிகளும் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சுவிஸ் நாட்டின் பழங்குடியினர் பேசும் சுவிஸ்ரோமன் தவிர்ந்த ஏனைய மூன்று மொழிகளும் அரச கரும மொழிகளாகும். அரசதுறை வேலை வாய்ப்புக்காக பழங்குடியினர் அரச மொழிகளில் ஒன்றை அவசியம் கற்க வேண்டும். மத்தியஅவை, மாநில அவை, பிரதேச அவை போன்றவற்றுக்கிடையே தேசிய வருமானம் முறையே 45% ற்கு மேல், 30% ற்கு மேல், 20% ற்கு மேல் என பகிர்வு செய்யப்படுகிறது.

3.

சுவிஸ் நாட்டின் அதிகாரப் பரவலாக்கம் வருமாறு:

தேசியப் பேரவையால் மட்டும் சட்டம் இயற்ற முடிந்த துறைகள்

அ) ஏற்றுமதி இறக்குமதி வரி
ஆ) பணப் பெறுமதி
இ) தொலைத் தொடர்பு
ஈ) இரும்புப் பாதை சேவை
உ) நீர்ப்போக்குவரத்து

மாநிலங்களால் மட்டும் சட்டம் இயற்ற முடிந்த துறைகள்

அ) பொலிஸ்
ஆ) வறுமையொழிப்புப் பணி
இ) வீடமைப்பு
ஈ) சமயங்கள்

தேசியப் பேரவையும் மாநிலங்களும் இணைந்து சட்டம் இயற்ற முடிந்த துறைகள்

அ) உள்நாட்டு வரி
ஆ) நெடுஞ்சாலை
இ) நீர்ப்பாசனம்
ஈ) விவசாயம்
உ) வேட்டையும் மீன்பிடித்தொழிலும்
ஊ) மருத்துவக் காப்புறுதி
எ) கல்வி

தேசியப் பேரவை இயற்றிய சட்டங்களில் மாநிலங்களால் மாற்றம் செய்யப்பட முடியாத துறைகள்

அ) நியமங்கள்
ஆ) போக்குவரத்து
இ) இராணுவம்
ஈ) தொழிற்சட்டங்கள்
உ) ஓய்வூதியமும் சொத்துக்களும்
ஊ) பண்பாட்டலுவல்கள்
எ) குற்றத்தடுப்பு

4.

கூட்டாட்சிப் பேரவை (Bundesbersummlung), மாநில அவை (Kantonrat), பிரதேச சபை (Geminderat), ஆகிய அதிகார பீடங்களைக் கொண்ட சுவிஸ் நாட்டில் ஆகக் கூடுதலான அதிகாரபீடம் கூட்டாட்சிப் பேரவையாகும். கூட்டாட்சிப் பேரவையானது தேசிய அவை (Nationalrat), கூட்டாட்சி அவை (Bundesrat), மேல்அவை (Standesrat) போன்ற மூன்று உபபிரிவுகளைக் கொண்டது. நான்காண்டுக்கொரு முறை தேர்தல் நடைபெறும் இங்கு விகிதாசாரத் தேர்தல் முறை பின்பற்றப்படுவதால் கட்சிக்கும் கட்சி நியமிக்கும் வேட்பாளருக்குமென தலா ஒவ்வோர் வாக்குகள் அளிக்கப்படுகின்றன.

> இன்று வரையில் எந்தவொரு குறைந்தபட்ச தீர்வு முயற்சியும் சட்டம் சார்ந்து பிரகடனப்படுத்தப்படவில்லை. இவ்வாறானதொரு தேசத்திற்கு சுவிஸ் கன்ரோன் முறை எவ்விதம் பொருந்தும் என்ற கேள்வி எழுந்தேயாக வேண்டும்.

கூட்டாட்சிப் பேரவையானது 244 பிரதிநிதிகளைக் கொண்டது இவற்றில் 200 பிரதிநிதிகள் தேசிய அவை உறுப்பினர்களாக மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். எஞ்சிய 44 பிரதிநிதிகள் மேலவை உறுப்பினர்களாக மாநிலஅவையால் நியமிக்கப்படுகின்றனர். தேசிய அவையில் அங்கம் வகிக்கும் 200 உறுப்பினர்களில் 7 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு உருவாக்கப்படுவது தான் கூட்டாட்சி அவையாகும். மத்திய நிர்வாகிகளான இவ்வெழுவரும் உள்நாட்டு விவகாரம், வெளி விவகாரம், பாதுகாப்பு, பொதுசன பொருளாதாரம், பொலிசும் நீதியும் - சக்தியும் போக்குவரத்தும், தொடர்பு சாதனங்கள் போன்ற துறைகளுக்குப் பிரத்தியேகமான பொறுப்பாளர்களாக விளங்குகின்றனர். ஒவ்வோர் ஆண்டிலும் இவ்வெழுவரில் ஒருவர் சுவிஸ் நாட்டின் தலைவராக (பிரதமராக) தெரிவு செய்யப்படுவர். தலைவருக்கென ஒரு பிரத்தியேகத் தேர்தல் இங்கு கிடையாது.

ஒதுக்கப்பட்ட துறைரீதியான வரையறைகளுக்குட்பட்டு தனித்தனியாகவும் கூட்டாகவும், தீர்மானங்களையும், சட்டங்களையும் இயற்றி நிறைவேற்றும் ஆற்றல் கூட்டாட்சிப் பேரவைக்கும், மாநில அவைக்கும், பிரதேச சபைக்கும் உள்ளன. தேசிய ரீதியில் அவசியமான சட்டங்கள் கூட்டாட்சி அவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு கூட்டாட்சிப் பேரவையில் நிறைவேற்றப்படுகின்றன. இவை மாநில மட்டத்தில் அமுல்படுத்தப்படுவதாயின் மாநிலஅவை அங்கீகாரம் வழங்க வேண்டும். மாநில அவைக்கென தனித்தொதுக்கப்பட்ட துறைகள் தவிர ஏனைய துறைகள் சார்ந்த ஒரு தீர்மானம் இரு அவைகளின் இணக்கமின்றி சட்டமாக்கப்பட முடியாது. அவ்வாறு நிறைவேறாத தீர்மானங்கள், தேசிய ரீதியானவை தேசிய மட்டத்திலும், மாநில ரீதியானவை மாநில மட்டத்திலும் அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்படுகின்றது. நிறைவேற்றப்படும் சட்டங்களில் மக்கள் அதிருப்தியுறுவார்களாயின் தேசியரீதியிலானவைக்கு ஒரு லட்சம் கையெழுத்துடன் மனுச் செய்யப்படுமாயின் சர்வஜன வாக்கெடுப் பிற்கு விடப்படும். மாநில ரீதியிலானவைக்கு ஐம்பதாயிரம் கையெழுத்துடன் கூடிய மனு போதுமானதாகும்.

5.

கன்ரோன் முறையில் மாநிலங்களுக்கான அதிகாரங்கள் மிகக் குறைவாகவே வரையறை செய்யப்பட்டுள்ளதையும் இணைந்து சட்டமியற்றும் அதிகாரங்களில் தேசிய அவையின் தலையீடு அதிகமாக இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. அதுமட்டுமல்லாது பூர்வீகக் குடிகளின் மொழி மீதான புறக்கணிப்பு, மாநிலங்களுக்கான சம அந்தஸ்து, தேசிய வருமானப் பகிர்வு போன்றவற்றிலும் ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது.

தாமாக இணைந்து கொண்டு, தமக்குள் மொழிப்பாகுபாடற்று, வேறுபட்ட தேசிய வருமானப் பகிர்வில் திருப்தியுற்று, பிற நாடுகளின் பண்பாட்டு வீச்சுக்குட்பட்டு சிதைவுறாது ஒரு கூட்டாட்சித் தேசமாக நிலவும் சுவிஸ் நாட்டின் பொதுத்தன்மைக்கும் வலிந்து சேர்க்கப்பட்ட இலங்கையின் பொதுத்தன்மைக்கும் அதிக பட்ச பொருத்தமின்மை காணப்படுகின்றது.

ஒரு தேசிய இனம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் தனது அரசியல் பொருளாதார பண்பாட்டு அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் ஒரு தனித் தேசத்தைக் கோரிக்கையாகவும் முன்வைத்துப் போராடி வரும் சூழலையும், மதம் சார்ந்து ஆழ வேரூன்றியிருக்கும் அரசு பிற இனங்களின் உரிமை மறுப்பு, இராணுவவாதம், பொருளாதார பண்பாட்டு ரீதியான புறக்கணிப்பு என்பவற்றில் முனைப்பாக இருப்பதையுமே இலங்கையில் காணக் கூடியதாகவுள்ளது. அத்துடன் இன்று வரையில் எந்தவொரு குறைந்தபட்ச தீர்வு முயற்சியும் சட்டம் சார்ந்து பிரகடனப்படுத்தப்படவுமில்லை. இவ்வாறானதொரு தேசத்திற்கு சுவிஸ் கன்ரோன் முறை எவ்விதம் பொருந்தும் என்ற கேள்வி எழுந்தேயாக வேண்டும்.

மிகக்குறிப்பாக அதிகபட்ச ஜனநாயகமும் கூட்டிணைப்பாட்சி முறையும் நிலவுவதாகக் கருதப்படும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் கூட மாகாணங்களின் அதிகாரம் மைய அரசை நோக்கி குவிந்து வருவதாக நிரூபிக்கப்பட்டு வரும் தற்காலத்தில் (அவசியமாயின் இதுபற்றி பிறிதொரு மறுதலிப்புக் குறிப்பில் பேசலாம்) அனைத்து அம்சங்களிலும் ஒடுக்குதல்களுக்குள்ளாகி தன்னைப் பாதுகாக்கப் போராடிவரும் ஒரு தேசிய இனத்திற்குத் தீர்வாக சுவிஸ் தன்ரோன் அரசியல் முறைமையை சிபார்சு செய்வது எவ்விதத்திலும் பொருத்தமாகாது.

## கேட்கக் கூடாத கேள்வி

அண்மையில் யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தில் தொண்டர்களாகப் பணி புரியும் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பல வருடங்களாகத் தொண்டர்களாக கடமையாற்றி வரும் இவர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. ஆனால், கொழும்பிலிருந்து சுகாதாரத் திணைக்கள சிற்றூழியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைக்காக பெயர்ப்பட்டியல் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

இந்தப் பட்டியலில் ஏற்கெனவே கடமையிலிருந்தவர்களில் (தொண்டர்களாகப் பணியாற்றியவர்கள்) ஒருவரின் பெயர்கூட இடம் பெறவில்லை. இதன்காரணமாகவே சுகாதாரத் தொண்டர்கள் யாழ். மாவட்ட சுகாதாரத் பணிமனை முன்பாக மறியல் போராட்டம் நடத்தினர்.

இவர்களின் மறியல் போரையடுத்து யாழ். மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் வடகிழக்கு மாகாண சுகாதாரப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டதையடுத்து நேர்முகப்பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

புதிய பட்டியல் தயாரித்தவர்கள் யார் என்பது தேவையில்லாத கேள்வி.

சமுர்த்தி தொண்டராசிரியர், வங்கி நியமனங்களை வழங்கியவர்களே புதிய பட்டியலையும் தயாரித்துள்ளனர்.

## உண்மையான உளறல்!

சிலர் சந்தர்ப்பம் தெரியாமல் சில வேளைகளில் சிலவற்றை உளறிவிடுவதுண்டு.

இந்த வகையில் கடந்த வாரம் எனக்கு ஒரு சுவையான தகவல் கிடைத்தது. சண்டிலிப்பாய்க்குச் சென்று விட்டு வரும் வழியில் மானிப்பாயிலுள்ள குலம் கிறீம் ஹவுஸில் தேனீர் குடிப்பதற்காக சைக்கிளை நிறுத்தி விட்டு உள்ளே சென்றேன்.

உள்ளே சென்று மேசையில் அமர்ந்ததும் எனக்கு முன்னால் இருந்தவர் உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறது என்றார். நானும் உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறது என்றேன் பதிலுக்கு. அத்துடன் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்ற கேள்வியையும் போட்டேன்.

'நான் பீப்பள்ஸ் பாங்க்: இப்ப எடுபட்ட புது பச்' என்றார். முன்னாலிருந்தவர் நாங்கள் ஸ்ரீதர் தியேட்டரில் சந்தித்த ஞாபகம் என்றார் தொடர்ந்து. சிலவேளை சந்தித்திருப்பீர்கள் என்றேன் நானும்.

'இந்த முறை அவங்களுக்கு எக்கச்சக்கமாகச் சேந்திருக்கும் என்ன' என்றார். -மேசைக்குக் கீழ் காசு எண்ணுவது போல் பாவனை பண்ணிக்கொண்டு.

வங்கி நியமனத்திற்கு ஒன்று அல்லது ஒன்றரை வரை லகரங்களில் பெறப்பட்டதாகக் கேள்வி. தமக்கு வேண்டியவர்களுக்கு எதுவித கட்டணமுமின்றியும் நியமனம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

- எழுவான்

நன்றி - நூலகத்திட்டம்



விவேகி

திருகோணமலை தமிழர்களிடமிருந்து பறிபோனது வெறும் சம்பவம் அல்ல. ஒரு வரலாற்று நிகழ்வு. இன்னும் ஆறு வருடங்களுக்கு இந்த ஆட்சி அசையாமல் இருக்குமானால், 2006ல் வரப்போகிற தேர்தல் மூலம் திருகோணமலையைக் காப்பாற்றி விடலாம் என்று யாராவது நினைத்தால் அது வெறும் கனவாகவே போய்விடும். அந்த அளவுக்கு மாவட்டம் கபளீகரம் செய்யப்பட்டு விடும். அதற்கான ஆணையை திருகோணமலை மாவட்ட மக்களே வழங்கியிருக்கிறார்கள்.

திருகோணமலை பறிபோனதற்கு நான்கு தரப்புக் காரணங்களை முன்வைக்கலாம். அவையாவன, தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதி மேதாவித்தனமும் அசமந்த அரசியல் போக்கும், தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனம் பிழையானால் போதும் என்று கங்கணம் கட்டிக் களத்தில் இறங்கிய ஏனைய தமிழ்க்கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும், புத்திஜீவிகளும் என்று தங்களைத் தாங்களே அழைத்துக் கொண்டு குட்டையைக் கலக்கி மீன்பிடித்து இலகுவாகப் புகழ்பெற நினைத்த சில தமிழர்கள், நாடு எக்கேடு கெட்டாலென்ன நாம் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கின்ற அரசியல் நோக்கற்ற தமிழ் வாக்காளர்கள்.

த.வி.கூட்டணியை எடுத்துக் கொண்டால் அவர்களது அரசியல் எப்போதும் அதிமேதாவித் தனமாகவே இருந்திருக்கிறது. தேர்தல் காலங்களில் கூடுவதும் மக்களுக்கு உருவேற்றி அவர்கள் வாக்குகளைக் கொள்ளையடித்து விட்டு, அடுத்த தேர்தல் வரை பாராளுமன்ற உறுப்பினரும் அவரைச் சேர்ந்த பிழைக்கின்ற கும்பல்களுமே தமிழர்கள் என்ற பாணியில் செயல்படுவதும், மக்களின் பிரச்சினைகளில் அக்கறை எடுத்துக் கொள்ளாமல் கொழும்பே கதி என்று கிடப்பதும், இவர்களது வழமையாகி விட்டது. தும்புத்தடியைப் போட்டாலும், மக்கள் தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்ற மமதை இவர்களிடம் நிறையவே உண்டு. தந்தை செல்வா என்று உச்சரிப்பதன் மூலம் தங்கள் தவறுகளை மறைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையும் இவர்களிடம் காணப்படுகிறது.

1994ல் தேர்தலில் கிடைத்த ஒரே ஆசனம் இவர்களிடையே பிரச்சினையைத் தோற்றுவித்தது. இதனால் கட்சிக் கிளைக்கும், பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரைக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது. இந்த விரிசலைப் பயன்படுத்தி தங்கத்துரையுடன் ஒட்டிக் கொண்டிருந்த சிலர் அமோகமாக பிழைத்துக் கொண்டார்கள். கோள் சொல்லி வாழலாம் என்று சிலர் வாழ்ந்து காட்டினார்கள்.

திருகோணமலை கிளையினர் தங்கத்துரையை பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு மக்களின் பிரச்சினைகளைத் தவிர்த்து வந்ததோடு, தங்கத்துரை மீது பழியைப் போட்டுக் கொண்டார்கள். இது கட்சியிலிருந்து மக்கள் விலகிச் செல்லத் தான் உதவியது.

தங்கத்துரையைச் சுற்றியிருந்தவர்களின் நடத்தை காரணமாக தங்கத்துரையின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டது. ஆளையால் பழி சொன்னார்கள். பின்னர் சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினரானார்.

அன்றாட பிரச்சினைகள் காரணமாக சம்பந்தரைத் தேடி வர முற்பட்ட மக்களுக்கு பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்குப் பதிலாக அரசியல் தத்துவம், கொள்கைத் தீவிரம் என்பவை குறித்தே சம்பந்தனார் பேசினார். சின்ன சின்ன பிரச்சினைகளுக்கெல்லாம் பைலைத் தூக்கிக் கொண்டு அமைச்சர்களிடம் போக நான் தயாரில்லை. தீர்வுத்திட்டம் எழுதுகிறேன். அது சரி வந்தால் எல்லாப் பிரச்சினைகளும், தீர்ந்து விடும் என்று அவர் சொன்ன பதில், மக்களிடம் விரக்தியைத் தோன்றுவித்தது.

காலப் போக்கில் சம்பந்தர் கொழும்பில் இருக்கப் போய் கொண்டதற்கு கட்சிக் கிளையின் ஒரு சில உறுப்பினர்களே காரணமாக இருந்தார்கள். சம்பந்தருக்கும் மக்களுக்கும் இடையில் திட்டமிட்டு இவர்களால் உருவாக்கப்பட்ட விரிசலை இவர்கள் தாங்கள் பிழைத்துக் கொள்வதற்கு பயன்படுத்தினார்கள். வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் இவர்களால் செய்யப்பட்ட மோசடியை சம்பந்தனால் கூட தட்டிக் கேட்க முடியாத அளவுக்கு இவர்கள் கை ஓங்கிக் காணப்பட்டது.

சம்பந்தனை நேரில் சந்திக்க முடியாமை, அண்டிப் பிழைக்கும் கும்பலின் அடாவடித்தனம் ஆகியவற்றால் மக்கள் வெறுப்படைந்திருந்த போது தான் தேர்தல் வந்தது. கட்சியிலிலுள்ள ஒரு நல்ல முகத்தைக் காட்டியாவது மக்களின் கோபத்தை தணிக்கலாம் என்று கட்சியின் கிளை முடிவெடுத்த போது சம்பந்தர் தனக்குரிய தலையாட்டி பொம்மையாக செயல்பட வைக்க ஒரு சட்டத்தரணியை வெளியில் இருந்து இறக்குமதி செய்தார். இது கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியது.

## இனவாதிகளிடம் பறிபோன:
# தமிழர் தாயகத்தின் தலைநகரம் !



உண்மையான தொண்டர்கள் மனமுடைந்து காணப்பட்டார்கள். சம்பந்தனின் தனி விருப்பத்தின் பேரில் இறக்குமதி செய்யப்பட்ட சட்டத்தரணி "சட்டதரணி" என்ற வகையில் கூட மக்களால் அறியப்படாதவர்.

இதனால், நல்ல உறுப்பினர்களிடையே ஏற்பட்ட மனமுறிவை - வேதனையை - தமிழ் வாக்குகளைப் பிரிக்க முன்வந்த சூரியமூர்த்தி பாக்கியதுரை, சுபாசினி போன்றோரும் ஆயுதக் குழுக்களும் தங்களுக்குச் சார்பாக பயன்படுத்த முனைந்தனர். வெறும் 300 வாக்குகளைப் பெற்று விபத்தாக நகராட்சி மன்றத்தின் தலைவராக வந்த சூரியமூர்த்தி தன்னிடம் 32 ஆயிரம் வாக்குகள் இருப்பதாக பீற்றித் திரிந்தார். பாக்கியதுரையோ தங்கத்துரையின் அண்ணர் நானே வாக்குகள் விழவேண்டியது எனக்கே என்றும் கனைத்தும் கொண்டார். மாமனித பட்டத்தை விற்பனைப் பொருளாக்கி வென்று விடலாம் என்று துடித்தார். இந்த மூன்று சாராரும் அதிகமாவே கற்பனை பண்ணிக் கொண்டார்கள். வரதராஜப்பெருமாள் அணி அரசியல் இருப்புக்காக தேர்தலில் நின்றது.

தாங்கள் வெல்லப் போவதில்லை. கணிசமான வாக்குகளைப் பெறலாம் என்ற ஈ.பி.டி.பியும், ரெலோவும் ஏமாந்தன. இவர்களைத் தவிர பெரும்பான்மைக் கட்சிகளின் கைக் கூலிகளாக சிங்களத் தலைமைகளின் புகழ் கூறிக் கொண்டு தமிழர்களை விலைபேசிக் கொண்டு ஐ.தே.க., பொ.ஐ.மு., பிரஜைகள் முன்னணி ஆகியவற்றின் தமிழ் வேட்பாளர்கள் வேறு.

இவர்களது போட்டியைக் கண்டு ஒரு விழிப்புக்குழு உருவாக்கப்பட்டது. ஒரு காலத்திலும் தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களித்திராத "புத்திஜீவிகள்" இதில் ஊடுருவிக் கொண்டார்கள். உண்ணாவிரதம், கடையடைப்பு, ஹர்த்தால் என்று இவர்கள் பண்ணிய ரகளையில் தமிழர்கள் பிரதிநிதித்துவம் என்ற கோஷம் முன்வைக்கப்பட்ட போதும் மனக்கிடக்கை கூட்டணியினரை பழிவாங்குவதாகவே அமைந்திருந்தன.

த.வி.கூ.வுக்கு எதிராக நியாயமாகவும், நியாயமற்றதாகவும் விமர்சனங்கள் தூள் கிளப்பின. அம்பாறை தமிழர் மகா சபையை மானசீகமாகக் கொண்டு 78,000 தமிழ் வாக்காளர் வாழும் திருமலை மாவட்டத்தில் தமிழ் மகாசபை 73 பேர் தானும் இல்லாது ஆரம்பிக்கப்பட்டு விளம்பரங்கள், பரபரப்பு மூலம் தமிழரின் குரல் போல தோற்றமளிக்க முற்பட்டன.

ஒற்றுமைப் பட்டியலில் கூட்டணி இணைய மறுத்து விட்டது. ஏனையோர் பட்டியல் போட்டு தோற்றுப் போனார்கள். கூட்டணியைக் குறை கூறியவர்களால் தாங்கள் ஓரணியில் திரள முடியாமல் போனது தமிழர் பிரதிநிதித்துவத்தை விட தாம் பிரதிநிதிகளாக வேண்டுமென்ற வாதமே மேலோங்கியதைக் காட்டியது. பட்டியல் தோற்றதும், தமிழ் மகாசபை சார்பில் போட்டியிட முன்வந்த ஒரு வேட்பாளர் மனமுடைந்து போனார்.



முயற்சி தோற்றதற்காகவல்ல! சாதிய அடிப்படையில் அமைந்த பிரச்சாரம் செய்து, விருப்பு வாக்குகளால் தான் பாராளுமன்ற உறுப்பினராகி விடலாம் என்று கண்ட கனவு சிதைந்து போனதால்.

உடனே அவர் செய்த வேலை தன் சாதிக்காரரைக் கொண்ட ஒரு பட்டியல் தயாரித்து கச்சேரிக்குப் போய் விண்ணப்பப் பத்திரத்தை சமர்பித்தது தான். நல்லவேளை அவரின் திறமைக் குறைவு காரணமாக அப்பட்டியல் நிராகரிக்கப்பட்டதால் ஒரு சுயேட்சைக் குழுவின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

தன் முயற்சி தோற்றதன் பின்னால் எவ்வித பயமும் இன்றி தமிழர் மகா சபையால் தாக்குதல் தொடுக்கக்கூடிய ஒரே அமைப்பு த.வி.கூ.ஆகவே இருந்தது. தாராளமாகவே சீறினார்கள். சீறுவது தான் அரசியல் என்று சிலரையும் சீறத்தூண்டினார்கள். (தமிழர் மகா சபையின் கோரிக்கையும் வெற்றி பெற்றிருந்தால் இன்னொரு அம்பாறை, திருகோணமலையிலும் தோன்றியிருக்கும் என்பது வேறு விடயம்)

தமிழர்களின் அரசியல் அதிபுத்திசாலித்தனங்களைக் களைய சிங்களக் கட்சிகள் திட்டமிட்டு செயற்பட்டிருக்கின்றன. பணமும், மதுவும் தாராளமாக தமிழ் பகுதிகளில் இறைக்கப்பட்டன. விசமப் பிரச்சாரங்கள் தமிழ்க் கட்சிகளுக்கு எதிராக முடுக்கி விடப்பட்டன. கிராமத்து தமிழர்கள் மனம் மாற்றப்பட்டனர். ஒரு கிராமம் ஆக 18 ஆயிரம் ரூபாய்க்கு விலைப்பட்டிருக்கிறது என்ற நிலை கூட காணப்பட்டது. படித்தவர்கள் என்று கிராமப்புறங்களில் காணப்பட்டவர்கள் விலைகொடுத்து வாங்கப்பட்டார்கள். கிராமத்தவர்கள் அவர்களிடம் விலை போனார்கள். சுமார் 20ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் என்ன காரணத்தினாலோ சிங்களக் கட்சிகளுக்கே வாக்களித்திருக்கிறார்கள். தமிழ்க்கட்சிகளுக்கு வாக்களித்த சுமார் 28 ஆயிரம் தமிழர்கள் பிரிந்து நின்றதால் பலத்தை இழந்தார்கள். சுமார் 25 ஆயிரம் தமிழர்கள் வாக்களிப்பில் விரும்பியோ விரும்பாமலோ கலந்து கொள்ளவில்லை.

ஒற்றுமையின்மை, அதிமேதாவித்தனம், எல்லாம் தெரியும் என்ற மமதையான கருத்துக்கள் எல்லாவற்றுக்குமான மொத்த விலையாக திருகோணமலை தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டு விட்டது. உண்மையான தமிழர்களின் குரல் நசுக்கப்பட்டு விட்டது.

அண்டிப் பிழைக்கலாம், சேர்ந்து வாழலாம். நக்கியேனும் உயிர் பிழைக்கலாம் என்று திருகோணமலை தமிழர்களே நினைத்த பிறகு யார் என்ன சொல்ல முடியும். ஒன்று மட்டும் தெரிகிறது. தனிநாட்டுத் தீர்மானம், தாயகத்துக்கான போராட்டம் என்பவை இப்போது திருகோணமலை தமிழர்களுக்கு சம்பந்தமில்லாத ஒன்றாகி விட்டதோ?

நன்றி - நூலகத்திட்டம்



# தலைமை தரப்போவது யார்?

– நாசமறுப்பான்


**புலிகளுக்கு இந்த வெற்றிடத்தைப் புரிந்துகொண்டு அரசியல் தலைமைத்துவத்தை எடுத்துக் கொள்ள நிறைய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அவர்களுக்கு அரசியல் தளத்தில் இயங்குவதற்கான அக்கறையும், தெளிவும் முக்கியத்துவமும் புரிந்ததாக தெரியவில்லை. ஆயுதங்கள், ஆயுதப்போராட்டம், பாராளுமன்றம் எல்லாமே முக்கியம் தான். ஆனால், எந்தக் காலகட்டத்தில் எவையெவை எவ்வளவுக்கு முக்கியமானவை என்று புரிந்து கொள்ளாதவரை அரசியல் வரலாற்றை உருவாக்குபவர்களாக எந்தத் தலைமையும் ஆகிவிட முடியாது!**

புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட முதல் நாள் நிகழ்ச்சியே கொழும்பு நகர மண்டபத்துக்கருகே வெடித்த தற்கொலைக் குண்டுதாரியின் குண்டு வெடிப்புடன் தான் ஆரம்பமாயிற்று. பொலிசாரின் கண்களில் சிக்கி தப்பிச் செல்ல முயன்ற குண்டுதாரியின் அந்தக் குண்டு பாராளுமன்றத்துக்குச் செல்லவிருந்த யாராவது ஒரு முக்கியஸ்தரைக் குறி வைத்ததாக இருக்கவேண்டுமென்ற சந்தேகம் இயல்பான ஒரு சந்தேகமே. சந்தேகத்திற்குரியவர் யாராக இருக்கலாம் என்ற கேள்வியை ஒவ்வொருவரும் தமது அறிவுக்கும், ஆய்வுக்கும் எட்டிய வகையில் ஊகித்து வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இம்முறை அமைந்திருக்கும் பொ.ஐ.மு-வின் அரசாங்கம் கடந்த ஆறு வருட காலமாக ஆட்சியிலிருந்த பொ.ஐ.மு அரசாங்கத்தைவிட விஷேச குணாம்சங்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. ஒன்று அதன் யுத்த



நடவடிக்கையை தீவிரப்படுத்தும் கருத்துக்களை மேலும் பலப்படுத்தும் சக்திகள் இப்பாராளுமன்றத்தில் பலம் பெற்றிருக்கிறார்கள். சிங்களப் பேரினவாத சக்திகளின் கை ஓங்கிய ஒரு பாராளுமன்றமாக இது உருவாகி இருக்கிறது. பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இந்த இனவாத யுத்த அணிக்குப் பொருத்தமான தலைவராக அமைந்திருக்கிறார். ஊழல், மோசடி, படுகொலை என்பவற்றுக்குப் பேர் போனவர்கள் இந்த அரசாங்கத்தில் பங்காளிகளாக உள்ளனர். இவையெல்லாவற்றையும் விட, ஒரு தமிழ்க்கட்சி, அரசாங்கத்தில் பங்காளியாக வந்துள்ளது.



அரசாங்கம் பதவியேற்ற ஒரு சில நாட்களுக்குள் எதிர்க்கட்சிக்கும் அரசுக்கும் இடையில் வரலாறு காணாத ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்று உருவாகியுள்ளதாக அரச சார்பு பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியிட்டிருந்தன. இந்த ஒப்பந்தம் என்னென்ன அடிப்படைகளை கொண்டது என்பது இன்னமும் பூணமாக வெளிப்படுத்தப்படவில்லை. எதிர்க்கட்சி தரப்பினர் இதைப் பற்றி சொன்னதை விட அரசாங்கம் அதிகமாகப் பேசுவதைப் பார்த்தால் ஒப்பந்தத்தின் நோக்கம் எதிர்கட்சிக்கு அரசியல் நெருக்கடியை கொடுப்பதா என்ற சந்தேகம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

எப்படியாயினும், இந்தப் பாராளுமன்றம் பதவிக்கு வந்தவுடன் வடக்கிலும், கிழக்கிலுமாக நடந்த இரு தாக்குதல்கள், அதற்கு எதிர்காலம் மிகவும் நெருக்கடியானதாக அமையப் போகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

நாகர்கோவிலிலும், திருமலையிலும் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதல்கள் அரசாங்கத்தின் இராணுவ பலத்திற்கு பெரும் சோதனை எதிர்நோக்கி இருப்பதை வெளிப்படுத்துவதாக அமைந்தன. இந்த இரண்டு தாக்குதலிலும் அரச படைத்தரப்பு இழந்த இழப்பு விபரங்கள் வெளிப்படையாக இன்னமும் அறிவிக்கப்படாவிட்டாலும், நடந்ததை ஊகித்துக் கொள்வது ஒன்றும் கஷ்டமானது அல்ல.

யுத்தத்தைத் தொடர்வது இனவாதத்தை மேலும் வலுவூட்டுவது என்ற அரசாங்கத்தின் தீவிரம் எதிர்வரப் போகும் ஆட்சிக் காலத்துள் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு ஆசுவாசம் கொள்வதற்கான வாய்ப்புக்களைத் தரப்போவதில்லை என்பதையே வலியுறுத்தி நிற்கின்றன.

கடந்த சரிநிகர் இதழின் ஆசிரியர் தலையங்கம் தமிழ் பா.உக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று சில கருத்துக்களை முன் வைத்திருந்தது. ஆனால், தமிழ்க்கட்சிகளின் அரசியல் அபிலாஷைகள் வழமை போல மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவையாக அமையமாட்டா என்றே தோன்றுகிறது.

வடக்கில் பத்திரிகையாளரும், செய்தியாளருமான நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட விடயம் தொடர்பாக தமிழ் கட்சிகளின் அக்கறையும் செயற்பாடும் போதுமானதாக இருக்கவில்லை. பத்திரிகையாளர்களின் எதிர்ப்பு நடவடிக்கைக்கு தமிழ் கட்சிகள் ஆதரவு தந்த போதும், அவர்களின் செயற்பாடுகள் போதுமானதாக இல்லை.

ஆயுதம் தாங்கிய தமிழ்க் கட்சிகளில் ஒன்று தான் இந்தப் படுகொலையை செய்திருக்க வேண்டும் என்று கிட்டதட்ட அனைத்துக் கட்சிகளும் பத்திரிகையாளர்களுடன் சேர்ந்து சுட்டிக் காட்டியுள்ளன. பத்திரிகையாளர் நிமலராஜன் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளையும், தகவல்களையும் உலகம் முழுவதும் பரவக் காரணமாக அமைந்தவர். அங்கு தேர்தலில் ஈடுபட்டு அடாவடித்தனம் செய்தது பற்றிய அறிக்கைகள் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தி வந்துள்ளன. அவர்கள் செய்த அநியாயங்கள் பற்றிய தகவல்கள் வெளியே வராமல் தடுப்பதற்கு அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. நிமலராஜனைக் கொலை செய்ததன் மூலம் அதை சாதிக்க முடியும் என்று நம்பியுள்ளார்கள் என்று இதற்கான காரணத்தை அவர்கள் கூறுகின்றார்கள். அதேவேளை இராணுவமோ புலிகளோ செய்திருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.


பாராளுமன்ற அமைச்சர் பதவியும், அதிகாரமும் அடியாட்களும் கிடைத்துவிட்டால் எதையும் செய்யலாம் என்ற மனோபாவம் எல்லாக் கட்சிகளதும் மனதில் இருக்கிற ஒன்று தான். ஆனால் ஈ.பி.டி.பிக்கு மட்டும் தான் அரசாங்கத்துடன் சேர்ந்து நின்று செயற்படும் வாய்ப்பு கிடைத்தது. த.வி.கூவோ, ரெலோவோ அரசாங்கத்துடன் சேர்வதற்கு துணியவில்லை. அரசாங்கத்தின் இராணுவத்திற்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து பணம் பெற்று தனது உறுப்பினர்களை பராமரித்தும், அரச படைகளுடன் சேர்ந்து செயற்படவும், செய்த ரெலோ இயக்கத்தின் ஆயுதங்கள் பிடுங்கப்பட்டுள்ளன. அவசரகாலச் சட்டத்திற்கு எதிராகப் பாராளுமன்றத்தில் வாக்களித்தது இதற்கு ஒரு காரணம் என்று பேசப்படுகிறது. இந்த இயக்கம் மட்டக்களப்பில் செய்த அட்டகாசங்கள் மற்றெந்த இயக்கத்தின் செயற்பாடுகட்கும் சற்றும் குறைந்ததல்ல. ஆயினும், 'மக்களது தெரிவு' அவர்களுக்கு சாதகமாகவே அமைந்திருக்கிறது. ஒப்பீட்டளவில் மற்றைய இயக்கங்களை விடவும் ரெலோவின் அநியாயங்களை குறைவு என்று மக்கள் கருதி இருக்கக்கூடும்.

தம்மிடையேயான சண்டை, தமது தொகுதிகட்கான ஒதுக்கீடு, தம்மையும், தமது ஆட்களையும் பாதுகாப்பதற்கான பணத் தேவை போன்ற விடயங்களில் பிற தமிழ்க்கட்சிகள் மண்டை உடைத்துக் கொண்டிருக்கையில் அரசாங்கம் தனது செயலில் இறங்கி விட்டிருக்கிறது.

உண்மையில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் இன்றைய நிலை மிகவும் பலவீனமானதாக இருக்கிறது. தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக, மக்களின் ஆதரவும், செல்-



வாக்கும் பெற்ற, அவர்களது அபிலாஷைகளை பிரதிபலிக்கிற ஒரு அரசியல் தலைமைத்துவத்தை இந்தக் கட்சிகள் எவையும் வழங்கக்கூடியதாக தம்மை வெளிப்படுத்தவில்லை. மறுபுறத்தில் முஸ்லிம் காங்கிரசினுள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலை முஸ்லிம் மக்களின் எதிர்காலம் குறித்தும் கேள்விகளை உருவாக்கி விட்டுள்ளது. அமைச்சர் பதவியும், அதிகாரமும் இல்லாது போனால், இன்றைய தலைமையினால், ஒரு முஸ்லிம் காங்கிரசை கொண்டிழுக்க முடியும் என்பதற்கு உடனடி ஆதாரங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பதவி இருக்கும் வரை அவர்களால் இந்தக் கட்சியை கொண்டிழுத்துக் கொள்ள முடியக் கூடும். அவ்வாறே, மலையகத்திலும் பேரன் தொண்டமானினதும் அடியாட்களதும் சண்டித்தனமே அரசியல் தலைமைத்துவமாக இருக்கிறது. அவர்களாலும் முழு மலையகத்திற்கும் வழிகாட்டும் ஒரு சக்தியாக தம்மை வளர்த்துக்கொள்ள முடியும் என்று நம்ப முடியவில்லை.



இலங்கை அரசாங்கத்தின் பாராளுமன்ற அரசியலில் பேரம் பேசியோ, சண்டையிட்டோ, கூட்டுச்சேர்ந்தோ ஒரு சமூகத்தின் பாதுகாப்பாகவும், பிரதிநிதித்துவமாகவும் இருந்த தலைமைத்துவ சக்திகள் - அவை சாதித்தவை குறித்து விமர்சனங்கள் இருப்பினும் - இன்று இல்லாது போய் விட்டன. இருப்பவர்கட்கு அத்தகைய முழுமையான சிந்தனைத் தரிசனம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆக. எதிர்காலம், சிறுபான்மை இன மக்களின் எதிர்காலம் அச்சம் தருகிற ஒரு எதிர் காலமாகவே அமையப் போகிறது என்பதில் ஐயமில்லை. இந்த அரசியல் சூழல் ஒரு சக்தி வாய்ந்த புதிய பலமான தலைமை ஒன்று உருவாவதற்கு வசதியான பொருத்தமான கனிந்துள்ள சூழல். இதை கட்டியெழுப்பப்போவது யார்?

இனவாத வெறியினை அரசின் சிந்தனையாக மாற்றி விட்டுள்ள அரசாங்கத்தின் முன், அத்தகைய ஒரு அரசியல் சக்தி சட்டவாத பாராளுமன்ற வழிமுறைகளினூடு வளர்ந்து வரும் வாய்ப்பு இல்லை என்பது தெளிவு. புலிகளுக்கு இந்த வெற்றிடத்தை புரிந்துகொண்டு அரசியல் தலைமைத்துவத்தை எடுத்துக் கொள்ள நிறைய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அவர்களுக்கு அரசியல் தளத்தில் இயங்குவதற்கான அக்கறையும், தெளிவும் முக்கியத்துவமும் புரிந்ததாகத் தெரியவில்லை. ஆயுதங்கள், ஆயுதப்போராட்டம், பாராளுமன்றம் எல்லாமே முக்கியம் தான். ஆனால், எந்தக் காலகட்டத்தில் எவையெவை எவ்வளவுக்கு முக்கியமானவை என்று புரிந்து கொள்ளாதவரை அரசியல் வரலாற்றை உருவாக்குபவர்களாக எந்தத் தலைமையும் ஆகிவிட முடியாது!

நன்றி - நூலகத்திட்டம்



# பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவம்
# இருந்ததையும் இழக்கும் நிலையில்...!

~ என்.சரவணன்

உலகின் முதலாவது பெண் அரச தலைவரை உருவாக்கிய நாட்டில் அதே பிரதமரின் இறுதி வாக்களிப்போடு நடந்து முடிந்த 11வது பாராளுமன்றத் தேர்தலில் வரலாறு காணாத அளவுக்கு பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டிருக்கின்றனர் என்று நாங்கள் பெருமையுடன் கூறிக்கொள்வோம்.

ஆனால் 1977க்குப் பின்னர் முதற் தடவையாக மீண்டும் பெண்களின் பிரதிநிதித்துவ வீதாசாரம் பாராளுமன்றத்தில் குறைந்து விட்டது என்பதை இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இந்த கால இடைவெளிக்குள் அதிகளவு பெண் அமைச்சர்களையும், பெண் உறுப்பினர்களையும், பெண் ஜனாதிபதியையும், பெண் பிரதமரையும் கூட ஏக காலத்தில் கொண்டிருந்தும் கூட



அதற்கடுத்த படியாக நடந்து முடிந்திருக்கிற தேர்தலில் பெண்களின் பிரதிநித்துவ வீதாசாரம் இருந்ததை விட குறைந்ததைக் கவனத்தில் எடுக்க வேண்டும். (பார்க்க அட்டவணை) 1977இல் மொத்த பாராளுமன்ற பிரதிநிதிகளில் பெண்களின் வீதாசாரம் 2.3 வீதம் மட்டுமே இருந்தது. 1989 மற்றும் 1995 ஆகிய 9வது 10வது பாராளுமன்றத்தில் 5.1 வீத பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆனால் இம்முறை அது 4 வீதமாக மீண்டும் குறைந்திருக்கிறது.

29 அரசியற் கட்சிகளும் 99 சுயேட்சைக் குழுக்களிலுமாக மொத்தம் 5048 பேர் இம்முறை தேர்தல் களத்தில் குதித்திருந்தனர். வரலாறு காணாத அளவுக்கு இந்த முறை தேர்தலில் போட்டியிட்ட குழுக்களினதும், கட்சிகளினதும் எண்ணிக்கை கூட. அவை போட்டியிட்ட தொகுதிகளும் அதிகம். சென்ற தடவை போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை 1440 பேர் மட்டுமே ஆகும். இந்த அடிப்படையில் நோக்குகையில் பெண் வேட்பாளர்கள் இம்முறை அதிகரித்து ஒன்றும் பெரிய விடயம் அல்ல. ஆனால் இம்முறை போட்டியிட்ட 117 பெண் வேட்பாளர்களில் 9 பேர் தான் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றனர். சென்ற முறை 12 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Soma K.Tennakoon

பொ.ஐ.மு.வின் 14 பெண் வேட்பாளர்களையும், ஐ.தே.க. 8 பெண் வேட்பாளர்களையும், ஜே.வி.பி. 23 பெண் வேட்பாளர்களையும் நிறுத்தியிருந்தது.

இம்முறை சுமேதா ஜயசேன, பவித்திரா வன்னி ஆராச்சி, அமரா பியசீலி ரத்நாயக்க, சந்திரானி பண்டாரா, பேரியல் அஷ்ரப், சோமா குமாரி தென்னகோன், சிறியானி பெர்ணான்டோ, அன்ஜான் உம்மா, சுரங்கனி எல்லாவெல ஆகிய 9 பேருமே பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர்களான மகளிர் விவகார அமைச்சர் ஹேமா ரத்நாயக்க, பிரதி அமைச்சராக இருந்த நிருபமா ராஜபக்ச, உணவு, வர்த்தக பிரதி அமைச்சராக இருந்த சுமித்ரா பிரியங்கனி அபேவீர ஆகியோர் தோல்வியுற்றனர்.

அது போல ஐ.தே.க.விலிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் இருந்த இம்முறை வேட்பாளர்களான சுனேத்ரா ரணசிங்க, கல்யாணி வீரசிங்க, ரேணுகா ஹேரத், வீமாலி கருணாரத்ன, ஷீலா யாப்பா, ராஜமனோகரி புலேந்திரன், சமந்தா கருணாரத்ன, அனுலா பஸ்நாயக்க, பத்மா வெத்தேவ, சம்பா கலுகல்ல, சிறிமணி அத்துலத் முதலி, சுவனீத்தா குணரத்ன ஆகியோரும் இம்முறை ஆசனங்களை இழந்துள்ளனர்.

இம்முறை தெரிவாகியுள்ள 10 உறுப்பினர்களில் 5 பேர் புதிய முகங்கள். பேரியல் அஷ்ரப் (என்.யு.ஏ.), பொ.ஐ.மு விலிருந்து சுரங்கனி எல்லாவெல, சோமா குமாரி தென்னகோன், சிறியானி பெர்ணான்டோ, ஐ.தே.க.விலிருந்து சந்திராணி பண்டார ஜே.வி.பி.யிலிருந்து அன்ஜான் உம்மா, ஆகியோரே அந்த முகங்கள்.

இலங்கையின் சரித்திரத்திலேயே முதலாவது தட்வையாக முஸ்லிம் பெண்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பது ஒரு விசேட அம்சம். அதுவும் இரு பெண்கள். முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த பேரியல் அஸ்ரஃப் ('இவரது கணவர் தான் மறைந்த அஸ்ரஃப்') மற்றும், ஜே.வி.பியின் சார்பில் தேசியப் பட்டியலின் மூலம் தெரிவாகியிருக்கும் அன்ஜான் உம்மா. இவர்களில் பேரியல் அஸ்ரஃப் இலங்கையில் பாராளுமன்றவாத அரசியலுக்குள் நுழைய முடிந்த பலரும் உள்நுழைந்த வழியான அனுதாப வாக்கு, குடும்பச் செல்வாக்கு, என்பவற்றால் வந்தவர் எனலாம். ஆனால் அன்ஜான் உம்மா கட்சி அரசியலுக்கூடாக தெரிவானவர். அவர் ஏலவே உள்ளூராட்சி சபையில் அங்கம் வகித்தவர். இவர் தான் இலங்கையின் வரலாற்றில் முதலாவது தடவையாக அரசியல் நிர்வாக கட்டமைப்பொன்றுக்கு தெரிவான முதலாவது முஸ்லிம் பெண்ணாவார். அது மட்டுமன்றி முதலாவது தடவையாக ஜே.வி.பி.யின் பெண் பாராளுமன்ற உறுப்பினரும் கூட. ஆனால் இவர் ஜே.வி.பி.யினரால் வெறும் "ஷோ காட்டலுக்கான" (சிறுபான்மை இனங்களுடனான நெருக்கத்தை வெளிக்காட்ட) பொம்மையாகவே இவர் பயன்படுத்தப்பட்டு வருகிறார் எனும் குற்றசாட்டு



Chandrani Bandara

பலராலும் முன்வைக்கப்பட்டு வருகிறது. இம்முறை ஒரு தமிழ் பெண்ணும் தெரிவாகவில்லை. இருந்த ராஜமனோகரி புலேந்திரனும் தோல்வி அடைந்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான கோரிக்கையை உயர்த்திப் பிடித்தபடி பெண்கள் இயக்கங்கள் கோசங்களை முன்வைத்தாலும், பல அரசியற் கட்சிகளை நேரியாக சென்று உரையாடிய போதும் இவை ஒன்றும் நடக்கவில்லை. ஒரு வகையில் இது அரசியல்மயப்பட்ட போராட்டமாக இருக்காததும் ஒரு காரணமாக இருக்கலாம். என்.ஜீ.ஓ.மயப்பட்ட இந்தக் கோரிக்கைகள் வெறும் பருவகால கோரிக்கைகளாக ஆகிப் போனமையும், (தொடர்ச்சியற்ற தன்மையும், இத்தகைய வேலைத்திட்டத்திற்கான நிதியுதவி முடிந்ததும் அது வேறு வேலைத்திட்டத்திற்கு கொண்டு செல்லப்படுவதுமான நிலைமை) சாதாரண உழைக்கும் வர்க்க கோரிக்கையாகவும் இராததும், இருக்கும் அதிகார கட்டமை[illegible]டனான தற்காலிக சமரச கோரிக்[illegible]ர்டி நின்றதுமான போக்கு[illegible]கப்பட்ட தேவைகள் தேவை[illegible]டயப் பெறாமைக்கான காரணமாக இருக்க வேண்டும்.

இலங்கையின் சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானோர் பெண்களாக இருந்த போதும் இன்னமும் 5 வீதத்தைத் தாண்டிச் செல்லாத அரசியற் பிரதிநிதித்துவம் தான் உள்ளது. பெண் அமைப்புகளின் கோரிக்கைகள் கூட நியாயப்படி இருக்க வேண்டிய 50 வீத பிரதிநிதித்துவக் கோரிக்கையாகக் கூட இருக்கவில்லை. வெறும் 30 வீதக் கோரிக்கையாக மட்டுமே இருந்தது. இறுதியாக பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படாமல் போன அரசியல் சீர்திருத்தத்தில் கூட உள்ளூராட்சி சபைகளில் 25 வீத அரசியல் பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டுக்கான உத்தரவாதத்தை மட்டுமே அறிவித்திருந்தனர்.

ஒரு விவரத் தொடர்புடைய அமைச்சர் என்கிற ரீதியில் மகளிர் விவகார அமைச்சர் ஹேமா ரத்நாயக்க பல அரசியற் கட்சிகளை நோக்கி பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரியுங்கள் எனப் பலமாக கோரிக்கை வைத்தும் தான் பார்த்தார். ஆனால் அவருக்கு இம்முறை அமைச்சர் பதவியை மட்டுமல்ல பாராளுமன்ற உறுப்பினர் பதவியைக் கூட இழந்தார்.



Soma K.Tennakoon

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 52 ஆண்டுகளாம், சர்வஜன வாக்குரிமை ஆண்களுக்கும் பெண்களுக்குமாக கிடைத்து 79 ஆண்டுகளாம். ஆனால் இலங்கை "ஜனநாயக" "சோசலிச", "குடியரசில்" பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை 30 வீதத்துக்கு மேல் அதிகரிப்பதற்கு கொள்கையளவில் கூட அரசியற் கட்சிகளைத் தான் விடுவோம், அரசு கூட இல்லை என்பது தான் நிலைமை.



Surangani Ellawela


மீண்டும் எங்கள் ஜனாதிபதி சந்திரிகா, நிதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், முப்படைகளின் தலைவர், அரசாங்கத்தினதும் தலைவர். இதனைத் தான் இது ஒரு சமூக அதிகாரத்துவ கட்டமைப்பின் விளைவு என்கிறோம். ஆக இதே கட்டமைப்புக்குள் பிரதிநிதித் துவம் அதிகரிக்கப் பட்டாலும் கூட பெண்களின் நலன்கள் நிறைவேற்றப் படுமா என்கிற கேள்வி பலமாக இருப்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வோம்.

| நிறுவனம் | வருடம் | வேட்பாளர்கள் மொத்தம் | வேட்பாளர்கள் பெண்கள் | வேட்பாளர்கள் வீதம் | தெரிவுசெய்யப்பட்டவர்கள் மொத்தம் | தெரிவுசெய்யப்பட்டவர்கள் பெண்கள் | தெரிவுசெய்யப்பட்டவர்கள் வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| பாராளுமன்றம் | 1947 | 358 | 3 | 0.6 | 117 | 1 | 2.6 |
| | 1977 | 730 | 14 | 1.9 | 168 | 4 | 2.3 |
| | 1989 | 1,382 | 22 | 1.6 | 225 | 12 | 5.1 |
| | 1994 | 1,410 | 55 | 3.9 | 225 | 12 | 5.1 |
| | 2000 | 5048 | 117 | 2.3 | 225 | 09 | 4.0 |
| இடைத்தேர்தல் | 1977-89 | 257 | 5 | 1.9 | 28 | 1 | 3.6 |
| மாகாணசபை | 1989 | 1,327 | 38 | 2.8 | 437 | 13 | 2.9 |
| | 1993 | 2,351 | 12 | 0.5 | 382 | 12 | 3.1 |
| உள்ளூராட்சி சபை | | | | | | | |
| 1. மாநகர சபை | 1983 | 1068 | 27 | 2.5 | 233 | 3 | 1.3 |
| | 1987 | 641 | 22 | 3.4 | * | - | - |
| | 1991 | 1152 | 42 | 3.6 | 207 | 6 | 2.9 |
| 2. நகர சபை | 1983 | 1396 | 33 | 2.4 | 347 | 6 | 1.7 |
| | 1987 | 984 | 31 | 3.2 | * | - | - |
| | 1991 | 1453 | 40 | 2.8 | 241 | 6 | 2.5 |
| 3. மாவ.அபி.சபை | 1981 | 470 | 11 | 2.3 | 161 | 3 | 1.9 |
| 4. பிரதேச சபை | 1987 | 7198 | 133 | 1.8 | * | - | - |
| | 1991 | 13385 | 325 | 2.4 | 2674 | 42 | 1.6 |

*1987-89 காலப்பகுதியில் ஒரேயொருவரே மாநகர சபையின் மேயராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நன்றி - நூலகத்திட்டம்






எனது பத்திரிகை உலக அனுபவங்கள் - 5

# எங்கள் வில்லுக்கத்திகள் பிறகு காய்கறி வெட்டப் பயன்பட்டன!

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதாவை அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா தாக்கல் செய்தார். சிங்களம் மசோதாவை எதிர்த்து தமிரசுக்கட்சித் தொண்டர்கள் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் சத்தியாக்கிரகம் செய்வதற்கு பாராளுமன்றக் கட்டிடத்தை நோக்கி வந்த பொழுது குண்டர்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

காலிமுகத் திடலிலேயே பாராளுமன்றக் கட்டிடத்துக்குச் சிறிது துாரத்தில் அவர்கள் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். குண்டர்கள் கற்களாலும், தடிகளாலும் அவர்களைத் தாக்கினர். அமிர்தலிங்கத்தின் மண்டை உடைந்தது. பலர் காயமடைந்தனர். காலிமுகத்திடல் அல்லோல கல்லோலப்பட்டது. மழையும் துாறிக் கொண்டிருந்தது. இச்சமயத்தில் அங்கு திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் காணப்பட்ட தமிழர்களிடம் சிங்கள விஷமிகள் வழிப்பறியும் செய்தனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து கொழும்பு நகரிலும், புறநகர்ப் பகுதியிலும் தமிழர் கடைகள் சில கொள்ளை-யடிக்கப்பட்டன. ஆனா-லும், நிலைமை மோச-மாகாமல் தடுக்கப்பட்டது. அம்பாறை இங்கினியா-கலையில் இனக்கலவரம் ஏற்பட்டு நிலைமை மோசமடைந்தது. காலிமுகத்திடலிலும், நகரின் சில பகுதிகளிலும் அன்று நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து தமிழ் மக்கள் சிலர் தமது பாதுகாப்புக்குத் தாமே சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று யோசித்தனர்.

காலிமுகத்திடலில் நடந்த சத்தியாக்கிரகத்தைப் பார்ப்பதற்கு நானும் சென்றிருந்தேன். சுகாதார அமைச்சில் வேலை பார்த்த நண்பன் கே.சி. பத்மநாபனையும், நீர்ப்பாசன அமைச்சில் வேலை பார்த்த நண்பன் ஸ்ரீரெங்கநாத-னையும் சந்தித்தேன். மூவரும் காலிமுகத்திடலில் சிங்கள விஷமிகளின் சேட்டைகளையும் அவதானித்தோம். ஸ்ரீரெங்கநாதனிடமிருந்து கைக்கடிகாரத்தை ஒருவன் பிடுங்கி எடுக்க முனைந்த போது நாங்கள் நைஸாக ரெங்கநாதனை அவனிமிருந்து இழுத்துக் கொண்டு போய் விட்டோம். நண்பகலில் நாங்கள் மூவரும் அங்கிருந்து புறப்பட்டு விட்டோம். அவர்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள். நான் 'வீரகேசரி'க்குப் போனேன். அன்று எனக்கு இரவு வேலை.

மறுநாள் அதிகாலை நான் எனது அறைக்குச் சென்றபோது எனது அறை நண்பன் சிவஞானத்தை இருவர் அந்த அதிகாலையிலேயே சந்தித்துப்பேசிவிட்டுப் புறப்பட்டுச் சென்றனர்.

முதல் நாள் நடந்த சம்பவங்களைப்பற்றி நான் சிவஞானத்துடன் பேசினேன். நண்பன் சிவஞானம் வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தார். தமிழர்கள் தங்களைத் தாங்ளே பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதாவது செய்து கொள்ள வேண்டும் என்று நண்பர் சிவஞானம் சொன்னார். என்ன செய்வது என்று கேட்டேன். இப்பொழுது இது பற்றித் தான் இரண்டு பேர் கதைத்து விட்டுப் போகினம். மாலையில் வந்து சொல்லுகிறேன்" என்றார்.

நாங்களும் அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேணும் என்று சிவஞானம் மாலையில் சொன்னார். என்னுடன் ஸ்ரீரெங்கநாதனும் சேர்ந்து கொண்டான்.

இந்த யோசனைக்கு அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் ஒரு தமிழரும் உதவியும் ஒத்துழைப்பும் கொடுக்கிறார்

**காலிமுகத்திடலிலேயே பாராளுமன்றக் கட்டிடத்துக்குச் சிறிது துாரத்தில் அவர்கள் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். குண்டர்கள் கற்களாலும், தடிகளாலும் அவர்களைத் தாக்கினர். அமிர்தலிங்கத்தின்**

என்று சிவஞானம் கூறினார். பின்னர் இரண்டு தடவைகள் கொள்ளுப்பிட்டியில் ஓரிடத்தில் சிவஞானமும் நாங்களும் சென்று இரவு எட்டு ஒன்பது மணியளவில் காத்து நின்றிருக்கிறோம். சிறிது நேரம் சிவஞானம் மட்டும் அங்குள்ள ஓர் ஒழுங்கைக்குள் சென்று சிறிது நேரம் தாமதித்து வேறு சிலருடன் வருவார். அவர்கள் போய்-விடுவார்கள். நாங்களும் முகத்து-வாரத்திலுள்ள அறைக்குத் திரும்புவோம்.

சில நாட்களில் நண்பர் சிவஞானத்தின் யோசனையின் பேரில் நாம் மூவரும் ஆளுக்கொரு வில்லுக்கத்தி, எங்கள் சொந்தப் பணத்தில் வாங்கினோம். சிவஞானம் சிறுவயதிலேயே தோட்ட வேலைகள் செய்து முறுக்-கேறிய உடல் வாய்ந்தவர். ஸ்ரீரெங்கநாதன் உடற்பயிற்சி செய்து 'யாழ்ப்பாண ஆணழகன்' என்று பட்டமும் பெற்றவன். எனது உடம்புக்கு தோற்றமே இல்லை. "கூழை வாலனும் வன்னிக்குப் போச்சாம்" என்பது போல் நானும் வில்லுக் கத்தியைக் கொஞ்சக் காலம் கொண்டு திரிந்தேன். ஆனால் எனக்கு மனத்தைரியம் நிறைய உண்டு.

சில நாட்கள் சென்றதும் நண்பர் சிவஞானம் சிங்களத்தில் அச்சிடப்பட்ட துண்டுபிரசுரங்கள் கொண்ட பார்சலை என்னிடம் கொடுத்து இவற்றை சிங்களப் பொதுமக்கள் கையில் கிடைக்கச் செய்யவேண்டும். ஆனால் விநியோகிக்கும் போது அகப்பட்டால் உமது அந்தியேஷ்டிக்கும் எலும்பு மிஞ்சாது என்றார். விஷயம் என்னவென்று கேட்டேன். "பௌத்தர்களே விழித்தெழுங்கள்" என்பது தான் தலைப்பு. இது சிங்களவர்களுக்குள்ளேயே பிரச்சினையை ஏற்படுத்தக் கூடியது என்றும் சொன்னார்.

இரவில் வேலை முடிந்து ஒரு மணிக்குப் பின் வீரகேசரியிலிருந்து முகத்துவாரத்திலுள்ள எனது அறைக்குத் திரும்பி சைக்கிளில் வரும் பொழுது அதிகாலைப் பூசைக்கு வரும் மக்கள் கைகளில் கிடைக்கக்கூடியதாக தேவாலய வாசலில் இப்பிரசுரங்களை நான் தனியாகவே ஒவ்வொரு வாசலிலும் வைத்து அதன் மீது பாரத்துக்கும் கற்களையும் வைத்து விட்டேன். எவரிடமும் அகப்படவில்லை.

தற்காப்புக்கு அமைப்பும் உருவாகவில்லை. ஆயுதங்களும் வாங்கவில்லை. எங்கள் வில்லுக்கத்திகள் எங்கள் வீடுகளில் பின்னர் காய்கறி வெட்டுவதற்கு உபயோகப்பட்டது.

---

# பெற்றோலிய விலை உயர்வு: சதியும் பித்தலாட்டமும்

1998ஆம் ஆண்டு தொடக்கத்தில் பத்து அமெரிக்க டொலராக இருந்த ஒரு பீப்பாய் (கிட்டதட்ட 650.9லீட்டர்) கச்சா எண்ணெயின் விலை, கடந்த இரண்டாண்டுகளில் படிப்-படியாக உயர்ந்து, கடந்த மாதம் முப்பதைந்து அமெரிக்க டொலரை எட்டியது. உலக வங்கி உள்ளிட்ட அனைத்துச் சர்வதேச அமைப்பு-களும், பொருளாதார நிபுணர்களும் இந்த விலை உயர்வுக்கு உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சியையும், கச்சா எண்ணெயின் பற்றாக்-குறையினையும் காரணமாகக் கூறுகின்றனர். அதாவது, வளர்ச்சி நிலையிலுள்ள உலகப் பொருளாதாரத்தின் தேவைக்கு ஏற்றவாறு, கச்சா எண்ணெயின் உற்பத்தி அதிகரிக்க-வில்லை. உலகச்சந்தையில், கச்சா எண்ணெ-யின் வரத்தைவிட தேவை அதிகமாக இருப்பது தான் இந்த விலை உயர்வுக்குக் காரணம் என்பது அவர்களின் வாதம்.

இவர்களின் வாதப்படி பார்த்தால் உலகத் தேவைக்கு ஏற்றவாறு கச்சா எண்ணெயின் உற்பத்தியை அதிகரித்திருந்தால், விலை வீழ்ந்திருக்கும் என்பது பாமரனின் அறிவுக்குக்-கூட எட்டக்கூடிய தீர்வு. ஆனால், உலகச் சந்தையில் இருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்துவரும் ஏகாதிபத்திய நாடுகளும், ஏழைநாடுகளும் தங்களின் நாடு-களில் பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்த அக்கறை காட்டினவே தவிர எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கக் கோர-வில்லை. ஏனென்றால் இதற்கான விடை, கச்சா எண்ணெய் உற்பத்தி/ விநியோகம் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதிலும் இந்த விலை உயர்வால் யாரெல்லாம் எப்படியெல்-லாம் ஆதாயமடைகிறார்கள் என்பதிலும் தான் அடங்கியுள்ளது.

உலகின் கச்சா எண்ணெய்த் தேவையின் 40 சதவீதத்தை பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்புத் தான் (OPEL) நிறைவு செய்கிறது. இக்கூட்டமைப்-பிற்கு வெளியே கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் முக்கியமானவை, அமெரிக்கா, ரசியா, மற்றும் இங்கிலாந்து. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் உள்ளிட்டுப் பல்வேறு நாடுகளிலும் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டாலும், அது உள்நாட்டின் தேவைக்கே போதுமானமாதாக இல்லை. எனவே ஏகாதிபத்தியங்களையும் உள்ளிட்டு உலகின் பெரும்பாலான நாடுகள் தங்களின் கச்சா எண்ணெய்த் தேவைக்கு பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்மைப்பைத் தான் நம்பியுள்ளன.

இப்பிரச்சினையின் பொழுது இக்கூட்ட-மைப்பு "தங்களின் உற்பத்தி இலக்கைவிடக் கூடுதலாக நாளொன்றுக்கு எட்டு இலட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் மட்டுமே உற்பத்தி செய்யப்படும். இந்தக் கூடுதல் உற்பத்தியும் ஆறு மாதங்கள் மட்டுமே நீடிக்கும்" என அறிவித்தது. ஆனாலும் இந்தக் கூடுதல் உற்பத்தி எவ்விதத்திலும் கச்சா எண்ணெயின் விலையை வீழ்த்தி விடவில்லை. இக்கூட்ட-மைப்பிற்கு வெளியே கச்சா எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் நாடுகளோ, தங்களின் உற்பத்தியை அதிகரிப்பது பற்றி வாயே திறக்கவில்லை.

தனியார்மயம் - தாராளமயத்தின் மூலம் உலகநாடுகளின் உற்பத்தியையும், ஏற்றுமதி வர்த்தகத்தையும் தங்களின் விருப்பப்படி ஆட்டிப்படைத்து வரும் ஏகாதிபத்தியங்கள், இந்தப் பிரச்சினையின் பொழுது பெட்ரோலி-யம் ஏற்றுமதி செய்யும் நாடுகளை உற்பத்தியை அதிகரிக்கக் கோரி எவ்வித நிர்ப்பந்தமும் ஏற்படுத்தவில்லை என்பது இங்கு கவனிக்கத்-தக்கது.

அரபு நாடுகளில் உள்ள எண்ணெய் வயல்கள், நேரடியாகப் பன்னாட்டு நிறுவனங்-களின் பிடியில் இல்லாமல் ஷேக்குகளுக்கும், அந்நாடுகளின் அரசுகளுக்கும் சொந்தமாக இருந்தாலும், கச்சா எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான தொழில்நுட்பத்தை அந்நாடு-களுக்கு மேற்குலகைச் சேர்ந்த தேசங்கடந்த தொழிற்கழகங்கங்கள் தான் வழங்குகின்றன. அதேசமயம் ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் எண்ணெய் வ்யல்கள் இலங்கிலாந்தைச் சேர்ந்த "ஷெல்" என்ற நிறுவனத்தின் பிடியிலும், இந்தோனேசிய எண்ணெய் வயல்கள் "கால்டெக்ஸ்" என்ற அமெரிக்க நிறுவனத்தின் பிடியிலும் உள்ளன. சுருக்கமாகச் சொன்னால், உலகின் கச்சா எண்ணெய் உற்பத்தியிலும், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிலும், பெட்ரோலியப் பொருட்கள் விநியோகத்திலும் மேற்குலக ஏகாதிபத்திய நிறுவனங்களின் பங்கு அசாதாரணமானது. உலகின் முதல் ஐம்பது தேசங்கடந்த தொழிற்கழகங்களை எடுத்துக் கொண்டால், அதில் 18 நிறுவனங்கள் கச்சா எண்ணெய் உற்பத்தி/ சுத்திகரிப்பு விநியோ-கத்தில் ஈடுபட்டுள்ளன. இந்த 18ல் 9 நிறுவ-னங்கள் அமெரிக்காவையும், 3 நிறுவனங்கள் இங்கிலாந்தையும் இரண்டு பிரான்சையும், ஒன்று இத்தாலியையும் சேர்ந்தவை.

1970களில் இதைவிடத் தீவிரமான எண்ணெய் நெருக்கடி ஏற்பட்ட பொழுது உலகிலேயே அதிக அளவு எண்ணெய் வளம் கொண்ட சவுதி அரேபியா 1974ஆம் ஆண்டு ஈட்டிய வருமானம் 1700 கோடி அமெரிக்க டொலர்கள். அதேபொழுதில் அமெரிக்காவின் சர்வதேச எண்ணெய்த் தொழிற்கழகமான எக்சானின் வருமானம் அந்த ஆண்டின் பாதியிலேயே 2130கோடி அமெரிக்க டொலர்களைத் தாண்டியது. இதிலிருந்தே எண்ணெய்த் தொழிலின் மீது சர்வதேச தொழிற்கழகங்களுக்கு இருக்கும் ஆதிக்கத்-தைப் புரிந்து கொள்ளலாம்.

இச்சர்வதேச எண்ணெய் தொழிற்-கழகங்கள் தங்களின் முதலீட்டுக்குக் கணிசமான இலாபமடைய ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் பதினெட்டு டொலருக்கு விற்க வேண்டும் என எதிர்பார்க்கின்றன. ஆனால், 1997ஆம் ஆண்டு தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவு, கச்சா எண்ணெயின் விலையை இருபது டொலரில் இருந்து பத்து டொலராகச் சரித்து விட்டது. இச்சரிவில் இருந்து மீள்வதற்கு உற்பத்தியைக் குறைக்கத் தொடங்கிய இந்நிறுவனங்கள், இந்த ஆண்டின் துவக்கத்தில் புதிதாக எண்ணெய் உற்பத்திக்குப் போடவிருந்த மூலதனத்தில் 20 சதவீதத்தைத குறைத்துக் கொண்டன. இப்படிச் செயற்கை-யாக உருவாக்கப்பட்ட முடக்கம், எண்ணெய் விலை உயர்ந்ததற்கு ஒரு காரணம்.

இப்படி எண்ணெய் வயல்/ஆலை அதிபர்கள், பங்குச்சந்தை முதலாளிகள், ஆயுத வியாபாரிகள் எனப் பலதரப்பட்ட முதலாளி-களின் இலாப வேட்டைக்கு இந்த விலை-யேற்றம் சாதகமாக இருப்பதால் தான், அமெரிக்கா உள்ளிட்டு மேற்குலக ஏகாதிபத்-தியங்கள் அனைத்தும் இந்த விலையேற்-றத்திற்கு எதிராகச் சுண்டுவிரலைக் கூட அசைக்கவில்லை. அதேசமயம் தாராளமயத்தின் ஆதரவாளர்கள் இதையெல்லாம் மூடிமறைத்து விட்டு, "தேவையை விட வரத்து குறைவாக உள்ளது" எனத் துாய சந்தைவிதியால் இந்த விலையேற்றத்தை நியாயப்படுத்துவது கடைந்தெடுத்த பித்தலாட்டமாகும்.

தகவல்: புதியஜனநாயகம்

நன்றி - நூலகத்திட்டம்



# கண்ணீரில் ஒரு தசாப்தம்

- பத்ர்ஸமான் முஸ்தபா

1990

ஒக்டோபர் மாதத்தை எந்த முஸ்லிமும் ஏன் தமிழர்களும் கூட மறந்திருக்க நியாயமில்லை. 1983ம் ஆண்டு ஜூலைக் கலவரம் எந்தளவு மக்கள் மனதில் ஒரு கறுப்பாக படிந்துள்ளதோ அதைவிட ஆழமான தாக்கத்தை தான் '90 ஒக்டோபரில் வட புல முஸ்லிம்கள் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட போது ஏற்படுத்தியது.

இனச்சுத்திரிப்பு என்ற போர்வையில் புலிகள் செய்த மாபெரும் வரலாற்றுத் தவறு தான் இந்தப் பலாத்கார வெளியேற்றம். இந்தக் கொடூர நிகழ்வு இடம் பெற்று 10 ஆண்டுகள் சென்ற பின்னும் கூட அதில் பட்ட வடு இன்னும் அழியவில்லை.

தார்மீகப் போராட்டம், விடுதலைப் போராட்டம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு தனக்கென்று ஒரு தனிக்கொள்கையுடன் போராட்டக் களத்தினுள் நுழைந்த புலிகள், இன்னுமொரு சிறுபான்மை இனத்தவர் மீது மேற்கொண்ட இந்த பலாத்காரக் கொடூர வரலாற்றில் ஒரு போதும் மறந்துவிடாது. வடக்கிலிருந்த அப்பாவிப் பொது மக்களை இரண்டு மணி நேர அவகாசம் கொடுத்து, அவர்களது உடமைகளையும் சூறையாடி உடுத்த உடுப்புடன் துப்பாக்கி முனையில் வெளியேற்றியது எந்த யுத்த தர்மத்துக்கு பொருத்தமானது?

வயதானவர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் எல்லோரும் வஞ்சிக்கப்படக் கூடாது என்ற யுத்த தர்மம், மறந்து விட்டா புலிகள் அவ்வாறான வரலாற்றுத் துரோகம் ஒன்றை இழைத்தார்கள்.

புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு ஒரு காலத்தில் முஸ்லிம் இளைஞர்களும், பக்க பலமாக இருந்திருக்கின்றனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. இருந்தும், அவர்களின் தனி இந்துத்துவ போக்கு ஒரு கால கட்டத்தில் உக்கிரமடைந்திருந்த வேளையில் தான் முஸ்லிம் இளைஞர்களின் ஆதரவும் வாபஸ் வாங்கப்பட்டது. இருந்தும், புலிகளுடன் சொந்தக் குரோதம் எதனையும் யாரும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஒரு கட்டத்தில் தமிழ்ப் போராட்டத்திற்கு உதவாமல் இருந்தாலும் கூட முஸ்லிம்கள் அந்தப் போராட்டத்திற்கு ஒரு போதும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கவும் இல்லை.

வரலாற்றை எடுத்து நோக்கின் முஸ்லிம்கள் எப்போதும் தமிழர்களுடன் ஒன்றாய் பின்னிப்பிணைந்த வாழ்க்கை ஒன்றையே நடாத்தியிருக்கின்றனர். இதற்கான காரணங்களாக முஸ்லிம்கள் தங்களது தாய் மொழியாக தமிழைக் கொண்டது. முஸ்லிம்களின் மூதாதையார் இந்து வம்சாவளியில் வாழ்ந்த சூழல் போன்றவற்றைக் கொள்ளலாம். இதனால் தமிழர்களை எதிரிகளாக ஒரு போதும் முஸ்லிம்கள் பார்க்கத் தலைப்படவில்லை.



ஒரு சில கால கட்டங்களில் தமிழ் - முஸ்லிம் கலவரங்கள் மூண்டமையும் இங்கு குறிப்பிட வேண்டும். இதற்கு இரு சமூகங்களிடையே இருந்த ஒரு சில புரிந்துணர்வின்மையும், பேரினவாத சக்திகளின் மறைமுகமான ஊக்குவிப்புமே காரணமாயிருந்தன. எது எப்படியிருப்பினும் தமிழ் - முஸ்லிம் உறவுகள் ஒரு போதும் அறுந்திருக்கவில்லை.

இப்படியான ஒரு நிலையில் தான் முஸ்லிம்கள் மீதான புலிகளின் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. காத்தான்குடியில் 300க்கும் மேற்பட்ட முஸ்லிம்களும், ஓட்டமாவடி, வாழைச்சேனை, பொலன்னறுவை மற்றும் கல்முனை, அக்கரைப்பற்று, நிந்தவூர் போன்ற கிழக்கு மாகாணக் கிராமங்களில் மீனவர்களும், விவசாயிகளும், ஏழைப் பொதுமக்களும் மிருகத்தனமாக நூற்றுக்கணக்கில் புலிகளால் வேட்டையாடப்பட்டனர்.

இவ்வாறாக தனியே முஸ்லிம்களை இனங்கண்டு அழிப்பதில் முனைப்பாக இருந்த புலிகள் முஸ்லிம்களின் பூர்வீக பூமியாக இருந்த வடக்கிலிருந்து அவர்களை பலவந்தமாக வெளியேற்றியதை சுயமாக, சாதுர்யமாக சிந்திக்கக்கூடிய எந்தவொரு மனிதராலும் சரித்துக் கொள்ள முடியாது. அவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்களில் அநேகமானோர் இன்னும் அகதி முகாம்களில் அழுந்திக் கொண்டிருக்கிறார்கள். எப்படி எப்படி எல்லாமோ வாழ்ந்த மக்கள் வானமே கூரை என்ற நிலையில் இன்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குரிய விமோசனம் என்ன? தொடர்ந்தும் அகதி வாழ்க்கை தானா? இவர்கள் மீளக் குடியேறப் போவதில்லையா? இந்த மக்களைப்பற்றி பேசி இவர்களையே காரணங்காட்டி அதில் அரசியல் லாபம் பெறும் அரசியல்வாதிகளும் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதில் இவர்களது பங்கு என்ன?

எல்லா அரசியல்வாதிகளும் கட்சி பேதமின்றி இந்த வடபுல மக்களின் மீள்குடியேற்றத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். ஒரு கொடூரம் நடந்தேறி ஒரு தசாப்தம் கடந்தும் கூட அது பற்றி எந்தப் பிரக்ஞையும் இல்லமல் இன்னும் தங்களது 'கதிரையை' தக்க வைத்துக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகளே அதிகம் சாடப்பட வேண்டியவர்கள். வெளியேற்றப்பட்ட அப்பாவி மக்கள் மீண்டும் மிகவும் துரிதகதியில் மீள் குடியேற்றப்படவில்லையெனில் எதிர்காலத்தில் ஒரு அவமானம் சுமந்த வரலாற்றைத் தான் நாம் சுமந்து செல்ல வேண்டியிருக்கும்.

'எனது மக்கள்
பதினோராவது ஆண்டிலும்
அகதி அந்தஸ்தாயின்-
நான்
உண்ணுவதும் உடுப்பதும்
ஒரு சடங்காகவே ஆயிடும்'

---

# அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

கடந்த வாரத்துச் சிங்களப் பத்திரிகைச் செய்திகள் குறித்த ஒரு அலசல்



கே.சீ.ஜே.ரட்ணாயக்க

இவ்வார வார இறுதிப் பத்திரிகைகள் சுடச்சுட செய்திகள் எதனையும் வழங்காத போதிலும், புதிய அமைச்சரவை குறித்தான செய்திகளையும், அவர் தம் விபரங்களையும் வழங்கியுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. புதிய அமைச்சர்கள் தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்தும், முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள் குறித்தும் நேர்காணல்களின் மூலம் வலியுறுத்தியுள்ளனர். அத்துடன் சிஹல உறுமய கட்சியின் பிளவு குறித்து எஸ்.எல்.-குணசேகரவுடனான பேட்டியும் திலக் கருணாரத்னவின் பேட்டியும் இவ்வார வார இறுதிப் பத்திரிகைகளில் பெரும்பாலானவற்றில் காணக் கூடியதாகவுள்ளது.

**ஞாயிறு திவயின**

ஜே.வி.பியின் அரசியலமைப்பு சீர்திருத்த யோசனை!

**ஞாயிறு லக்பிம**

அமைச்சரவை பராமரிப்புக்கு ஆண்டுக்கு 60 கோடி செலவு.

**சிலுமின**

குண்டுதாரிகளிடமிருந்து அமைச்சர்களின் உயிரைப் பாதுகாக்க வெளிநாட்டு பாதுகாப்பு பிரிவினரின் ஆலோசனை!

**ராவய**

அதிருப்தியுற்ற அமைச்சர்களுக்கு புதிய அமைச்சுகள்!

ஆகியன வார இறுதி சிங்களப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளாக் காணப்பட்டன.

ஞாயிறு லக்பிம பத்திரிகை இவ்வாரத்தில் சிஹல உறுமய கட்சியின் முன்னாள் தலைவர் எஸ்.எல் குணசேகரவினதும், பொதுச் செயலாளர் திலக்கருணாரத்னதும் நேர்காணலை இருபக்கங்களில் "நான் விலகிய பின்னர் சம்பிக்கவை நியமித்திருக்கலாமே" என்ற தலைப்பிலும், "எஸ்.எல் சென்றபின் சம்பிக்கவை நான் முன்மொழிந்தேன்." என்ற தலைப்பிலும் வெளியிட்டுள்ளது. "யுத்தம் முடிவடைந்து விட்டதா" என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. நாட்டில் கிரிக்கெட் யுத்தம் இல்லாவிட்டால் தேர்தல் யுத்தம் பற்றிய அவதானம் தான் காணப்படுகின்றது என்றும், வடகிழக்கில் யுத்தத்தில் இறக்கும் 'வீரர்கள் பற்றியோ, இழக்கும் வளங்கள் பற்றியோ எவரும் கவலைப்படுவதில்லை என தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அமைச்சர்கள் அதிகம் இருப்பது நன்றா தீமையா என்ற தலைப்பில் மதத்தலைவர்கள், பேராசிரியர்கள் ஆகியோரிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டுள்ளன. இங்கு பெரும்பாலானவர்கள் அமைச்சர்கள் அதிகம் இருப்பது நாட்டிற்கு சுமை என்ற ரீதியில் கருத்துத் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிலுமின பத்திரிகை தனது அரசியல் பத்தியில் ஐ.தே.கவுடன் இணையுமாறு சோமதேரர் ஜே.வி.பி.யிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறித்து எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தனது ஆசிரியர் தலையங்கத்தில் "இம்முறை பழைய விளையாட்டுக்கள் தேவையில்லை" என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது. அத்துடன் தேசிய அரசாங்கம் ஒன்றின் தேவையை வலியுறுத்தும் அரைப்பக்க கட்டுரையொன்றும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பிரபாகரனையும், வீரப்பனையும் ஒப்பிட்டும் பொதுத்தேர்தல் குறித்தான ஒரு பார்வை குறித்தான ஆக்கமும் வெளிவந்துள்ளன.

ஞாயிறு திவயின பத்திரிகை வழமை போல் இனவாதத்திற்கு தூபமிடும் செய்திகளை மோப்பம் பிடித்து பூதாகரமாக்கியுள்ள தன்மையை காணக்கூடியதாக உள்ளது. திவயின போன்ற இனவாத பத்திரிகைகளினால் சிஹல உறுமய கட்சியின் பிளவினை ஜீரணிக்க முடியாத நிலை உள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது. "56ன் உரிமையும் சிஹல உறுமயவும்" என்ற தலைப்பில் பேராசிரியர் நளின் த சில்வாவின் கட்டுரையும் "சிஹல உறுமய கட்சியை 'கொல்லாதே" என்ற தலைப்பிலான கட்டுரையும் இதனையே வலியுறுத்துகின்றன.

அத்துடன் ஷான் விஜேதுங்க தொகுத்து வழங்கும் "சென்ற வாரம்" என்ற பகுதியில் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும், டிரோன் பெர்னாந்துவும் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் உள்ளதாகவும், அதற்கான கலந்தாலோசனைகள் மும்முரமாக இடம்பெறுவதாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ராவய பத்திரிகை சிஹல உறுமயவின் நெருக்கடி குறித்து அதன் தலைவர் பொதுச் செயலாளர், உறுப்பினர்கள் ஆகியோரின் கருத்துக்களை கேட்டறிந்துள்ளது. தனது ஆசிரியர் தலையங்கத்தில் "அமைச்சரவை நியமிக்கப்பட்டவுடன் மட்டும் ஸ்திரமான நிலை தோன்றாது" என்ற தலைப்பில், அரசாங்கத்திற்கு பாராளுமன்ற வரலாற்றில் அதிக எண்ணிக்கை கொண்ட அமைச்சரவையை நியமிக்க முடிந்த போதிலும், ஸ்திரமான நிலையை காணக்கூடிய தன்மை இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிமலராஜன் பற்றி ஒரு சிறு செய்தியை மட்டுமே வெளியிட்டன!

அத்துடன் தேர்தல் வன்முறைகள் குறித்து இருபக்க கட்டுரைகள் வெளியாகியுள்ளன. எஸ்.பி.திசநாயக்கவின் தேர்தல் மோசடி பற்றியும் கலாவெவ பிரதேச தேர்தல் மோசடி குறித்தும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் சென்றவாரம் தமிழர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலை குறித்து சிங்கள வார இறுதிப்பத்திரிகைகள் முதலாம் பக்கம் சிறு செய்தியை மட்டும் வெளியிட்டுள்ளன.

வடக்கு வாழ் பத்திரிகையாளர்களுக்கும், தென்னிலங்கை பத்திரிகையாளர்களுக்கும் மத்தியில் பாலமாக இருந்த நிமலராஜனின் படுகொலை கண்டிக்கத்தக்கது என்றும், ராவய பத்திரிகை ஈ.பி.டி.பி. அமைப்பை கண்டித்தும் அவரது புகைப்படத்துடனான செய்தியை வெளியிட்டிருந்தது. திவயின பத்திரிகையும் இதில் விதிவிலக்காக செயல்பட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு தமிழீழப் போராளியின் கதை - 2

## படையினரிடமிருந்து தப்புவது எப்படி?


78 ஆம் ஆண்டு காலகட்டத்தில் எமது கல்லூரியில் எனது வகுப்பில் சேர்ந்த ஒரு மாணவனைப் பற்றிக் கட்டாயம் சொல்ல வேண்டும். அவர் தான் ரமேஸ் என்று அழைக்கப்பட்ட அற்புதராஜா நடராஜா. ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினராகவும் தினமுரசு ஆசிரியராகவும் இருந்தவர். 1999இல் கொல்லப்பட்டவர்.
அவர் வகுப்பில் சேரும் போது எமது வகுப்பிலுள்ள ஆண் மாணவர்கள் இரு பகுதியினராகப் பிரிந்து இருந்தனர். கிராமத்தின் வடக்கு-தெற்கு மேல்சாதி-கீழ்சாதி அடிப்படையில், வடக்குப் பகுதியினர் தாங்கள் மேல்சாதியைப் பிரதிநிதிப்படுத்துபவர்கள் போலும் தெற்குப் பிரிவினர் கீழ் சாதியினராகவும் குறைந்த பிரிவினராகவும் எமக்குள் ஏற்பட்ட சண்டை ஒன்றின் பின் பிரிந்து ஒருவருடன் ஒருவர் கதைக்காத நிலையில் இருந்தனர்.
பிறப்பினால் நான் வடக்குப் பகுதி மேல் சாதியைச் சேர்ந்திருந்தாலும் வகுப்பில் தெற்குப் பகுதி, கீழ் சாதியினர் என்று கூறப்பட்டவர்களுடன் உள்ள உடன்பாட்டினால் அவர்களைச் சேர்ந்தவன்.
வடக்குப் பகுதியைச் சேர்ந்த பலர் உறவினராகவும் என்னைப் பற்றிய செய்தியை அறிந்தவர்களாகவும் இருந்த படியால் என்னுடன் பிரச்சினை படுவதில்லை. இந்தக் காலகட்டத்தில் ரமேஸ் எனது வகுப்பில் சேரும் போது அவரின் ஊரவர் வடக்குப் பகுதிக் குழுவுடன் இருந்தபடியால் அவரும் அங்கேயே இருந்தார். என்னைப் பற்றிய செய்திகளை அறிந்தவுடன் அவர் என்னுடன் தொடர்புகளை ஏற்படுத்தினார். இதன் முதல் விளைவாக மீண்டும் எமது வகுப்பில் எல்லோரும் கதைக்க ஆரம்பித்தோம்.

எமது வகுப்பில் மீண்டும் ஒரு சுமுக உறவு ஏற்பட்டபடியால் படிப்பிலும், பெண்களிலும், அன்றாட அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளிலும் எமது கவனம் அதிகரித்தது. முன்பு இருந்த நிலை எமக்குள் அடிபடுவதில் இருந்தது.
உதாரணமாக, வடக்கு நபர் தெற்குப் பகுதி செல்வதிலும் தெற்கு நபர் வடக்குப் பகுதி செல்வதிலும் சில பிரச்சினைகள் இருந்தன. என் மீது இருந்த ஒரு இயக்க மாயை காரணமாக எனக்கு அவ்வாறு பிரச்சினைகள் இருக்கவில்லை.

நான் ரமேசையும் பரமேஸ்வரன் போன்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். நாம் பயிற்சி பெறும் நோக்கோடு அவரை அணுகிய போது அவர்கள் எமது கல்வியின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிக் குறைந்தளவு பாடசாலைப் படிப்பை முடித்தவுடன் இதைப் பற்றிப் பேசலாம் என்றார்கள். ஆனால் பொது வேலைகளில் எம்மை ஈடுபடுத்தினார்கள்.
கூட்டணியினரின் மகாநாடு ஆவரங்காலில் நடைபெற்ற போது பல நாட்களாக பரமேஸ்வரனுடன் சேர்ந்து வேலைகளில் பங்கு பற்றினோம்.

*யாழ் நூலகம் எரிக்கப்பட்டது!*

80 ஆம் ஆண்டு சாதாரண தரப் பத்திரப் பரீட்சை முடிவுகளின் பின் எமது கிராமத்துப் பாடசாலையில் நாம் விரும்பிய மேற்படிப்பு இல்லாததால் யாழ்ப்பாண நகரப் பாடசாலையில் அனுமதியைப் பெற்றுச் செல்ல நேர்ந்தது. நான் ஒரு கல்லூரிக்கும் ரமேஸ் இன்னொரு கல்லூரிக்கும் சென்றோம். 81 ஆம் ஆண்டு யாழ் நூலகம், கடைகள், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் போன்றவை எரிக்கப்பட்டபோது பரமேஸ்வரன் மற்றும் இரு நண்பர்கள் நான் நால்வருமாக காலை வேளையில் மிகவும் பதட்டமான சூழ்நிலையில் சைக்கிளில் யாழ்ப்பாணம் சென்றோம். மாவட்ட சபைத் தேர்தல் அடுத்த நாட்களில் நடைபெற இருந்ததால் எமது கிராமத்திலுள்ள பொலிஸ் நிலையத்தில் மேலதிக பொலிசாரும் இராணுவத்தினரும் இருந்தனர். யாழ் நூல் நிலையத்தைப் பார்வையிட்டு ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது இராணுவம் ஒரு ஜீப்பில் வந்து கொண்டிருந்தது. பலரும்




இடத்தை விட்டு உடனடியாக நகர்ந்து கொண்டிருக்கும் போது பரமேஸ்வரன், 'இவங்களை ஓடப் பண்ண வேணும். எனக்கு உதவி தேவை' என்று எங்களைப் பயப்படாமல் தன்னுடன் நிற்கச் சொன்னார். உடனடியாக வீதி திருத்திய பின் மிஞ்சி இருந்த கற்களை பொறுக்கி சாறத்தில் போட்டுக் கொண்டார். என்னை சைக்கிளுடன் நிற்குமாறும் தான் சொல்வதைச் செய்யுமாறும் கூறினார். இராணுவ ஜீப் எம்மைத் தாண்டியவுடன் கற்களை வீசத் தொடங்கினார். ஜீப் உடனே நின்று இராணுவத்தினர் இறங்கினார்கள். 'எறியுங்கடா கல்லை' என்றவுடன் நாம் மூவரும் மற்றும் இராணுவத்தினைக் கண்டு மெல்லமாக நகரத் தொடங்கிய பலரில் சிலரும் திரும்பி வந்து கல்லெறியத் தொடங்கினோம். கற்களை எறிவார்கள் என எதிர்பார்க்காத இராணுவத்தினர் உடனடியாக ஜீப்பில் ஏறிக் கொண்டனர். ஜீப்பைக் கலைத்துக் கொண்டு சென்று கல் எறிந்தோம். இதனால் பெரிய வெற்றியைக் கண்டவர் போன்ற மனநிலையில் அங்கிருந்தவர்கள் எல்லோரும் இருந்தனர்.

> **இராணுவ ஜீப் எம்மைத் தாண்டியவுடன் கற்களை வீசத் தொடங்கினார். ஜீப் உடனே நின்று இராணுவத்தினர் இறங்கினார்கள். "எறியுங்கடா கல்லை" என்றவுடன் நாம் மூவரும் மற்றும் இராணுவத்தினைக் கண்டு மெல்லமாக நகரத் தொடங்கிய பலரில் சிலரும் திரும்பி வந்து கல்லெறியத் தொடங்கினோம். கற்களை எறிவார்கள் என எதிர்பார்க்காத இராணுவத்தினர் உடனடியாக ஜீப்பில் ஏறிக் கொண்டனர். ஜீப்பைக் கலைத்துக் கொண்டு கல் எறிந்து பெரிய வெற்றியைக் கண்டவர் போன்ற மனநிலையில் அங்கிருந்த நாங்கள் எல்லோரும் இருந்தோம்.**

இது மூன்று நிமிடமளவில் தான் நிலைத்தது என்றாலும் அன்று எனக்கேற்பட்ட உணர்வு நிலை பின்பு முக்கிய முடிவுகளை எடுப்பதில் உதவியது. இந்தக் கால கட்டத்தில் ஒரு ஜீப்பில் இராணுவம் திரிவது என்பது சாதாரணமான விசயம். பொலிஸ்காரர்கள் லைற் இல்லாதவர்களைப் பிடிப்பதும் ஒரு வழிப்பாதையால் பிழையான பகுதியில் வருபவர்களைப் பிடிப்பதும் அன்று சர்வ சாதாரணம்.

*பரமேஸ்வரன் கொலை!*

இந்தச் சம்பவங்களின் பின் மிகவும் பதட்டமான சூழ்நிலைகளில் முதலில் சொன்னவாறு நான் வீட்டில் படுப்பதைத் தவிர்த்தேன். யாழ்ப்பாணத்திற்குச் சென்ற இரண்டாவது இரவு அதாவது மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல் அன்று காலை பரமேஸ்வரனும் மற்றும் சில இளைஞர்களும் கொல்லப்பட்டதாகவும் இதுவரை நான்கு இடங்களில் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் செய்திகள் வந்தன. பரமேஸ்வரனுடன் கடைசி நாள் வரையும் தொடர்புடையவனாக இருந்த எனக்கு இந்தத் தகவல் பெரிய தாக்கத்தை உருவாக்கியது. பரமேஸ்வரன் மட்டும் தான் கொலை செய்த பொலிஸ்-இராணுவத்தின் குறிக்கோளா அல்லது அவருடன் சேர்ந்தவர்களும் தானா? அப்படி என்றால் நாம் எவ்வாறு தப்புவது? கொலை செய்தவர்கள் யார்? பொலிஸா அல்லது இராணுவமா? யார் காட்டிக் கொடுத்தார்கள்? இனி என்ன செய்வது? மரணச் சடங்கை எவ்வாறு நடத்துவது? விசேடமாக அன்று ஊரடங்குச் சட்டம் இரவிலிருந்து காலை வரை இருந்தது. யாருடன் எவ்வாறு தொடர்பு கொண்டு எந்த முடிவை எடுப்பது என்பது ஒரு உடனடியான தேவையாக இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன் யாழ்ப்பாணம் சென்ற மற்ற இருவரும் தலைமறைவாகி விட்டனர். எனக்கு என் வீட்டிலிருந்தும் பரமேஸ்வரன் வீட்டிலிருந்தும் வந்த தகவல்கள் என்னை வெளியால் வரவேண்டாம் என்றும் செத்த வீட்டிற்கோ சுடலைக்கோ வரவேண்டாம் என்பதுமாகும். பரமேஸ்வரன் மீது எனது கிராமத்தவர்கள் அதிகளவு மரியாதை வைத்திருந்தார்கள். எனது கிராமத்தின் பயிர்ச்செய்கை உத்தியோகத்தராகப் பரமேஸ்வரன் இருந்தும் அவரின் இறப்பிற்கு ஒழுங்கான மரியாதை செலுத்தக் கூட முடியாத சூழ்நிலை இருந்தது. ஊரடங்குச் சட்டம், பொலிஸ், இராணுவக் கெடுபிடி போன்றவைபயங்கரமாகஇருந்தன. அதுவரை காலமும் மாவட்டச் சபைத் தேர்தலை முழுதாக ஏற்றுக் கொள்ளாத மக்களும் இந்த நிலைமைகளினால் மனம் மாறி முழு உற்சாகத்தோடு 3 மணிக்குப் பின் திறக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தில் கூட்டணிக்கு வாக்களித்து விட்டு வந்தனர்.

*விமானப் படை அதிகாரி யிடமிருந்து ஆயுதப் பயிற்சி!*

பரமேஸ்வரனுக்கும் மற்றும் சில இளைஞர்களுக்கும் ஆயுதப் பயிற்சி அளித்த நபரைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். கபிலன் என்பவர் ஸ்ரீ லங்கா விமானப்படையில் அதிகாரியாக இருந்தவர். விடுமுறைக்காக வீட்டிற்கு வரும் போது இவர்களுக்குப் பயிற்சி கொடுத்தார். இந்த கபிலனின் பங்களிப்பு அந்தக் கால கட்டத்தில் பெரிய பங்களிப்பாகும். இந்தக் கபிலன் பின்னர் வெளிநாடு சென்று விட்டார். இன்றைய கால கட்டத்தில் பிரபாகரனின் வாழ்க்கையும் அவரின் சகாக்களின் நடவடிக்கைகளையும் மட்டுமே போராட்டமாகவும் வரலாறாகவும் மக்கள் மத்தியில் கட்டமைத்துக் காட்டப்படுகிற ஒரு போக்கு இருக்கிறது. எவ்வளவு மக்களுக்கு பரமேஸ்வரன் போன்றவர்களின் வரலாறும் தியாகமும் கபிலன் போன்றவர்களின் அர்ப்பணிப்பும் தெரியும். உண்மையில் அவ்வாறு விடயம் தெரிந்தவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

*ஈழ மாணவர் பொது மன்றம்*

81 காலக் கடைசிப் பகுதியில் முதலில் குறிப்பிட்ட *ரமேஸ்* தற்போது வேறு பாடசாலையில் படிப்பதால் மாதத்திற்கு ஒரு தடவை தான் நாம் சந்திப்போம். அவ்வாறான ஒரு சந்திப்பின் போது ஈழ மாணவர் பொது மன்றம் (GUES) பற்றியும் தனது பங்களிப்பைப் பற்றியும் கூறி என்னையும் அதில் சேர்ந்து பங்களிக்குமாறு அவர் கேட்டார். ஒரு சில சந்திப்புக்களின் பின் அவர்களின் வகுப்புக்களுக்குச் சென்றேன். அவர்களின் வகுப்புக்களில் தான் பல்வேறு நாட்டின் விடுதலைப் போராட்டங்களைப் பற்றியும் மக்கள் போராட்டங்களைப் பற்றியும் அடிப்படை அறிவுகளைப் பெற்றேன். அவர்களின் பிரச்சார வேலைகளிலும் சுவரொட்டி ஒட்டுதல், பத்திரிகை விற்பனை போன்றவற்றிலும் கடைசியாக பாத யாத்திரையிலும் ஈடுபட்டேன். அந்த வேலை முறைகளில் முழுமனதோடு ஈடுபட்டாலும் பின்னர் இராணுவ நடவடிக்கைகள், இராணுவப் பயிற்சி என்ற கேள்விகள் எழுந்த போது அவர்களிடம் ஒழுங்கான பதில் கிடைக்கவில்லை. அப்போது எனக்கு இருந்த மனநிலை சுவரொட்டிகள் ஒட்டிக் கொண்டும், பத்திரிகை விற்றும் கொண்டும் மட்டும் போராட்டம் நடத்த முடியாது என்பதாகும். எப்போது இவர்கள் துவக்கைக் காட்டுவார்கள் என்பதே எனது ஆவலாக இருந்தது. பாத யாத்திரைப் போராட்டத்தின் பின் எனது பங்களிப்பைக் குறைத்துக் கொண்டேன். உயர்தர பரீட்சைகளும் என்னுடன் வேலை செய்த GUES தோழர்களின் தலைமறைவும் தான் காரணம்.

*1983 இல் 13 இராணுவத்தினரின் கொலையும் மக்கள் போராட்டமும்*

1983 இல் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட இடத்திற்கு எனது நண்பர்களுடன் சென்றபோது இராணுவத்தினர் 13 பேர் இறந்ததிற்குப் பதிலாக இராணுவம் பழிவாங்கிய இடங்களையும் ஏற்படுத்திய அழிவுகளையும் நாம் பார்த்தோம். வெறும் வேடிக்கை பார்க்கச் சென்ற எம்மில் பலருக்கு இவ்வகையான தாக்குதலினால் ஏற்பட்ட அழிவுகள் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன. நான் ஏன் இதை எழுதுகிறேன் என்றால், 83 இனப்படுகொலைகளின் பின் இயக்கங்களில் சேர வேண்டும் என்ற முடிவில் இருந்த எனக்கு புலிகளுடன் சேர வேண்டும் என்ற துளி ஆசையும் இல்லாதிற்கு இதுவும் ஒரு காரணமாகும் என்பதைச் சொல்லத் தான். வேறு காரணங்களும் இருந்தன. GUES போன்றவற்றில் வேலை செய்ததில் மக்கள் போராட்டம் சம்பந்தமான குறைந்த பட்ச அறிவும் அதன் மூலம் கொள்கைகள், தத்துவங்கள் என்பவை பற்றிய குறைந்த பட்ச அறிவும் போராட்டத் தலைமைத்துவம் என்பது தனிநபரின் விருப்பு வெறுப்பில் இருப்பதல்ல என்ற தெளிவும் எனக்கு இருந்தது.

**தொடரும்**

நன்றி - நூலகத்திட்டம்



## பாராளுமன்றத் தேர்தல்:

# பேரினவாத கட்சிகளிடம் விலைபோன மலையக பிரதிநிதிகள்!

நேசன்

11 வது பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்திருக்கிறது. 1947ம் ஆண்டு 7 உறுப்பினரைக் கொண்டிருந்த மலையகத் தமிழர்கள் 1994ம் ஆண்டு 10 உறுப்பினராகி 2000ம் ஆண்டு தேர்தலில் 5 ஆக குறைந்து சாதனை புரிந்திருக்கிறார்கள்.

கடந்த 60 ஆண்டுகளாக மலையகத் தொழிலாளரிடையே ஏகபோக இயக்கமாக தன்னை முன்னிறுத்திவரும் இ.தொ.கா. மலையகத் தமிழரின் அரசியல் வாழ்வுக்கு ஒரு முகவரி தேடித்தர முடியாததாகி-யிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக மலையகத்தில் மாற்றம் வேண்டி குரல் கொடுத்து வந்த மலையக மக்கள் முன்னணி முகவரியை தொலைத்துவிட்டு தனித்துவங்களையெல்லாம் பேரினவாதிகளிடம் தாரை வார்த்திருக்கிறது. தம் சுய அடையாளங்களையே அடைமானம் வைத்தபின் மக்களிடம் தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்போம் என்று முழங்கிய கோசம் நுவரெலியாவைத் தவிர அனைத்து மாவட்டங்களையும் செல்லாக் காசாகியிருக்கிறது.

சிங்கள பௌத்த பாராளுமன்றத்தில் இருக்கும் ஒவ்வொரு கணமும் ஈழ, மலையக, முஸ்லிம் தேசங்கள் மீதான பேரினவாத அழித்தொழிப்புக்களை, அவமானங்களை, துரோகங்களை ஒவ்வொரு தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரும் நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை நசுக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தை ஏற்றுக் கொண்டு சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு மாதாமாதம் அவசரகாலச் சட்டத்துக்கு ஆலவட்டம் பிடித்துக் கொண்டு தமிழர் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கப் போவதாகவும், தமிழரின் தன்மானம் காக்க வாக்களிக்குமாறும் கோரும் தமிழ்க் கட்சிகளிடையே மலையக கட்சிகள் தனித்துவம் மிக்கவை.

25 ஆண்டுகால அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து நின்றவர்கள் தொண்டமான்கள். அதன் மூலம் மலையகத் தமிழர்கள் மீதான இன அழிப்பையோ, கலாசார அழிவையோ திட்டமிட்ட குடியேற்றங்களையோ சிறையில் தள்ளப்படும் இளைஞர்களை பற்றியோ எள்ளவும் கவலையுமின்றி கையுயர்த்துதலை ஒரு வேள்வியாக கொண்டிருந்தவர்கள் மலையகப் பிரதிநிதிகள்.

1977ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டுவரை பாராளுமன்ற தேர்தல்களில் ஐ.தே.கட்சிக்கு முண்டுகொடுத்து வந்த இ.தொ.கா. தலைமைத்துவம் 1994ம் ஆண்டும் கூட அக்கட்சியின் முதுகில் இருந்தவாறு பொ.ஐ.முவை ஆதரித்ததோடு மத்திய மாகாண அமைச்சு பதவிகளையும் தனதாக்கிக் கொண்டிருந்தது. இவ்வாண்டு தேர்தல்களுடன் பொ.ஐ.மு சங்கமாகிவிட்ட இ.தொ.கா தலைமைகள் தமது அமைச்சர் பதவிகள் சுகபோகங்களை பாதுத்துக் கொள்ள மக்களை மீண்டும் நிபந்தனையின்றி ஒரு பேரினவாதக் கட்சிக்குத் தாரை வார்த்துள்ளன.

ஆனால், மக்கள் ஒன்றும் மதிகெட்டுப் போய் விடவில்லை. இவர்கள் கற்றுத்தந்த அரசியல் அநாகரீகங்களை தூக்கி எரித்திருக்கிறார்கள். எங்கெங்கு மாற்று தலைமைத்துவத்துக்கான வாய்ப்பு காணப்பட்டதோ அங்கெல்லாம் மாற்று தலைமைகளை அங்கீகரிக்க முன்வந்திருக்கிறார்கள்.

பேரினவாத சக்திகளின் சதியில் அகப்பட்டுக்கொண்ட டசின் கணக்கான கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் களத்தில் இறங்கிய போதும் நுவரெலியா மாவட்ட தமிழ் வாக்காளர்கள் இ.தொ.கா, ம.ம.மு. வேட்பாளர்களான ஐந்து தமிழர்களை - பேரினவாத கட்சிகளில் போட்டியிட்ட - போதும் தெரிவு செய்திருக்கிறார்கள்.

இ.தொ.கா மாற்றுக்குழு உறுப்பினரான சதாசிவத்தின் வெற்றி மலையக அரசியலில் மூன்றாவது அணியொன்றின் உதயத்துக்கான வாய்ப்புக்களை முன்னிறுத்தி இருக்கிறது.

நுவரெலிய்ா மாவட்ட உறுப்பினர் எண்ணிக்கை 8 இல் இருந்து 7 ஆக குறைக்கப்பட்ட போதும், 4ல் இருந்து 5 ஆக பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளது.

பொ.ஐ.முவும், ஐ.தே.கவும் ஏட்டிக்குப் போட்டியாக தலா மும்மூன்று வேட்பாளர்களை நிறுத்திய போதும் மக்கள் 6 பேரையும் பாராளுமன்றம் அனுப்ப முயன்றிருக்கிறார்கள்.

12 அரசியல் கட்சிகளும் 9 சுயேட்சைக் குழுக்களும் ஒட்டுமொத்தமான தோல்வியைத் தழுவியுள்ளன.

இவை அனைத்தும் மக்களின் மதியூகத்தினால் நேர்ந்தவை தான். மாறாக அரசியல்வாதிகளின் மேதாவித்தனம் என இதனை நினைப்பார்களானால் ஏனைய மாவட்டங்களில் நேர்ந்த கதி இங்கும் நேருவதற்கு நாட்செல்ல மாட்டாது.

பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட மலையகத் தமிழ் வேட்பாளர்களான சென்னன், அரவிந்தகுமார், சச்சிதானந்தன் ஆகியோர் வெவ்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியபோதும், 60,000 வாக்குகளை ஒட்டுமொத்தமாகப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், ஒருவரும் தெரிவாகவில்லை. இ.தொ.காவின் மாற்று அணியைச் சோந்த சென்னனை தோற்கடிக்க இ.தொ.கா ஊவா தமிழரின் அபகீர்த்திமிக்க அமைச்சரான சச்சிதானந்தனை நிறுத்தியது. மலையக மக்களின் முன்னணி வேட்பாளராக ஐ.தே.க பட்டியலில் போட்டியிட்ட அரவிந்தகுமாரும், சென்னனும், எதிரும்புதிருமாக வாக்குக் கேட்கப்போய் இரண்டும் கெட்டவர்களாக ஆக்கப்பட்டார்கள். ஆக குறுகிய அரசியல் நலன்களுக்காக 80,000 பதுளை மாவட்ட தமிழர்கள் முகவரி இழந்து போனவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

கண்டி மாவட்டத்தில் 50 ஆண்டுகளின் பின் 1974ல் பெறப்பட்ட தமிழ் பிரதிநிதித்துவம் 6 ஆண்டுகளில் இழக்கப்பட்டிருக்கிறது. இ.தொ.கவின் மாற்றுக் குழுவைச் சேர்ந்த ராஜரட்ணத்தின் வெற்றியை நிர்மூலமாக்க இ.தொ.கா. தன் வேட்பாளர்களை நிறுத்தியதோடு மட்டுமன்றி 60,000க்கும் மேற்பட்ட தோட்டப்பகுதி தமிழ் மக்களின் வாக்காளர் அட்டைகள் பறிக்கப்பட்டு ஆளும் கட்சிகளின் அமைச்சர் தலைமையிலான குண்டர்களால் நடத்தப்பட்ட காடைத்தனங்களை தட்டிக் கேட்கவும் திராணியற்றுப்போய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நுவரெலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி, மாவட்டங்களில் ஏறக்குறைய ஒரு இலட்சம் மலையகத் தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்கவிடாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். சற்றேக்குறைய அதே அளவான வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெறவில்லை. வாக்குரிமை பெற்றுக் கொடுத்திருப்பது வெறும் சாதனை என விண்ணதிர முழங்குகின்றவர்களால் மறைமுகமாக மலையகத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாமல் போய் விட்டது.

### இ.தொ.கா. எதிர்கொள்ளும் நெருக்கடியும் பின்னடைவும்

மலையகத் தமிழர்களின் பிரதிநிதிகளாக 9 பேரை தமது கட்சி மூலம் கொண்டிருந்த இ.தொ.கா. இத்தடவை 3 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளதன் மூலம் கடந்த ஆறு ஆண்டுகளாக படிப்படியாக அடைந்துவந்த அரசியல் வீழ்ச்சியின் எல்லையைத் தொட்டிருக்கிறது.

தேர்தல் என்கிற தேசத் துரோகிகளின் தெருக்கூத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம், அரசியல் கைதிகளின் விடுதலை, 6லட்சம் மலையகத் தமிழரின் பிரஜாவுரிமை, தோட்டத் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு, அதிகாரப் பரவலாக்கலில் மலையகத் தமிழரின் நிலை என்பவனவெல்லாம் பேசாப் பொருளாக்கப்பட்டு விட்டன. போலி தேர்தல் கால் வெற்று வாய்வீச்சுக்களோடு மக்கள் மீண்டும் ஒரு தடவை ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

ஆக, நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் மூலம் மலையகத் தமிழர்களின் இனத்துவ இருப்பை பேரினவாதக்கட்சிகளிடம் தாரைவார்த்திருக்கிறார்கள் இவர்கள். வழமையாக இக்கட்சிகளுடன் தாம் ஒப்பந்தம் செய்துள்ளதாக வாய் சவடால் விடும் மலையகக் கட்சிகள் இத்தடவை வாலைச் சுருட்டிக் கொள்ள வேண்டியது தான்.

பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் மூலம் மலையகத் தலைவர்கள் சாதிக்கப் போவது ஒன்றுமில்லை என்பது கடந்த 6 ஆண்டுகளில் ஐயம் தெளிவுற வெட்டவெளிச்சமாகியிருக்கிறது.

இந்த லட்சணத்தில் தான் தேர்தல் திருவிழாவுக்கு நூற்றுக்கணக்கான அப்பாவி மலையகத் தமிழர்கள் பலியிடப்பட்டிருக்கிறார்கள். ஒரு மாபெரும் ஜனநாயக மோசடியாக இடம்பெற்ற இத் தேர்தலில் பதுளையில், இ.தொ.கா. மாற்றுக்குழு உறுப்பினர் சென்னன் ஆதரவாளர்கள் இ.தொ.கா. குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளார்கள். லுணுகலைப் பகுதியில் இடம் பெற்ற ஒரு வன்முறைச் சம்பவம் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரின் நேரடி வழிநடத்தலிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் இராஜரட்ணத்தின் ஆதரவாளர்களை தாக்கிய இ.தொ.காவினரும் ஆளும் கட்சி ஆதரவாளர்களும் 60ஆயிரம் தொழிலாளரை வாக்களிக்க விடாமல் தடுத்துள்ளனர்.

தேர்தல் தினத்தன்று இராஜரட்ணத்தை பகிரங்கமாகத் தாக்கியதோடு அவரது கண் முன்னாலேயே புசல்லாவையில் அவரது ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பத்தனையில் ம.ம.மு. பிரச்சாரக்கூட்ட மேடை சேதப்படுத்தப்பட்டு கட்சி அலுவலகமும் நொறுக்கப்பட்டது. பொலிஸ் துப்பாக்கிச்சூட்டில் ஒரு தொழிலாளி கண் இழந்தார். 8 பேர் படுகாயமடைந்தனர்.

தேர்தல் பிரச்சாரங்கள் முடிந்த கையோடு பொக்வந்தலாவ ஒல்ட்டி தோட்டத்தில் சிவபெருமான், துரைராஜ், நீலவர்ணன், பாலகிருஷ்ணன், அமிர்தலிங்கம் ஆகிய ம.ம.மு. ஆதரவாளர்கள் கடுமையாக தாக்கப்பட்டு பலத்த காயங்களுக்குள்ளக்கப்பட்டார்கள். நோவூட், வெரீசர், தோட்டத்தில் பிலிப்ராஜ், ஜோர்ஜ் ஆகியோர் வெட்டிப் போடப்பட்டனர். பஸ்ரியன் என்பவரின் வீடும் சேதப்படுத்தப்பட்டது.

புளியாவத்தையில் அம்பகமுவ பிரதேச சபை தலைவர் ரவீந்திரனின் வீடு இரண்டு தடவை இ.தொ.கா. குண்டர்களால் தாக்கப்பட்டதோடு தேர்தல் நடந்து முடிந்த கையோடு புளியாவத்தை தோட்டத்தில் பலர் வெட்டப்பட்டுள்ளனர். கிட்டதட்ட ஒரு கொலை வெறித்தனத்தோடு, மலையகம் எங்கும் காட்டுமிராண்டித்தனமான காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

பொலிஸ் நிர்வாகம், எவ்விதமாக ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் எடுக்கத் தயங்கும் நிலையில் இ.தொ.காவினதும், ஆளும் கட்சியினதும் காடைத்தனம் கட்டுமீறிப்போயிருக்கிறது.

தேர்தல் பகிஷ்கரிப்பை கோரியும், மலையக இளைஞர்களின் விடுதலை, தோட்டகாணிகள், அபகரிக்கப்படுதல், தொழிலாளர் விரோத ஒப்பந்தங்களை கிழித்தெறிதல், என்பவற்றை வலியுறுத்தீ இளம் பாட்டாளிகள் கழகம் மலையகமெங்கும் வெளியிட்ட துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் என்பன இ.தொகாவினரால் உடனுக்குடன் அகற்றப்பட்டன.

மக்களை அச்சுறுத்தி, ஏமாற்றி, மயக்கியது மட்டுமல்ல திட்டமிட்ட முறையில் வாக்குசாவடிகள் தோறும் போடப்பட்ட கள்ள வாக்குகள், தேர்தல் கடமைக்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளே மோசடிகாரர்களாக இருந்தமை, திட்டமிட்ட வாக்கு மோசடிகட்கு கடைவிரிக்கப்பட்டமை என்பன காரணமாகவே அரசும் அதன் வாடிக்கை கட்சிகளும் மலையகத்தில் வெற்றி பெற்றுள்ளன.

மக்கள் துரோக கும்பல்களின் வெற்றி நிலையானதல்ல. மக்கள் மாற்று வழியின்றி வாக்களிப்பில் பங்கு கொண்டிருந்தாலும், எதிர்வரும் காலம் தீர்க்கமான அரசியல் படிப்பினைகளை இக்கும்பல்களுக்கு புகட்டும் என்பதில் ஐயமில்லை. ⊗

**கடந்த 60 ஆண்டுகளாக மலையகத் தொழிலாளரிடையே ஏகபோக இயக்கமாக தன்னை முன்னிறுத்தி வரும் இ.தொ.கா. மலையகத் தமிழரின் அரசியல் வாழ்வுக்கு ஒரு முகவரி தேடித்தர முடியாதவர்களாகியிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக மலையகத்தில் மாற்றம் வேண்டி குரல்கொடுத்து வந்த மலையக மக்கள் முன்னணி முகவரியை தொலைத்து விட்டு தனித்துவங்களையெல்லாம் பேரினவாதிகளிடம் தாரை வார்த்திருக்கிறது. தம் சுய அடையாளங்களையே அடைமானம் வைத்த பின் மக்களிடம் தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்போம் என்று முழங்கிய கோசம் நுவரெலியாவைத் தவிர அனைத்து மாவட்டங்களையும் செல்லாக் காசாகியிருக்கிறது.**

நன்றி - நூலகத்திட்டம்




# பேரினவாதத்தை ஒழிக்க பெரும்பான்மைக் கட்சிகளுடன் கூட்டு!

## மலையகத் தமிழ் கட்சிகளின் புதிய சித்தாந்தம்!!

மலையகத் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் அங்ஙனமின்றி ஐதாக வாழும் பகுதிகளிலும் இம்முறை மலையகக் கட்சிகள் போட்டியிட்டன. எல்லாமாக எட்டு எம்.பிக்கள் தெரிவாகியுள்ளனர். இது 1994 தேர்தலில் தெரிவானவர்களைவிடக் குறைவானது தான். ஆனால், கட்சி கட்டி நின்றும், இத்தனை ஆசனங்களைப் பெற்றுக் கொண்டமை வியப்பானது தான். 1947இலிருந்து பெரிய தொழிற்சங்கமாக விளங்கி வந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதனது உச்ச-நிலைக்குப் போய் தற்போது இறங்கு முகமாக வந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் 1978இலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டதான விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் அடிப்படையில் மலையக அரசியல் எப்படியிருக்கும் என்பதை ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காலஞ்சென்ற அமைச்சரும், இ.தொ.கா ஆயுட்காலத் தலைவருமாக இருந்த தொண்டமான் பழுத்த அரசியல்வாதி தான். ஆனால், அந்தளவுக்கு அவர் 'இரும்புப்பிடி' மனிதராக, இ.தொ.காவைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். தனது தலைமைக்குச் சவாலாக



வரக்கூடியவர் என்று அவரால் சந்தேகப்படும் எவருமே காங்கிரசுக்குள் நீண்டகாலம் இருந்திட முடியவில்லை. இது ஜனாப் அசீஸ் தொடக்கம் சந்திரசேகரன், செல்லச்சாமி வரையாக நீடித்த கதை தான். வளர்ந்த ஆலமரம் தனக்குக் கீழே தனது விழுதுகளைப் பரப்பித் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளுமே தவிர வேறு மரங்களைத் தனது பக்கத்தில் வளரவிடுவதில்லை. தொண்டமான் இந்த விதமாகப் பழுத்த ஆலவிருட்சமாகவே திகழ்ந்தார். இதன் காரணமாகவே இ.தொ.காவிலிருந்து பலர் படிப்படியாக கழற்றி விடப்பட்டனர். இங்ஙனம் அகற்றப்பட்டவர்கள் ஓரளவு செல்வாக்கினைத் தனிப்பட்ட ரீதியில் கொண்டிருந்தனர் என்பதில் சந்தேகமிருந்ததேயில்லை.

தொண்டமான் உயிருடன் இருக்கும் போதே இ.தொ.காவுக்குள் ஏற்பட்ட சரிவு அரவது மறைவின் பின்னரும் சரிசெய்யப்பட்டதா என்பதே வினா. இதற்கும் இல்லையென்றே விடைகூற வேண்டும். புதிய தலைமையின் கீழ் இளைஞர்கள், முன்னின்று காங்கிரசை வழிநடாத்துவார்கள் என்று எதிர்பார்க்க - எவரும் அங்கனம் பொறுப்பேற்க முன்வரவில்லை. மறுசீரமைப்பு என்பது எந்தவொரு வடிவத்திலும், கடந்த ஓராண்டு காலத்துக்குள் நடைபெறவில்லை. இ.தொ.காவிலிருந்து வெளியேறியோருக்கு இது மகிழ்வூட்டும் விடயமாவதுடன் தாங்கள் கூறியது சரியே என்றும் வாதிடச் செய்தது. ஆனால், பழைய தலைமைகளுடன் சேர்ந்து செயற்பட முடியாதவர்களுக்கு வெளியே போவதைத் தவிர வேறு வழியிருந்திடவில்லை என்பது உண்மையே.

### தனியாகவா கூட்டாகவா?

இ.தொ.கா. தனது கட்சிச் சின்னமாகச் சேவலைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அது அச்சின்னத்தில் போட்டியிட்டதைவிட வேறு சின்னங்களில் போட்டியிட்டதே அதிகம் என்று கூறவேண்டும். குறிப்பாக, பேரினவாதக் கட்சிகள் என்று அவர்களே குறிப்பிடும் ஐக்கிய தேசியக் கட்சியுடனும், பொதுஜன ஐக்கிய முன்னணியுடனும் சேர்ந்து போட்டியிட்டுள்ளார்கள். இந்திய வம்சாவளிப் பேரவை என்ற பெயரிலும் சின்னம் மாறிப் போட்டியிட்டுள்ளார்கள். இ.தொ.கா. போன்றதொரு பெரிய நிறுவனம் ஏன் இப்படிக் கூட்டுச் சேர்ந்து போட்டியிட வேண்டும்? இதன் மூலம் செய்யபடவேண்டியேற்படும் சமரசங்கள் தோட்டத் தொழிலாளர்ளைப் பாதிப்பதாகாதா? தனித்து நின்றால், என்ன நடக்கும்? இதற்கு இக்கட்சியின் முக்கிய பிரமுகர்களிடையே விடை தேடியிருக்கின்றேன். அவர்கள் மூன்று காரணங்களைக் கூறினார்கள். இப்போதும் இதையே கூறக்கூடும். அவை தான் என்ன?



விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையின் கீழ் இ.தொ.கா. தனித்துப் போட்டியிட்டால் - கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டால், கிடைக்கும் ஆசனங்களைவிட நிச்சயமாகக் குறைவாகவே கிடைக்கும் என்பது முதலாவது காரணம். "எங்களுக்குள்ளேயே பிளவுகள் இருக்கும் போது நாம் தனித்து நின்றால், நிச்சயம் தோல்வி கிட்டும்" என்ற இந்த இரண்டாவது காரணத்தில் முதலாவது காரணமும் அதாவது தேர்தல் முறைமையும் தொட்டுச் சொல்லப்படுகின்றது. மாவட்ட ரீதியில் 50வீத வாக்குகள் பெற்று போட்டிக்குத் தகுதி பெறல் என்பதும் தமிழ் வாக்குகள் சிதறும் போது விருப்பு வாக்குகள் மற்றைய இனப்பிரதிநிதிக்குக் கிடைக்க முடியாது என்பதும் தெளிவான விடயங்களே. தேர்தல் முடிவுகள் பேரினவாதக் கட்சிகளுக்குச் சாதகமின்றி அமையும் போது அவர்கள் சில இடங்களில் தோட்ட மக்களை பழிவாங்குவார்கள். கலவரம் உருவாகும். சொத்துக்கள் சூறையாடப்பட்டு தொழிலாளர்கள் விரட்டப்படுவர். "இது உங்களுக்கு வாக்களித்தால் வந்தது" என்பது தொழிலாளர்கள் குற்றச்சாட்டு. எனவே மக்களையும் பாதுகாக்க வேண்டும். "குறிப்பாக அவர்கள் அச்சமின்றி வாக்களிக்க வேண்டும் என்று தலைமைகள் கூறுவதுண்டு. இதில் ஓரளவு உண்மை இல்லாமலுமில்லை.

ஆனால், அதேவேளை இது மிகவும்

> பங்குபற்றல் ஜனநாயகம் என்பதில் நம்பிக்கையுள்ள என்போன்றோருக்கு இங்ஙனம் கூட்டுச் சேர்ந்து பங்கு பற்றி 'குரலை' அடைவு வைத்து விடும் புதிய ஜனநாயகப் போக்கு பெரும் ஏமாற்றத்தையே தருகின்றது. உண்மையில் இது ஒரு இரண்டுங் கெட்டான் போக்காகும். மக்களை முற்றாகத் தேசிய நீரோட்டத்தில் கலக்க விடாமல் வைத்துக் கொண்டு வேசம் போடுகிறார்கள். அதேவேளை தனித்து நின்று தங்களது அடையாளத்தை வலியுறுத்துவதையும் அனும்திக்காமல் சாட்டுக்கள் சொல்கிறார்கள்.

வேடிக்கையானதொரு நிலைப்பாட்டையும் இலங்கையில் வேரூன்ற வைத்து விட்டது. அதாவது "தேர்தலில் எந்தக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுகின்றீர்களோ அதனுடன் பின்னர் சேர்ந்து ஆட்சியமைத்து அமைச்சராகவும், வந்து விடுகின்றீர்கள். உரிமைகளை வென்றெடுப்பதானால், அசராங்கத்துடன் அல்லவா போராட வேண்டும். அரசாங்கத்தில் நீங்கள் ஓரங்கமாக இருக்கையில் இது எப்படிச் சாத்தியம்? அது தான் தொண்டமானின் சாமார்த்தியம் என்பார்கள். ஆனால், இதில் கொள்கை வழிச் சிக்கல் உண்டு. அரசாங்கத்தில் பங்குபெறும் வரை அதனை எதிர்ப்பது என்பது கேலிக்கூத்து. அரசியல் சித்தாந்தத்துக்கும் முரணானது. மக்கள் எதிர்த்தால் அதுபற்றிக் தன்னால் சரி கட்ட முடியும் என்று தொண்டமான் நினைத்திருக்கக் கூடும்.



ஆனால், இன்று இது தொண்டா காட்டிய வழியாக முஸ்லிம் காங்கிரசையும், ஈ.பி.டி.பி-யையும் தொற்றிக் கொண்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் பிரார்த்தனையிலும், வேலைநிறுத்தத்திலும் ஈடுபடுவதற்கு தொண்டமான் அமைச்சராக இருந்த காலத்தில் முடிந்துள்ளது. ஆனால், எந்தவொரு முக்கிய கொள்கை விடயங்களிலும் தொண்டாவால் அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்க முடிந்திருக்கவில்லை. இதில் இரண்டு விடயங்களைச் சுட்டிக் காட்லாம். 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் மலையகத் தமிழர்களது பிரச்சினை பற்றிய எவ்வித ஏற்பாடுகளும் இருந்திராத போதிலும், தொண்டமான் அதனை வாய்திறந்து கேட்க முடியவில்லை. அங்ஙனமே மாதாந்தம் நிறைவேற்றப்படும் அவசரகாலச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் எதிர்த்து வாக்களிக்க இ.தொ.கா. ஆர்வம் காட்டியதேயில்லை. காரணம் என்ன? தேர்தல் கூட்டும் அதன் விளைவுகளான பலன்களுமே தான்.

ஆக, பெரும்பான்மைக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டு வென்று வந்து பேரினவாதத்தை ஒழிக்கப்போராடும் புதிய சித்தாந்தம் தற்போது ஆழமா வேரூன்றி வருகின்றது. உண்மையில் இக்கூட்டுச் சேர்வுக்கான காரணம் என்ன? வெளியில் உள்ள எதிரியைவிட உள்ளேயுள்ள எதிரி தான் ஆபத்தானாவன் என்ற நிலைப்பாடே முதன்மைக் காரணம். இதைப் பச்சையாகச் சொல்வதாக இருந்தால் தொண்டமானைப் பொறுத்தளவில் ஜனாப் அஸீசுக்குப் பின்பு சந்திரசேகரனும், செல்லச்சாமியும் ஆபத்தானவர்களாகத் தெரிந்தளவுக்கு ஐ.தே.கவோ, பொ.ஐ.முவோ ஆபத்தானதாகத் தெரிந்திருக்கவில்லை. பின்னாட்களில் காங்கிரசின் அதிருப்திக்குழுவே அங்ஙனம் ஆபத்தானதாகத் தோன்றியிருக்க வேண்டும். ஆனால், மலையக மக்களுக்கு முதலில் ஆபத்து வருவது சந்திரசேகரன், செல்லச்சாமி, சதாசிவம், தேவராஜா வகையறாக்களிடமிருந்து அல்ல என்பதை இ.தொ.கா. ஒருநாளும் ஏற்க மாட்டாது. அங்ஙனம் மறுப்பதற்குக் கொள்கை வேறுபாடுகள் காரணமுமல்ல.

முன்னர் நான் குறிப்பிட்ட மூன்று காரணங்களுள் மூன்றாவதான - செறிவுற்ற பிரதேச மக்களின் பாதுகாப்பு என்ற விடயத்தில் அவர்கள் வாக்களிக்காது தடுக்கப்படல், தேர்தலுக்குப் பின்பு வன்முறைக்கு உள்ளாகுதல் என்ற விடயங்களில் உண்மையுள்ளது எனினும், இதற்குக் கொடுக்கப்படும் விலை தனித்துவம் என்பதற்காக மட்டும் தான் இருக்க வேண்டுமா? இது விகிதாசார அளவில் இழப்புக்களையே கூடுதலாலகத் தருவதாக இல்லையா? பலாத்காரத்தினால் பணிய வைக்கலாம் என்ற நம்பிக்கையைப் பேரினவாதிகள் மத்தியில் நிலையூன்றச் செய்வதாகாதா என்பவையும் இங்கே சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

கூட்டுச் சேர்வதானால் ஆசனங்களின் எண்ணிக்கை பெருகும் என்பதும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதல்ல, மலையகக் கட்சிகள் பிரிந்து நிற்பதனால் கொழும்பு, கண்டி, பதுளை போன்ற மாவட்டங்களில் ஆசனங்கள் இழக்கப் படுகின்றன. இதனை ஈடுசெய்யும் வகையில் பெரிய கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிடுவதன் மூலம் தேசியப்பட்டியலிலும் ஓரிரு ஆசனங்களைப் பெறும் நம்பிக்கை இவற்றை ஆட்டிப் படைக்கின்றன. உண்மையான பொது வேலைத் திட்டமொன்றின் மீது ஒருபோதும் ஒன்றுபட முடியாததான பேரினவாதக் க்ட்சிகளுடன் கூட்டுச் சேர்வதானால் தேசிய நீரோட்டத்தில் சங்கமித்துவிட்ட போலித்திருப்தியை தலைவர்கள் வெளிக்காட்டலாம். ஆனால், நீறுபூத்த நெருப்பாக வாக்காளர்களிடையே இது பொறுமையைச் சோதிக்கும் ஒன்றாகத் தொடரும் என்பதனால் நிலையாதெனக் கூறமுடியாது.

ஆசனங்களின் அதிகரிப்பை நியாயமானதென ஏற்றுக் கொண்டாலுங்கூட அதனால் ஏற்படும் பயன் என்ன என்பதையும் எடைபோட்டுப் பார்க்க வேண்டும். எந்த ஒரு சட்ட மூலத்தையும் எதிர்க்க முடியாத நிலை, அவசரகாலச்சட்டத்தின் கொடுமைகள் பற்றிப் பத்திரிகைகளில் அறிக்கை செய்துவிட்டுப் பாராளுமன்றத்தில் அதற்கு ஆதரவாக வாக்க-



ளிக்கும் நிலை போன்ற மனச்சாட்சிக்கு விரோதமான செயல்களில் ஈடுபட வைப்பதற்கு மேலதிக ஆசனங்களினால் ஏற்படும் பயன் தான் என்ன? விற்பது எதனை? வாங்குவது எதனை? கட்சித்தலைமைப்பதவிக்கும் பகட்டு வாழ்க்கைக்கும் பரிசாக எம்மிடையே இன்னும் எத்தனை கட்சிகள் தோன்றப் போகின்றன?

பாராளுமன்ற உறுப்பினர் பதவி என்பது எண்ணிக்கைப் பெருக்கத்தை மட்டும் வைத்து எடை போடப்படுவதல்ல. தான் சார்ந்த அமைப்பின் தனித்துவத்தைப் பேணுவதில் எந்தளவுக்கு அப்பதவியைப் பயன்படுத்தலாம் என்பதை வைத்தே அதன் அந்தஸ்து தீர்மானிக்கப்படும். ஆனால், இலங்கையில், குறிப்பாக சிறுபான்மைத் தேசிய இனங்களின் அரசியல் அத்திசையில் செல்லவில்லை என்பது துரதிருஷ்டவசமானதும், வெட்கக் கேடானதுமாகும். எத்தகைய தனித்துவ வீரமும், அடையாளமும் ஓர் அமைச்சர் பதவிக்குள் அடக்கம் என்ற உண்மை எமக்குச் சொல்லாமல் சொல்லப்படுகின்றது. ஐ.தே.கவிலுள்ள மலையக மக்களின் பிரதிநிதிகள் அக்கட்சி அரசியலமைப்புச் சீர்திருத்தச் சட்ட மூலத்தை எதிர்க்கையில் (அல்லது கிழிக்கையில்) என்ன செய்யப் போகிறார்கள்? அவசரகாலச்சட்ட விவாதம் வரும் போது ஐ.தே.க உறுப்பினர்கள் வெளியேறிவிடுகையில் இவர்கள் என்ன செய்வார்கள்?


பங்குபற்றல் ஜனநாயகம் என்பதில் நம்பிக்கையுள்ள என்போன்றோருக்கு இங்ஙனம் கூட்டுச் சேர்ந்து பங்கு பற்றி "குரலை' அடைவு வைத்து விடும் புதிய ஜனநாயகப் போக்கு பெரும் ஏமாற்றத்தையே தருகின்றது. உண்மையில் இது ஒரு இரண்டுங் கெட்டான் போக்காகும். மக்களை முற்றாகத் தேசிய நீரோட்டத்தில் கலக்க விடாமல் வைத்துக் கொண்டு வேசம் போடுகிறார்கள். அதேவேளை தனித்து நின்று தங்களது அடையாளத்தை வலியுறுத்துவதையும் அனுமதிக்காமல் சாட்டுக்கள் சொல்கிறார்கள். திருவாசகத்தில் உள்ள ஓரடி தான் இத்தலைமைகளை எண்ணும் போது ஞாபகத்தில் வருகின்றது.

*"தந்தது உன்தனை கொண்டது*
*என்தனை*
*சங்கரா யார் கொலோ சதுரர்?"*

# 'இனவாதிகள் என்ற குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன்'

## சமகுரல்

ஜே.வி.பி. இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியமானதொரு அரசியல் கட்சியாகும். இக்கட்சி ஆரம்பத்தில் இருந்தே இளைஞர்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்று இந்நாட்டு மரபுரீதியான அரசியல் கட்டமைப்புக்கு பாரிய சவாலை ஏற்படுத்தியது. ஜே.வி.பியின் போராட்டத்தினால் இலங்கையின் அரசியல் சமூக பொருளாதாரத்தின் புதிய கட்டமைப்பின் தேவை குறித்தான கோரிக்கை அரசியல் மேடையின் மீது அடிக்கடி வலியுறுத்தப்பட்டது. ஜே.வி.பி. இலங்கை பாராளுமன்றத்தில் மூன்றாவது சக்தியாக ஆசனங்களைப் பெற்றிருக்கும் இவ்வேளை சோசலிசவாத பெண்கள் பிரிவின் தேசிய அமைப்பாளர் திமுத்து ஆட்டிகலவை நாம் சந்தித்தோம்.



திமுத்து ஜே.வி.பி. கட்சியில் 1987ல் ஆண்டு பாடசாலை மாணவியாக இருக்கும்போது இணைந்து கொண்டார். அவ்வேளை ஜே.வி.பி, ஐ.தே.க அரசாங்கத்தின் தடைக்குட்பட்ட, தலைமறைவாக செயற்படும் ஒரு கட்சியாகக் காணப்பட்டது. 1990 – 94 வரையான காலப்பகுதியில் மகியங்கனையிலும் பேராதெனிய ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது கட்சியின் பிரபல செயற்பாட்டாளராகவிருந்த திமுத்து 1994ல் ஆசிரியர் தொழிலில் இருந்து விலகி முழுநேர செயற்பாட்டாளராக ஜே.வி.பி. கட்சியுடன் இணைந்து கொண்டார். 1994 – 1996 காலப்பகுதியில் கண்டி மாவட்ட அமைப்பாளராக செயலாற்றிய திமுத்து ஆட்டிகல 1996 சர்வதேச பெண்கள் தினமன்று கட்சியின் பெண்கள் பிரிவின் தேசிய அமைப்பாளராக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டார்.

~ திலினா வீரசிங்க, ரட்னா


**ஜே.வி.பி. இவ்வாறு பெண்களை உள்வாங்கிக கொள்ள காரணமாகவிருந்த பின்புலம் எவையென்று கருதுகிறீர்கள்?**

கட்சியின் ஆரம்பம் முதலே பெண்கள் பங்களிப்பு காணப்பட்டது. பிரதேச தலைமைத்துவத்தை ஏற்ற பெண்கள் பலர் இருந்தனர். எனினும், அது பரந்த அரசியல் பங்களிப்பாகக் கருதப்படவில்லை. ஜே.வி.பி. தீவிர இடதுசாரிக் கட்சியாக காணப்பட்டது. அது காலத்துக்குகாலம் அடக்குமுறைக்கும், தடைக்கும் உள்ளானது. இக்கட்சிக்கு மரபுரீதியான அரசியல் சூழலில் இருக்கும் இந்நாட்டு பெண்களை உள்வாங்கிக் கொள்வது கடினம். எனினும் இச்சூழலிலும் கூட மறைமுகமாக அரசியலில் மாணவர்களினதும் அதன் புறம்பாக பெண்கள் பங்களிப்பும் ஓரளவு காணப்பட்டது. 88-94ல் எம்மத்தியில் இருந்த திறமையான பெண்கள் படுகொலைக்குள்ளானதன் காரணமாக அவர்களின் இழப்பு ஈடுசெய்ய இயலாததாகியது. இக்காலத்தில் முழுக் கட்சியுமே நெருக்கடிக்கும் பிரச்சினைகளுக்கும் உள்ளாகியது. மீண்டும் 1994ல் கட்சியைப் புனரமைக்கும் போது மாணவர், தொழிலாளர் மற்றும் பெண்கள் ஆகிய பிரிவுகளை மீள் அமைப்பாக்கம் செய்ய தேசிய அமைப்பொன்று தேவைப்பட்டது. இப்பின்னணியில் தான் சோசலிசவாத பெண்கள் பிரிவு தோற்றம் பெறுகின்றது. 1994ல் கடந்த கால தவறுகள், பலவீனங்கள் களையப்பட்டு மீண்டும் கட்சி புனரமைப்பு செய்யப்பட்டது. நான் சோசலிசவாத பெண்கள் பிரிவை பெண்களுக்கென தலைமைத்துவம் ஒன்று தேவை என்ற எமது கட்சி கருத்தியலை செயற்படுத்தும் ஒரு அங்கமாகவே கருதுகிறேன்.

**ஜே.வி.பியில் பெண்கள் பங்களிப்புகளை அரசியல் ரீதியாக செயற்படுத்த பின்பற்றப்படும் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகள் குறித்து விளக்கம் கூறுவதாயின்...?**

"நான் முன்னர் கூறியதைப்போல் 1994ல் கட்சியை புனரமைப்பு செய்யும்போது கட்சி தலைமையால் பெண்கள் முன்னணிக்கு வர ஏதாவது தடை இருக்குமாயின் அத்தடைகளை நீக்கி விடுவதாகவும் பெண்கள் பிரிவு கட்டியெழுப்பப்பட முயற்சி எடுப்பதாகவும் உறுதியளிக்கப்பட்டது. கட்சியில் முடிவெடுப்பதில் பெண், ஆண் என்ற பாரபட்சம் காட்டப்படுவதில்லை. கட்சியின் எந்தவொரு பதவியை ஏற்கவும் பொறுப்பு வகிக்கவும் விமர்சனம் செய்யவும் பெண்களுக்கு சம உரிமை உண்டு. சுதந்திரம் உண்டு.

தற்போது நிலவும் சமூக முறை தொடர்பாக எம்மிடம் ஒரு விளக்கம் காணப்படுகின்றது. சமூக பொருளாதார, அரசியல், கலாசார காரணங்களினால் பெண்கள் சமூக செயற்பாடுகளில் ஈடுபட தடை காணப்படுகின்றது. பெண் தாயாகவும், மனைவியாகவும், மாறுவதற்கான சூழல் காணப்படுகின்றதே ஒழிய அரசியலுக்கான படைப்பாக்கம் இவ்வாறான சூழலில் இல்லை எனலாம். இந்நாட்டில் காணப்படும் அரசியல் கட்சிகள், பெண்கள் நிறுவனங்கள், அமைப்புகளினால், இந்நிலையை மாற்ற உறுதியான தலையீடு எதுவுமே இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. "பெண்கள் அரசியல் ஈடுபடுவதைத் தவிர மனைவியாகவும், தாயாகவும் இருத்தலே பொருத்தமானது" எனக் கூறும் மகளிர் விவகார அமைச்சர் இருக்கும் நாடே இது. இந்நாட்டில் அரச தலைவிகளாக பெண்கள் சேவையாற்றினாலும் பெண்களின் அரசியல் உரிமைகளுக்காக எதுவுமே செய்யாத போக்கே காணப்படுகின்றது. எமது அமைப்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், அரசியல் பங்குபற்றல் குறித்து பெண்களை மரபுரீதியான கருத்தியல்களிலிருந்து விடுவிக்கவும் அவர்களை செயற்பாட்டு அரசியலில் ஈடுபடுத்த வாய்ப்பளிப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது. இச்செயற்பாடுகளை நாம் இரண்டு வழிமுறையில் செயற்படுத்துகிறோம். ஒன்று புறச்சூழலில் மேற்கொள்ளப்படும் தலையீடுகள். இவை எமது 'நவோதா' எனும் பத்திரிகையின் மூலம், கண்காட்சிகள் மூலம், கலந்துரையாடல்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மற்றைய நடவடிக்கையாக அரசியல் தலைவிகளை




உருவாக்குதல். இதனால் பெண்கள் தலைமைத்துவத்தை ஏற்கவும் பொறுப்புகளை வகிக்கவும், கட்சியினுள் செயலாற்றவும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது. இதற்கென நாம் தேசிய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும் ஆசனங்கள் மட்டத்திலும் அமைப்பு கட்டமைப்பு ஒன்றை கொண்டுள்ளோம். சில மாவட்டங்களைத் தவிர நாடுமுழுவதும் நாம் இவ்வமைப்புகளை கட்டியெழுப்பியுள்ளோம். அதேபோல் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் எமது கட்சியினால் முன்மொழியப்பட்ட முழு வேட்பாளர்களில் (296) 23 பேர் பெண்களாவர். இது அனைத்து கட்சிகளினதும் பெண் வேட்பாளர்களது தொகையைவிட அதிகமாகும். இதேபோல் நாம் தேசிய பட்டியலில் எமது மாகாணசபை அமைச்சரான அஞ்ஞான் உம்மா அவர்களை பா.உ.வாக நியமித்துள்ளோம். அவர் பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்கும் முதல் முஸ்லிம் பெண்மணியாவார்.

**உங்களது கட்சி தேர்தலுக்கு முன்னர் சமர்பித்த 5 ஆண்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்கள் உரிமைகள் சரத்தை பற்றி ஏதேனும் கூறுவதாயின்...?**

5 ஆண்டு திட்டத்தில் பெண்கள் பிரிவின் மூலம் மட்டும் பெண்கள் உரிமைகள் குறித்தான எமது கட்சி கொள்கைகளை விளங்கிக் கொள்வது கடினம். ஏனெனில், நாம் அத்திட்டங்கள் முழுவதும் பலதரப்பட்ட பிரிவிகளினூடே பெண்கள் உரிமைகள் குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். நாம் முக்கியமாக நம்பும் விடயம், சோசலிசம். பெண்கள் மீது சுமத்தப்படும் பொருளாதார ஆதிக்கம் குறைவடைவதுடன், பெண்கள் முகம் கொடுக்கும் அடிப்படை துன்பங்களில் இருந்து விடுபடக்கூடியதாகவிருக்கும்.

இந்த அடிப்படையிலேயே பெண்களுக்கெதிரான வன்முறைகளை அழுத்தங்களை குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். சமூகத்தில் ஏற்படும் மோசமான கருத்தியல்களை மாற்ற நாம் பிற சமவுடமை அரசுகளின் அனுபவங்களுடன் செயலாற்ற முயற்சிக்கிறோம். இதன்மூலம் அரசியல் ரீதியாக பெண்கள் முன்னணிக்கு வர தடையாக இருக்கும் விடயங்களை தகர்த்தெறிய செயலாற்றி வருகின்றோம். 5 ஆண்டுத் திட்டத்தின் மூலம் நாம் விசேட அவதானங்களை குறிப்பாக வரதட்சணை ஒழிப்பு, திருமணத்தில் தீர்மானம் எடுக்கும் உரிமையை பாதுகாக்க, குழந்தைகள் பெறும் உரிமைகள் குறித்து தீர்மானம் எடுக்க மற்றும் பெண்கள் உரிமைகளை பாதுகாக்கும் அதிகார குழுவொன்றை உருவாக்கல் ஆகியவற்றை முன்மொழிந்துள்ளோம்.

**உங்களது கட்சி தலைவர்கள் 5 ஆண்டு திட்டத்துடன் இந்நாட்டு பிரதான புத்தபிக்குகளை சந்தித்தமை. அரசியமைப்பை நிராகரித்தமை என்பன தமிழ். முஸ்லிம் மக்கள் மத்தியில் உங்களது கட்சி இனவாத கட்சியாக முத்திரை குத்த உதவியுள்ளது. இது பற்றி தங்களது கருத்து யாது?**

நாம் 5 ஆண்டு திட்டத்தை பிக்குகள் முன் மட்டும் சமர்பிக்கவில்லை. பிற அனைத்து மதத் தலைவர்களுக்கும் அவை சமர்ப்பிக்கப்பட்டன. அவர்களது யோசனைகள், அறிவுறுத்தல்கள் ஆராயப்பட்டன. உதாரணமாக கியூபா போப்பாண்டவரை அழைப்பித்து பிற முதலாளித்துவ அரசுகளின் எள்ளி நகையாடல்களுக்குள்ளானது. பிதல்கெஸ்ரோவின் மீது இவ்விடயம் குறித்து குற்றம் சாட்டினாலும் இது அரசியல் ரீதியாக செய்யப்பட வேண்டியதொரு செயற்பாடாகும்.

எமது 5 ஆண்டு திட்டத்தில் மிகத் தெளிவாக இலங்கையின் எந்தவொரு மதத்திற்கும் சுதந்திரம் உண்டென்பதை தெளிவுபடுத்தியுள்ளோம். ஆனால், எந்தவொரு மதத்திற்கும் அரசின் ஆதரவு கிடைக்காது. எதிர்காலத்தில் நாம் அதிகாரத்திற்கு வந்தால் புதிய அரசியலமைப்பை தயாரிப்போம். அப்பொழுது இவ்விடயங்களை குறிப்பிடுவோம். இனவாதிகள் என சுமத்தப்படும் குற்றச்சாட்டை நான் நிராகரிக்கிறேன்.


எவ்வாறாயினும், சிறுபான்மையினர் மத்தியில் எமது கட்சிக்கு ஆதரவு குறைவென்பதை நாம் விளங்கிக்கொள்கிறோம். நாம் அதற்காக இப்பொழுது செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். மொழிபற்றிய பிரச்சினை காணப்படுவதால் எம்மால் நிறைவான தொடர்புகளை பேணமுடியாதுள்ளது. கட்சி தமிழ் மொழியில் பத்திரிகை ஒன்றை பிரசுரித்தாலும், தமிழ் மக்களுடன் தொடர்பை பேண கொள்கைகளை விளங்கப்படுத்த அது போதுமானதல்ல. எமது கொள்கைகள் விளக்கங்கள் தமிழ் முஸ்லிம் மக்களை சென்றடையவில்லை. தேசிய நெருக்கடி குறித்தான தீர்வுகள் பற்றி கலந்துரையாட எமக்கு போதுமான ஊடகம் இல்லை. அவ்வாறானதொரு ஊடகத்தை கட்டியெழுப்ப எமது கட்சி முயற்சித்து வருகின்றது. ⊙





நடிப்பு: சாயாஜி ஷிண்டே, தேவயானி, இந்து, நிழல்கள் ரவி, டி.பி. கஜேந்திரன்

இசை: இளையராஜா, ஒளி ஓவியம்: தங்கர்பச்சான், தயாரிப்பு மீடியா ட்ரீம்ஸ், இயக்கம்: ஞான ராஜசேகரன், பாடல்கள் மகாகவி பாரதியார், மு.மேத்தா, புலமைப்பித்தன்.

பாரதியின் வாழ்க்கையை மிகச் சரியாக வெளிப்படுத்தியிருக்கும் திரைப்படம் 'பாரதி' என்று சொன்னால் அது கொஞ்சமும் மிகையாகாது.



பாரதியின் வாழ்க்கையைச் சின்ன விஷயங்களிலும் கூட வாழ்ந்து காட்டியிருக்கிறார் சாயாஜி ஷிண்டே. அக்கினிக்குஞ்சு அவர் கண்களில் நடமாடுகிறது? அவருடைய ஒவ்வொரு சின்ன அசைவும் பாரதியாகத் தான் தெரிகிறது.



தன்னுடைய இசையால் பாரதியின் உணர்ச்சிகளை மீட்டெடுத்திருக்கிறார் இளையராஜா.

வீட்டில் சிறுவயது பாரதி அமர்ந்திருக்க எங்கேயோ கேட்கும் கூத்தின் ஒலியை மிகத் துல்லியமாகப் பதிவு செய்திருக்கிறார் இசைஞானி.

பாரதியின் வாழ்க்கைச்சூழல் மட்டுமே கதையாகிறது என்பதால், பெரும்பாலான கதை நிகழும் களம் அக்ரஹாரமாக இருக்கிறது. அக்ரஹாரத்தில் ஒவ்வொரு மனிதர்களையும் இயல்போடு நடமாட விட்டிருக்கிறார் இயக்குநர்.



செல்லம்மாவாக நடித்திருக்கிறார் தேவயானி. பாரதி மேல் இருக்கிற அக்கறையில் செல்லம்மாவைக் கோபித்துக் கொள்ளத் தோன்றுகிறது. ஆனால், அவள் சமையலுக்கு அரிசி, பருப்பு இல்லாமல் தவிக்கிறதைப் பார்க்கும் போது அந்தக் கோபம் மறைகிறது.

பாஞ்சாலியை நடுக்கூடத்தில் நிற்க வைத்து பாரதி கேள்வி கேட்கத் தூண்டியவையும் நிவேதிதா தேவியின் வார்த்தைகளில் பெண் விடுதலை பற்றி பாரதி சிந்திப்பதும், தேச விடுதலை மட்டும் முக்கியமில்லை தாழ்த்தப்பட்டோர் சமுதாய மேம்பாடும் முக்கியம் என்று அவன் பேசுவதும் பாரதியின் வாழ்க்கையை மாற்றத்திற்குட்படுத்தி அவனை ஒரு மகாகவியாகச் சிந்திக்கத் தூண்டியவற்றை திரைக்கதையில் அழகாகக் கொண்டு வந்திருக்கிறார் இயக்குநர் ஞானராஜசேகரன்.

பாரதியின் வாழ்க்கை வரலாற்றை எடுக்கிறோம், யாரும் குறைகண்டு பிடிக்கக்கூடாது என்று தெளிவாகச் செயல்பட்டிருக்கிறார் இயக்குநர். பாரதியின் போதைப் பழக்கத்தைக் கூட (வெளிப்படையாகக் காட்டாமல்) வசனமாக போகிற போக்கில் சொல்லியிருக்கிறார்.

விதவிதமான வண்ணங்களும், இயற்கையும் தான் பிரமாண்டமான ஒளிப்பதிவு என்பதை மாற்றி பாரதியின் வாழ்க்கையை மிகச் சரியாக ஒளியில் ஓவியமாகத் தீட்டிக் காண்பித்திருக்கிறார் தங்கர்பச்சான்.


படத்தின் கலை இயக்கம், பாரதி வாழ்ந்த காலத்தைக் கண்முன் நடமாட விடுகிறது.

நெகிழ்ச்சி, சந்தோஷம், சோகம், ஏளனம், ரௌத்ரம் இப்படி எல்லா உணர்வுகளோடும் பாரதி வாழ்ந்திருக்கிறான். மரணத்தில் கூட அவனை பயம் எட்டவில்லை.

படத்தின் முடிவில் மகாகவியின் தனிமையைப் பயணம் உங்களை அவனோடு பயணிக்கச் செய்யும்.

- த. சந்திரா

நன்றி : ஆறாம்திணை



## நஜீப் மஹ்பூஸ்- சில குறிப்புகள்

இம்முறை நானுனக்கு, நோபல் பரிசுபெற்ற அரபுலகின் முக்கிய இலக்கியவாதியான நஜீப் மஹ்பூஸைப் பற்றி எழுதப் போகிறேன். இவர் நமது இலக்கிய வாசிப்புக்களில் ஒரு பெயராக அடிக்கடி வந்து போனவர். ஆனால் அவரின் எழுத்துக்கள் தமிழில் வந்தவையல்ல. (அமரந்த்தாவிடம் நாம் மொழி பெயர்க்குமாறு கேட்கலாமா?) நாம் மேற்குலக எழுத்துக்களில் கவனம் செலுத்திய அளவுக்கு கீழைத்தேய, ஆபிரிக்க எழுத்துக்களில் கவனம் செலுத்தாதது இவர் போன்றவர்கள் நமக்கு தெரிய வராததற்குக் காரணமாயிருக்கும். அரபு இலக்கிய உலகில் பிறமொழிகளில் அதிகம் மொழிபெயர்க்கப்பட்ட எழுத்துக்கள் இவருடையது. இன்னொருவர் தௌபீகுல் ஹக்கீம்.

இங்கு ஒரு புத்தகக் கடைக்கு அண்மையில் போயிருந்தேன். முற்றிலும் அரபுப் புத்தகங்களே நிரம்பியிருந்த அதில் தற்செயலாக பார்வை புத்தக அடுக்குகளின் அடியே சென்றது. அங்கே தூசு படிந்த நிலையில் பல புத்தகங்கள் கிடந்தன. அதன் அட்டைப்படங்கள் எல்லாம் ஒரே அமைப்பானவை. எடுத்துப் பார்த்தேன். அனைத்தும் நஜீப் மஹ்பூஸின் நாவல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள். எனக்கு ஆர்வமாகி விட்டது. அண்மைய எக்ஸில் இதழொன்றில் இவர் பற்றிய ஒரு குறிப்பு வந்திருந்ததும் என் ஞாபகத்தில் வந்தது. அவற்றை எடுத்து விலை கேட்டேன். ஏற இறங்கப் பார்த்து விட்டு எதிர்பார்த்திராத தொகையைச் சொன்னான். இவ்வாறான நிகழ்வு கொழும்பின் பழைய புத்தகக் கடைகளிலும் ஏற்படுவதுண்டு. சாதாரணமாக புத்தகங்களின் விலையைக் கேட்டாயானால் ஐந்து ரூபா, பத்து ரூபாயென்று சொல்லுவார்கள். ஆனால் எதையும் குறிப்பாக எடுத்து, அதில் ஆர்வத்தையும் காட்டினீர்கள் என்றால் அதன் விலையை நாம் ஆச்சரியப்படும் விதத்தில் கூட்டி விடுவார்கள். சில வேளை அது அந்த நூலின் உண்மையான விலையை விட அதிகமாகவுமிருக்கும். அவன் சொன்ன விலையோடு கெஞ்சிக் கூத்தாடி எனக்குக் கட்டுப்படுகிற விதத்தில் சிலது வாங்கினேன். அந்தப் புத்தகம் பற்றி எழுதுவதற்கு முன்னர், நஜீப் மஹ்பூஸ் பற்றி கொஞ்சம் எழுதுகிறேனே!

இவர் 1911ல் எகிப்தின் Gamaliya என்ற இடத்தில் பிறந்தவர். 1934 ல் தத்துவக் கற்கைகளில் தற்போதைய கெய்ரோ பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றவர்.1972ல் ஓய்வு பெறும் வரை பல அரச அமைச்சகங்களில் பணி புரிந்திருக்கிறார். முப்பதுக்கும் மேற்பட்ட நாவல்களையும், நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ள இவரின் முதலாவது நாவல் 1939ல் வெளியிடப்பட்டது. இவரது நாவல்கள் பல படமாக எடுக்கப்பட்டு வெற்றிகரமானதாகவும் இவரைப் பற்றிய குறிப்பு கூறுகிறது. அரபுலகில் எகிப்தானது கலை இலக்கியம் மற்றும் அறிவியல் துறைகளில் முன்னணியாக இருக்கிற நாடாகும். நோபல் பரிசு பெற்றிருக்கிற அரபிகள் எகிப்தையே தாய்நாடாகக் கொண்டவர்கள். அதிகமாக அரபுத் திரைப்படங்கள் தயாரிக்கிற நாடும் எகிப்து தானாம்!

1988ல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. 1945 ற்கும் 1957 க்கும் இடைப்பட்ட காலங்களில் இவர் எழுதியவை யதார்த்தவாத எழுத்துக்களாகவே இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. 1959ன் பின்னரே இவர் வித்தியாசமான முயற்சிகளை, நவீன வடிவங்களை எழுத்தில் புகுத்தியுள்ளார். நான் முன்னர் குறிப்பிட்ட நூல்களை கெய்ரோவிலுள்ள அமெரிக்கப் பல்கலைக் கழகம் வெளியிட்டிருக்கிறது. அதில் நான் வாசித்த Wedding Song என்ற நூல் அரங்கச் செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பவர்களைச் சுற்றி நகர்கிற ஒரு நாவலாகும். இவரின் எழுத்துக்கள் மொழி பெயர்ப்பாளர்களுக்குச் சவாலாக அமைவதுண்டு எனச் சொல்லப்பட்டிருக்கிறது. எனினும் அந்தச் சவாலை இந்த மொழிபெயர்ப்பாளர் (Olive E. Kenry) துணிவுடன் எதிர் கொண்டிருக்கிறார் எனச் சொல்கிறார் முகவுரையாளர். நானுந்தான்.

குறித்த இந்நாவல் எகிப்தின் திரை, நாடகத் துறையில் சம்பந்தப்பட்ட நால்வர்களைச் சுற்றி நகர்கிறது. நான்கு பேரும் ஒரே மையக் கருவை நான்கு விதமாக தன்னிலைப் பாணியில் சொல்கிறார்கள். இது மிக நிதானமாகச் செய்யப்பட வேண்டிய ஒரு எழுத்து முயற்சி என்பது அதை வாசிக்கையில் தெரிகிறது. ஒரே கருவை அப்படியே பல்வேறு நபர்களுடன் ஒரே பாணியில் நகர்த்திச் செல்வது பெருத்த சிரமத்துக்குரிய ஒன்றல்ல. ஆனால் இந்த மாதிரியான எழுத்து சிரமம் தரும் என்பது எனது அபிப்பிராயம். ஏனெனில் நாவலாசிரியர் இங்கு தன்னை நான்கு நபர்களில் பிரதிபலிப்புச் செய்கிறார். இங்கு நான்கு பேருமே ஒரே மாதிரி விபரிக்க வேண்டிய சில சம்பவங்களும் இருக்கிறது. அது தவிர்ந்தவை தனிப்பட்ட கதை சொல்லலுடாக வெளிப்படுகிறது. தமிழில் இது போன்ற நாவல் எழுத்துக்கள் இல்லையென்றே நினைக்கிறேன். ஆனாலும் பல்வேறு நபர்களுடாக நகர்ந்த சில தமிழ்ச் சிறுகதைகள் ஒன்றிரண்டு வாசித்த ஞாபகம்.!

நாவல் அதன் கதை மாந்தர்களின் அந்தரங்கங்களை, சுக துக்கங்களை, எகிப்திய கலை வாழ்வின் அவலங்களை, அகலங்களை, போட்டி பொறாமைகளை, திறமைகளையென பலதையும் பேசுகிறது. இந்நாவலில் அவதானிக்க முடிகிற சிறப்பம்சம் யாதென்றால் நாவலாசிரினின் "ஆதிக்க" முடிவுகள் கதையில் வெளிப்படாததே. பெரும்பாலும் கதையாசிரியர்களே தங்களுக்கேற்ற, விருப்பமான முடிவுகளைத் திணித்து, வாசகர்களையும் அதற்கே இழுத்து விடுவர்.

இந்நாவலில் அது இல்லை. நான்கு பேரின் கதை சொல்லலும் நான்கு விதமான தளங்களை ஏற்படுத்திச் செல்கிறதேயொழிய முடிவுகளைத் தேடவேண்டிய, இவரின் கதை தான் சரியாக இருக்கும் என்ற இறுதி அனுமானங்களை எடுக்க வேண்டிய எந்தக் கட்டாயத்தையும் தரவில்லை. அந்த நாவலின் தொடர்ச்சியாக இன்னும் பலபேர் கதையை நகர்த்தலாம் என்கிற உணர்வு அதன் மூலம் வெளிப்படுகிறது. இது அரபு நாவலிலிலக்கியத்தின் பொதுப் பண்பாக இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நஜீபின் வித்தியாசமான முயற்சியாக இருக்கலாம். இந்த வித்தியாசங்கள் அவருக்கு இலக்கிய உலகில் கவனிப்பைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றன.

அத்துடன் மறுபறத்தில் சமூகம் சார்ந்து எதிர்ப்பிலக்கியமாக இவரின் எழுத்துக்கள் அடையாளம் காணப்படுவதாலும் மேற்கினதும், பிறரினதும் கவனிப்பைப் பெற்றிருக்கலாம். எகிப்து இஸ்லாமியவாதிகளினதும், அதற்கு எதிராக முற்றிலும் மேற்கத்தேய மயமான முஸ்லிம் அடையாளங்களுடனும் வாழ்பவர்களதும் நாடு. நஜீபின் எழுத்துக்கள் இந்த இரண்டாம் பகுதியினரைச் சார்ந்தே இருக்கிறது. அரபு, இஸ்லாமிய உலகில் இவரின் எழுத்துக்கள் அதன் மொழி, மற்றும் இலக்கியச் செறிவின் காரணமாகவே பெரும்பாலும் கவனிப்பைப் பெறுகிறது. மாறாக அவரின் கதைத்தளங்களுக்காகவல்ல. இது இவரின் எழுத்துக்களை எதிர்ப்பிலக்கியமாக அடையாளம் காட்டியிருக்கிறது. இந்த ஒன்றும் அவருக்கு நோபல் பரிசு கிடைப்பதற்கான காரணமாக இருந்திருக்கலாம். மதீனாவின் மகன் என்ற ஒரு நாவலுக்காக இவர் இஸ்லாமியவாதிகளின் தாக்குதலுக்குட்பட்டதாக நான் மேற் குறிப்பிட்ட அந்த எக்ஸில் குறிப்பில் எழுதப்பட்டுள்ளது.

இருந்தும் அரபு இலக்கியத்தின் செழிப்பையும், அதற்குரிய உலகளாவிய அந்தஸ்தையும் பெற்றுக் கொடுத்த எழுத்துக்க்ளுக்காக இவர் மதிக்கவும், பரவலாக வாசிக்கவும் படுகிறார். தற்கால அரபு இலக்கியத்தில் இவரின் பெயர் பொறிக்கப்பட்டாயிற்று. இவர் பல மொழிகளிலும் வாசிக்கப்படுபவராகயிருக்கிறார். தமிழுக்கு யாராவது கொண்டு வருவது நல்லம். அந்தப் பணியை தீவிர மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் திறமைமிகு எழுத்தாளர்கள் மேற்கொள்வது சிறந்தது. இல்லாவிட்டால் எனது மொழிபெயர்ப்பை வாசிக்க வேண்டிய அவலத்திற்கு நீ (நீங்கள்) உட்படலாம்! பிறகென்ன..... இந்த இலுப்பம் பூவும் சக்கரை தான்!

நன்றி - நூலகத்திட்டம்



# ஸ்டாம்பு ஆல்பம்



ராஜப்பாவின் புகழ் மங்கிப்போய்விட்டது. மூன்று நாட்களாக நாகராஜனைச் சுற்றிக் கூட்டம். நாகராஜனுக்குக் கர்வம் வந்துவிட்டது என்று ராஜப்பா எல்லாப் பையன்களிடமும் சொன்னான். பையன்கள் அதை ஒப்புக் கொள்ளவில்லை. நாகராஜன் சிங்கப்பூரிலிருந்து அவன் மாமா அனுப்பிவைத்த ஆல்பத்தை எல்லோரிடமும் காட்டினான். பள்ளிக்கூடத்தில் காலை முதல் மணி அடிப்பதுவரை பையன்கள் நாகராஜனைச் சுற்றிச்சூழ நின்றுகொண்டு ஆல்பத்தைப் பார்த்தார்கள். மதியம் இடைவெளியிலும் அவனை மொய்த்தார்கள். கோஷ்டி கோஷ்டியாக வீட்டிற்கு வந்தும், பார்த்துவிட்டுப் போனார்கள். பொறுமையோடு எல்லோருக்கும் காட்டினான் அவன். யாரும் ஆல்பத்தைத் தொடக் கூடாது என்று மட்டும் சொன்னான். அவன் மடியில் வைத்தபடி ஒவ்வொரு பக்கமாகத் திருப்புவான். பையன்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வகுப்புப் பெண்களுக்கும் நாகராஜனின் புதிய ஆல்பத்தைப் பார்க்க வேண்டுமென்று ஒரே ஆசை. பெண்கள் சார்பில் பார்வதி வந்து கேட்டாள். அவள் தைரியத்திற்குப் பெயர் போனவள். ஆல்பத்திற்கு அட்டைபோட்டு அவள் கையில் கொடுத்தான் நாகராஜன். எல்லாப் பெண்களும் பார்த்த பின் மாலையில் ஆல்பம் கைக்கு வந்து சேர்ந்தது.

இப்பொழுது ராஜப்பாவின் ஆல்பத்தைப் பற்றிப் பேசுவாரில்லை. அவனுடைய புகழ் மங்கித்தான் போய்விட்டது.

ராஜப்பாவின் ஆல்பம் மாணவர்கள் வட்டாரத்தில் மிகவும் பிரசித்து பெற்றது. தேனீ தேன் சேர்ப்பது மாதிரி ஒவ்வொரு ஸ்டாம்பாகச் சேர்த்து வைத்திருந்தான். இதைத் தவிர வேறு எந்த விஸயத்திலும் கவனமில்லை அவனுக்கு. காலையில் எட்டு மணிக்கே வீட்டைவிட்டுக் கிளம்பிவிடுவான். ஸ்டாம்பு சேர்க்கும் பையன்கள் வீடுதோறும் ஏறி இறங்குவான். இரண்டு ஆஸ்திரேலியாவைக் கொடுத்துவிட்டு ஒரு பின்லண்டு வாங்குவான். இரண்டு பாகிஸ்தான் வாங்கிக்கொண்டு ஒரு ருஷ்யாவைக் கொடுப்பான். மாலையில் வீட்டுக்கு வந்து புத்தகத்தை மூலையில் எறிந்துவிட்டு முறுக்கைக்கையில் வாங்கி நிக்கர் பையில் அடைத்து, நின்றபடியே காபியை விட்டுக் கொண்டு கிளம்பிவிடுவான். நாலு மைல் தொலைவில் ஒரு பையனிடம் கனடா இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கும். முறுக்கைக் கடித்துக்கொண்டே வயல்காட்டு வழியே குறுக்குப் பாதையில் ஓடுவான்.

அந்தப் பள்ளிக்கூடத்திலேயே அவனுடைய ஆல்பம்தான் பெரிய ஆல்பம். சிரஸ்தார் பையன் அவன் ஆல்பத்தை இருபத்தைந்து ரூபாய்க்கு விலைக்கு கேட்டான். பணக்கொழுப்பு! பணத்தைக் கொடுத்து ஆல்பத்தை விலைக்கு வாங்கிவிடலாமென்று நினைத்தான். ராஜப்பா சுடச்சுட பதில் கொடுத்தான். "உங்க வீட்டிலே ஒரு அழகான குழந்தை இருக்கே. முப்பது ரூபாய் தாறேன்.. விலைக்குத் தாயேன்" என்று கேட்டான். கூடியிருந்த பையன்கள் எல்லோரும் கைதட்டி விசில் அடித்து ஆமோதித்தார்கள்.

ஆனால் இப்பொழுது அவன் ஆல்பத்தைப் பற்றிப் பேச்சே இல்லை. அது மட்டுமல்ல, நாகராஜனின் ஆல்பத்தைப் பார்த்தவர்கள் எல்லோரும் அதை ராஜப்பாவின் ஆல்பத்தோடு ஒப்பிட்டுப்பேசினார்கள். ராஜப்பாவின் ஆல்பத்தைத் தூக்கி அடித்துவிட்டதாம்!

ராஜப்பா நாகராஜனின் ஆல்பத்தைக் கேட்டு வாங்கிப் பார்க்க வில்லை. ஆனால், மற்றப் பையன்கள் பார்க்கிற பொழுது அந்தப் பக்கமே திரும்பாதது போல் பாவித்துக்கொண்டு ஓரக்கண்ணால் பார்த்தான். உண்மையாகவே நாகராஜனின் ஆல்பம் மிகவும் அழகாகத்தான் இருந்தது. ராஜப்பா ஆல்பத்திலிருந்த ஸ்டாம்புகள் நாகராஜனின் ஆல்பத்தில் இல்லை. எண்ணிக்கையும் குறைவுதான். ஆனால், அந்த ஆல்பமே அற்புதமாக இருந்தது. அதைக் கையில் வைத்துக் கொண்டிருப்பதே பெருமை தரும் விஷயம் தான். அந்த மாதிரி ஆல்பமே அந்த ஊர் கடைகளில் கிடைக்காது

நாகராஜனின் ஆல்பத்தின் முதல் பக்கத்தில் முத்து முத்தான எழுத்தில் கீழ்கண்டவாறு எழுதியிருந்தது. அவன் மாமா அப்படி எழுதி அனுப்பியிருந்தார்.

ஏ.எஸ். நாகராஜன்.

வெட்கம் கெட்டுப்போய் இந்த ஆல்பத்தை யாரும் திருட வேண்டாம். மேலே எழுதியிருக்கும் பெயரைப் பார். இது என்னுடைய ஆல்பம். புல் பச்சை நிறமாக இருப்பதுவரை, தாமரை சிவப்பாக இருப்பதுவரை, சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் அஸ்தமிப்பதுவரை இந்த ஆல்பம் என்னுடையதுதான்.

மற்ற பையன்கள் எல்லோரும் இதைத் தங்களுடைய ஆல்பத்திலும் எழுதிக்கொண்டார்கள். பெண்கள் தங்களுடைய நோட் புத்தகத்திலும் பாடப் புத்தகத்திலும் எழுதிக்கொண்டார்கள். "எதுக்கடா அவனைப் பார்த்துக் காப்பி அடிக்கணும்? ஈயடிச்சான் காப்பி" என்று எல்லாப் பையன்களிடத்திலும் இரைந்தான் ராஜப்பா.

ஒருவரும் பதில் பேசாமல் ராஜப்பா முகத்தையே பார்த்தார்கள். கிருஷ்ணனுக்குப் பொறுக்கவில்லை.

"போடா அசுயை பிடிச்ச பயலே" என்று கத்தினான் கிருஷ்ணன்.

"எனக்கு எதுக்கடா அசூயை அவன் ஆலபத்தைவிட என் ஆல்பம் பெரிசடா" என்றான் ராஜப்பா.

"அவனிடம் இருக்கிற ஒரு ஸ்டாம்பு உன்னிடம் இருக்கா? இந்தோனேஷியா ஸ்டாம்பு ஒண்ணு போருமே. கண்ணில் ஒத்திக்கடா அவன் ஸ்டாம்பே" என்றான் கிருஷ்ணன். "என்னிடம் இருக்கிற ஒரு ஸ்டாம்பெல்லாம் அவனிடம் இருக்கா?" என்று கேட்டான் ராஜப்பா.

"அவனிடம் இருக்கிற ஒரு ஸ்டாம்பு ஒண்ணு காட்டு பாப்பம்" என்றான் கிருஷ்ணன்.

"என்னிடம் இருக்கிற ஒரு ஸ்டாம்பு அவன் காட்டட்டும் பார்க்கலாம். பத்து ரூபா பெட்.

"உன் ஆல்பம் குப்பைத்தொட்டி ஆல்பம்" என்று கத்தினான் கிருஷ்ணன். எல்லாப் பையன்களும் 'குப்பைத்தொட்டி ஆல்பம் குப்பை தொட்டி ஆல்பம்' என்று கத்தினார்கள்.

தன்னுடைய ஆல்பத்தைப் பற்றி இனிமேல் பேசிப் பயனில்லை என்று தெரிந்துகொண்டான் ராஜப்பா.

அவன் அரும்பாடுபட்டுச் சிறுகச் சிறுகச் சேர்த்த ஆல்பம். சிங்கப்பூரிலிருந்து ஒரு தபால் வந்து நாகராஜனை ஒரே நாளில் பெரியவனாக்கிவிட்டது. இரண்டிற்குமுள்ள வேற்றுமை பையன்களுக்குத் தெரியவில்லை. சொன்னாலும் அசடுகளுக்கு மண்டையில் ஏறாது.

ராஜப்பா தன்னிலையின்றி குமைந்துகொண்டிருந்தான். பள்ளிக்கூடம் போவதற்கே பிடிக்கவில்லை.

மற்றப் பையன்கள் முகத்தில் விழிப்பதற்கே வெட்கமாக இருந்தது. வழக்கமாக சனி ஞாயிறுகளில் ஸ்டாம்பு வேட்டைக்கு அலையாத அலைச்சல் அலைபவன் இந்தத் தடவை வீட்டை விட்டு வெளியே தலை நீட்டவில்லை. ஒரு நாளில் ராஜப்பா அவன் ஆல்பத்தை எத்தனை தடவை திருப்பித் திருப்பிப் பார்ப்பான் என்பதற்குக் கணக்கே கிடையாது. இரவு படுத்துக்கொண்ட பின் திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டு டிரங்குப் பெட்டியைத் திறந்து ஆல்பத்தை எடுத்து ஒரு புரட்டு புரட்டிவிட்டு வருவான். அதை பார்ப்பதற்கே எரிச்சலாக இருந்தது. நாகராஜனின் ஆல்பத்தைப் பார்க்கிறபொழுது தன்னுடைய ஆல்பம் வெறும் அப்பளக்கட்டு என்று தான் தோன்றிற்று அவனுக்கு.

அன்று மாலை ராஜப்பா நாகராஜனின் வீடுதேடிச்சென்றான். அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். இந்த அவமானத்தை அவனால் அதிக நாட்கள் தாங்கிக்கொள்ள முடியாது.

திடீரென்று ஒரு புதிய ஆல்பம் நாகராஜன் கைக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அவ்வளவுதான்! ஸ்டாம்பு சேகரிப்பதிலுள்ள தந்திரங்கள் அவனுக்கு என்ன தெரியும்? ஒவ்வொரு ஸ்டாம்புக்கும் ஸ்டாம்பு சேர்க்கிறவர்கள் மத்தியில் என்ன மதிப்புண்டு என்பது அவனுக்குத் தெரியுமா என்ன! பெரிய ஸ்டாம்புதான் சிறந்த ஸ்டாம்பு என்று நினைத்துக்கொண்டிருப்பான். அல்லது பெரிய தேசத்து ஸ்டாம்பு தான் அதிக மதிப்புள்ளது என்று எண்ணிக்கொண்டிருப்பான். எப்படியும் அவன் அமெச்சூர்தானே? தன்னிடம் இருக்கும் உதவாக்கரை ஸ்டாம்புகள் சில கொடுத்து மணியான ஸ்டாம்புகளைத் தட்டிவிட முடியாதா என்ன? எத்தனையோ பேருக்கு நாமம் சாத்தவில்லையா? இதிலிருக்கிற தந்திரமும் மாயமும் கொஞ்சமா? நாகராஜன் எந்த மூலைக்கு?

ராஜப்பா நாகராஜன் வீட்டை அடைந்து மாடிக்குச் சென்றான். அவன் அடிக்கடி வருகிற பையன் என்பதால் யாரும் ஒன்றும் சொல்லவில்லை. மாடியில் சென்று நாகராஜனின் மேஜைக்கு முன் உட்கார்ந்தான். சிறிது நேரம் கழித்ததும் நாகராஜனின் தங்கை காமாட்சி மாடிக்கு வந்தாள். "அண்ணா டவுனுக்குப் போயிருக்கிறான்." என்று சொல்லிவிட்டு, "அண்ணா ஆல்பத்தைப் பாத்தியா?" என்று கேட்டாள்.

"உம்" என்றான் ராஜப்பா.

"அழகான ஆல்பம் இல்லையா? ஸ்கூல்லே வேறெ யாரிட்டையும் இவ்வளவு பெரிய ஆல்பம் இல்லையாமே?"

"யாரு சொன்னா?"

"அண்ணா தான் சொன்னான்."

பெரிய ஆல்பம் என்றால் என்ன? பார்க்கப் பெரிதாக இருந்தால் போதுமா?

சிறிது நேரம் அங்கிருந்துவிட்டு காமாட்சி கீழே சென்று விட்டாள்.

ராஜப்பா மேசையில் கிடந்த புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று டிராயர் பூட்டில் கை பட்டது. பூட்டை இழுத்துப் பார்த்தான். பூட்டித்தான் இருந்தது. திறந்து பார்த்தால் என்ன? மேஜை மேலிருந்து சாவியைக் கண்டெடுத்தான். ஏணிப்படியோரம் சென்று ஒரு தடவை கீழே குனிந்துபார்த்துவிட்டு சட்டென்று டியாரைத் திறந்தான். மேலாக ஆல்பம் இருந்தது. முதல் பக்கத்தைத்திருப்பி அதில் எழுதியிருந்ததை வாசித்தான். நெஞ்சு படக்படக்கென்று அடித்துக் கொண்டது. ஒரு நிமிஷத்தில் டியாரைப் பூட்டினான். ஆல்பத்தை எடுத்துச் சட்டைக்குள் நிக்கரில் செருகிக்கொண்டு கீழிறங்கி வீட்டைப் பார்த்து ஓட்டமாக ஓடினான்.

நேராக வீட்டிற்குள் சென்று புத்தக அலுமாரிக்குப் பின்னால் ஆல்பத்தை மறைத்து வைத்தான். வாசல் பக்கம் வந்தான்.

நன்றி - நூலகத்திட்டம்



உடம்பு பூராவும் கொதிப்பது போலிருந்தது. தொண்டை உலர்ந்தது. முகத்தில் ஜிவ் ஜிவ்வென்று ரத்தம் குத்திற்கு.

இரவு எட்டு மணிக்கு எதிர்வீட்டு அப்பு வந்தான். கையையும் தலையையும் ஆட்டிக்கொண்டு விஷயத்தைச் சொன்னான். நாகராஜன் ஸ்டாம்பு ஆல்பத்தைக் காணவில்லையாம்! அவனும் நாகராஜனும் டவுனுக்குச் சென்றிருந்தார்களாம். திரும்பி வந்து பார்க்கிறபோது மாயமாக மறைந்து விட்டதாம் ஆல்பம்.

ராஜப்பாவுக்கு ஒன்றும் பேசமுடியவில்லை. அவன் எப்படியாவது போய்விட்டால் போதுமென்றிருந்தது. அப்பு சென்றதும் அறைக்குள் வந்தான். கதவைச் சாத்தினான். அலமாரிக்குப் பின்னாலிருந்த ஆல்பத்தை எடுத்தான். கை விறைத்தது. ஜன்னல் வழியாக யாராவது பார்த்து விடுவார்கள் என்று பயந்து மீண்டும் ஆல்பத்தை அலமாரிக்குப் பின் புறம் திணித்தான்.

இரவு சாப்பிட முடியவில்லை. வயிற்றை அடைத்துக்கொண்டு விட்டது. வீட்டிலுள்ள எல்லோரும் அவன் முகத்தைப் பார்த்து "என்னடா, என்னடா" என்று கேட்டார்கள். தன்னுடைய முகம் பயங்கரமாகக் கோணியிருப்பது மாதிரித் தோன்றிற்று அவனுக்கு.

எப்படியாவது தூங்கிவிடுவோம் என்று படுக்கையை விரித்துப் படுத்தான். தூக்கம் வரவில்லை. தான் தூங்கும்பொழுது யாராவது அலமாரிக்குப் பின்னாலிருந்து ஆல்பத்தைக் கண்டெடுத்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்து, ஆல்பத்தை எடுத்துவந்து தலையணைக்கடியில் வைத்துக்கொண்டான்.

இரவு எப்பொழுது தூங்கினான் என்பது அவனுக்கேத் தெரியாது. காலையில் கண் விழித்த பின்பும் தலையணைக்கடியில் இருந்து ஆல்பத்தை எடுக்க முடியவில்லை. அம்மாவும், அப்பாவும் ஒருவர் மாற்றி ஒருவர் அங்கு வந்து கொண்டிருந்தார்கள். ஆல்பத்தோடு பாயைச் சுருட்டி அதன் மேல் உட்கார்ந்து கொண்டான்.

காலையில் மீண்டும் அப்பு வந்தான். அப்போதும் ராஜப்பா பாய் மேல் தான் உட்கார்ந்து கொண்டிருந்தான். அப்பு காலையில் நாகராஜன் வீட்டுக்குப் போய்விட்டு வந்திருந்தான்.

"நீ நேற்று அவனுடைய வீட்டுக்குப் போனியோ?" என்று கேட்டான். அப்பு.

ராஜப்பாவுக்கு வயிற்றைக் கலக்கிற்று. ஒரு தினுசாக மண்டையை ஆட்டினான். எப்படி வேண்டுமென்றாலும் அர்த்தம் எடுத்துக்கொள்ளும்படி தலையை அசைத்தான்.

"நாங்க வெளியில போன பின் நீ மட்டும் தான் அங்கே வந்தாய் என்று காமாட்சி சொன்னாள்" என்றான் அப்பு.

தன்னை சந்தேகப்படுகிறார்கள் என்பது தெரிந்துவிட்டது ராஜப்பாவுக்கு.

"நேற்று ராத்திரியிலிருந்து இதுவரை அழுதுகொண்டே இருக்கிறான் நாகராஜன் . அவன் அப்பா போலீஸுக்குச் சொன்னாலும் சொல்லுவார் போலிருக்கிறது" என்றான் அப்பு.

ராஜப்பா பேசாமலிருந்தான்.

"அவன் அப்பாவுக்கு டி.எஸ்.பி. ஆபிஸிலேதான் வேலை? அவர் விரலை அசைத்தால் போலிஸ் படையே திரண்டுவிடும்" என்றான் அப்பு. நல்லவேளை, அப்புவைத்தேடி அவன் தப்பி வந்தான். அப்பு சென்றுவிட்டான்.

ராஜப்பாவின் அப்பாவும் காலையில் உணவை முடித்துக்கொண்டு சைக்கிளில் ஆபிஸ் சென்றுவிட்டார். வாசல் கதவு சாத்தியிருந்தது.

ராஜப்பா படுக்கையிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். அரை மணி நேரமாயிற்று. அப்படியே அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

அப்பொழுது வாசல் கதவைத் தட்டும் ஓசை கேட்டது.

'போலீஸ், போலீஸ்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் ராஜப்பா. வாசல் கதவில் உள்ளே சங்கிலி போட்டிருந்தது.

வாசல் கதவைத் தட்டும் சப்தம் தொடர்ந்து கேட்டது.



ஸுந்தர ராமசாமி

அப்பொழுதும் வாசல் தட்டும் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது.

"யாருடா பாரு. கதவைத் திறயேன்" என்று அம்மா உள்ளேயிருந்து கத்தினா. இன்னும் சில வினாடிகளில் அம்மாவே வந்து திறந்துவிடுவாள்!

ராஜப்பா பின்புறம் ஓடினான்.

ராஜப்பா பாய்க்குள்ளிருந்து ஆல்பத்தை வெளியே எடுத்துக் கொண்டு மாடிக்கு ஓடினான். அங்கே நிற்க முடியவில்லை. அலமாரிக்குப் பின்னால் ஆல்பத்தைத் திணித்தான். சோதனை போட்டால் அகப்பட்டுவிடுமே! ஆல்பத்தை எடுத்து சட்டைக்குள் மறைந்தவாறே கீழே வந்தான்.

மடமடவென்று ஸ்நான அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டான். வென்னீர் அடுப்பு தகதகவென்று எரிந்துகொண்டிருந்தது. பட்டென்று ஆல்பத்தை அடுப்பில் போட்டான். ஆல்பம் பற்றி எரிந்தது. அவ்வளவும் மணிமணியான ஸ்டாம்புகள். எங்கும் கிடைக்காத ஸ்டாம்புகள். தன்னையறியாமலே கண்களில் நீர் துளிர்த்துவிட்டது. ராஜப்பாவுக்கு.

அப்போது ஸ்நான அறைக்கு வெளியே அம்மாவின் குரல் கேட்டது.

"சட்டென்று குளித்துவிட்டு வாடா. உன்னைத் தேடி நாகராஜன் வந்திருக்கிறான்" என்றாள். அவன் தாயார்.

ராஜப்பா நிக்கரைக் கழற்றி ஸ்நான அறைக்கொடியில் போட்டுவிட்டு ஈரத்துண்டைக் கட்டிக்கொண்டு வெளியே வந்தான். வீட்டிற்குள் வந்து புதுச்சட்டையும் நிக்கரும் போட்டுக்கொண்டு மாடிக்குச் சென்றான். நாகராஜன் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். ராஜப்பாவைப் பார்த்ததுமே, "என் ஸ்டாம்பு ஆல்பம் தொலைந்து போய்விட்டதா" என்று ஈனமான குரலில் சொன்னான். முகத்தில் வருத்தம் தெரிந்தது. அழுது குளித்திருக்கிறான் என்பதையும் கண்கள் சொல்லிற்று.

"எங்கே வைத்தாயடா?" என்று கேட்டான் ராஜப்பா.

"டிராயரில் பூட்டி வைத்திருந்ததாகத் தான் ஞாபகம். டவுனுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்து பார்க்கிறபோது காணவில்லை."

நாகராஜன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவன் ராஜப்பா முகத்தைப் பார்ப்பதற்கு வெட்கப்பட்டு முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

"அழாதேடா, அழாதேடா" என்று தேற்றினான் ராஜப்பா.

ராஜப்பா சமாதானம் சொல்லச் சொல்ல மேலும் மேலும் பெரிதாக அழுதான் நாகராஜன்.

ராஜப்பா சட்டென்று கீழே சென்றான். ஒரு நிமிஷத்திற்குள் நாகராஜன் முன்னால் வந்து நின்றான். அவன் கையில் அவனுடைய ஆல்பம் இருந்தது.

"நாகராஜா, இந்தா என்னுடைய ஆல்பம். இதை நீயே வைத்துக் கொள். உனக்கே உனக்குத்தான்... என்ன அப்படிப் பார்க்கிறாய்? விளையாட்டில்லை. உனக்குத் தான். உனக்கே தான்".

"சும்மா சொல்கிறாய்" என்றான் நாகராஜன்.

"இல்லையடா. உனக்கே தருகிறேன். நெஜமாகத்தான். உனக்கே உனக்கு. வைத்துக்கொள்."

ராஜப்பா, தன் ஸ்டாம்பு ஆல்பத்தைக் கொடுத்துவிடுவதா? நடக்கக்கூடியதா? நாகராஜனால் நம்ப முடியவில்லை. ஆனால் ராஜப்பா அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனுக்கு குரல் கம்மிவிட்டது.

"எனக்குத் தந்துவிட்டால், உனக்கு?"

"எனக்கு வேண்டாம்."

"ஒரு ஸ்டாம்புகூட வேண்டாமா?"

"ஊஹும்".

"நீ எப்படியடா ஸ்டாம்பே இல்லாமலிருப்பாய்?" என்று கேட்டான் நாகராஜன்.

ராஜப்பா கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

"ஏண்டா அழுகிறாய்? எனக்கு ஆல்பத்தைத் தர வேண்டாம். நீயே வைத்துக் கொள். நீ எவ்வளவு கஷ்டப்பட்டுச் சேர்த்த ஆல்பம்" என்றான் நாகராஜன்.

"இல்லை, நீ வைத்துக் கொள். உனக்கே இருக்கட்டும். எடுத்துக்கொண்டு வீட்டுக் போய்விடு. போ, போ. என்று ராஜப்பா அழுதுகொண்டே கத்தினான்.

நாகராஜனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆல்பத்தை எடுத்துக் கொண்டு கீழே இறங்கி வந்தான்.

சட்டையைத் தூக்கிக் கண்களைத் துடைத்தபடி பின்னால் இறங்கி வந்தான் ராஜப்பா. இருவரும் வாசல் படிக்கு வந்து விட்டார்கள்.

நீஆல்பத்தைக் கொடுத்ததற்கு ரொம்ப தாங்க்ஸ். நான் வீட்டுக்கு போகட்டுமா? என்று படியில் இறங்கினான் நாகராஜன்.

"நாகராஜா" என்று கூப்பிட்டான் ராஜப்பா.

நாகராஜன் திரும்பிப் பார்த்தான்.

"அந்த ஆல்பத்தைக் கொண்டா. இன்னிக்கு ராத்திரி ஒரே ஒரு தடவைபூராவும் பார்த்துவிட்டு காலையில் உன் வீட்டில் கொண்டு வந்து தந்துவிடுகிறேன்" என்றான் ராஜப்பா.

"சரி" என்று ஆல்பத்தைக் கொடுத்துவிட்டுப் போனான் நாகராஜன்.

ராஜப்பா மாடிக்குச் சென்று கதவைச் சாத்திக் கொண்டு ஆல்பத்தை நெஞ்சோடு அணைத்தவாறு ஏங்கி ஏங்கி அழுதான்.

**நன்றி: காகங்கள்**


நன்றி - நூலகத்திட்டம்

## நினைவுக் குறிப்புகள் – 5

ஆனந்தா வித்தியாசமானது தான். அங்கு படித்த பெடியங்கள் பெரும்பாலும் நகர்ப்புற கீழ் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அல்லது கிராமத்து பூர்சுவா வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இந்த இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்களில் சிலரிடம் செலவு செய்வதற்கு பணம் இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் அவர்கள் அவ்வளவு நாகரீக மெருகு கொண்டவர்கள் என்று சொல்ல முடியாது. அவர்களைப் பொறுத்தவரையில் புஞ்சி பொரளையிலுள்ள சந்தகிரி ஹோட்டேலில் ஒரு விம்ரோ போத்தலுடன் சாப்பிடுவதே தங்களது வாழ்வின் சிறந்த நாட்கள் என்று அவர்கள் இன்னமும் கருதிக் கொண்டிருந்தார்கள். அரசியல் ரீதியாக பாடசாலைச் சூழல் தடித்த தேசியவாதத் தன்மை கொண்டதாக இருந்தது. ஆனால் இந்த தேசியவாதம் இலங்கைத் தேசியவாதமாக இருந்ததே ஒழிய ஒரு தனிச் சிங்களத் தேசியவாதமாக இருந்ததில்லை. ஆசிரியர்களும் மாணவர்களும் பல்வேறு இனக் குழுமங்களைச் (இச் சொல் பின்னர் கண்டு பிடிக்கப்படுவதற்கு இந்த வேறுபாடுகள் கவனிக்கப்படாமல் இருந்தது ஒரு சமிக்ஞையாக இருந்தது என்ற போதும்) சேர்ந்தவர்களாக இருந்தனர்.

அத்துடன் அங்கு இனரீதியான அல்லது மதரீதியான முற்சாய்வுகளின் வெளித்தெரியக்கூடிய தடயங்கள் ஒருபோதும் இருக்கவில்லை. பி.டி.எஸ்.குலரத்ன என்ற மிகச்சிறந்த சிந்தனைத் தெளிவுமிக்க அறிவாளி ஒருவர் அதிபராக இருந்த ஆனந்தாவின் பொன்னான காலத்தில் அங்கு படித்ததற்காக நான் சந்தோசப்படுகிறேன். இவர் என்னுடைய காலத்தில் நிலவிய உடல் ரீதியான தண்டனை வழங்கும் போக்கை இல்லாதொழித்ததுடன் ஆண் பெண் இருபாலாரும் சேர்ந்து கற்கும் (கலவன்) முறைமையையும் கொண்டு வந்தார். (எனது பட்டப் படிப்புக்குப் பின்னர் நான் ஆனந்தாவில் ஆசிரியராக படிப்பித்த காலத்தில் எனது வகுப்புக்கள் பெருமளவிற்கு இருபாலாரும் சேர்ந்து படிக்கும் வகுப்புக்களாகவே இருந்தன. ஆயினும் பிறகு வந்த அதிபர்கள் இந்தப் பரிசோதனை முயற்சியைக் கைவிட்டு விட்டார்கள். பெருந் தொகையான அரச பாடசாலைகள் கலவன் பாடசாலைகளாகவே இருந்தன / இருக்கின்றன என்ற போதும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் முறைமைக்கு எதிரான மத்தியதர வர்க்க முற்சாய்வு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டதென்று நான் நினைக்கிறேன்.) அத்துடன் குலரத்னவின் காலத்தில் ஒரு அரசியல் பாரம்பரியமும் பாடசாலையுடன் பிணைக்கப்பட்டதாக இருந்தது. பிலிப் குணவர்த்தன, ரொபேட் குணவர்த்தன, என்.எம்.பெரேரா பேர்னாட் சொய்சா ஆகிய எல்லோரும் அங்கு இருந்தார்கள்.

000 000 000



**தலைமறைவு வாழ்க்கை**

**றெஜி சிறிவர்த்தன**

நான் பாடசாலை இறுதியாண்டில் படித்துக் கொண்டிருக்கும் போது எனது தகப்பனார் படுக்கையில் வீழ்ந்து விட்டார். (அந்த ஆண்டு ஒரு பாரிச வாதத் தாக்குதலையடுத்து அவர் இறந்து போகிறார்.) பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப தன்னிடம் பணம் இல்லாமல் போகுமென்பதால் பொது இலிகிதர் சேவைக்கான பரீட்சைக்கு என்னைத் தயார் செய்யுமாறு கூறினார். இந்தப் பரீட்சை அவரைப்போன்ற ஒரு அரசாங்க இலிகிதர் வேலைக்குப் போவதற்கான கதவைத் திறந்துவிடும் என்று அவர் கருதினார். அவருடைய இந்த ஆலோசனை என்னை பெரிதாகப் பாதிக்கவில்லை. பாடசாலையில் நான் பல பரிசுகளைப் பெற்றிருந்தேன் என்பதுடன் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கான புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சை எழுதுவதற்காக இலக்கியமும் விமர்சனமும் படித்துக்கொண்டிருந்தேன். கொழும்பு பொது நூலகத்தில் ஆடன், ஸ்பென்டர், டே லூயிஸ் ஸ்பென்கர் போன்றவர்களின் கவிதைகளைக் கண்டுபிடித்தேன். அவர்களுடைய அந்தக் காலத்து இடதுசாரி அரசியல் நம்பிக்கைகளாலும் அவர்களது கவிதைகளின் புதுமையாலும் ஆகர்சிக்கப்பட்டு ஒருவகை மாற்றுக் கிளர்வுடனும் பிரமிப்புடனும் அவற்றைப் படித்துக்கொண்டிருந்தேன். வாலிபப் பருவத்து காட்சிப்படுத்தும் இயல்பினால் உந்தப்பட்டு, பாடசாலையில் நடந்த விவாதமொன்றின் போது, அந்த ஹோலிலிருந்த யாரும் அனேகமாகக் கேள்விப்பட்டிருக்க முடியாத ஸ்ரீபன் ஸ்பென்டரை மேற்கோள் காட்டி, அவரது கவிதையின் ஒரு வரியான "கொலையாளிகளை அழித்து வாழ்வுக்குப் புத்தொளி பாய்ச்சுவோம்" என்ற வரியை மிகுந்த உற்சாகத்துடன் பாடிப் பேசினேன். பரீட்சையில் நான் எல்லாவற்றிலும் வெற்றி பெற்றதுடன் மாதம் நாற்பது ரூபாவை புலமைப்பரிசிற் தொகையாகப் பெற்றுங் கொண்டேன். அந்த நாட்களில் அது பெரிய காசு தான்.

நான் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி இரண்டு மாதங்களில் அப்பா இறந்து போனார். அம்மா தனது விதவை ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக போகும்போது பல தடவைகள் நான் அவருடன் போயிருக்கிறேன். அவரது ஓய்வூதியம் சரியாக மாதமொன்றிற்கு ரூ 74.99 என்பது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. இந்தப் பணத்தில் தான் அவர் ஐந்து பேரைக்கொண்ட எங்கள் குடும்பத்தைப் பலவருடங்களாக உணவும் உடையும் கொடுத்துப் பராமரித்து வந்தார். இந்த நாற்பது ரூபாவில் எனக்கு படிப்புக்கான பணத்தைக் கட்டவும் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கான பயணத்துக்குச் செலவு செய்யவும் உடுப்பு வாங்கவும் ஏன் எனக்குப்பிடித்த புத்தகங்களை வாங்கவும் (பென்குயின் புத்தகங்கள் வெறும் நாற்பது சதம் தான்) இடைக்கிடையே படம் பார்க்கவும் கூடியதாக இருந்தது. எனது வாழ்க்கையில் முதன்முதலாக நான் விரும்பியபடி செலவு செய்ய என்னிடம் கைச்செலவுப் (pocket money) பணம் இருந்தது!

**ஆனால் அவர்கள் அவ்வளவு நாகரீக மெருகு கொண்டவர்கள் என்று சொல்ல முடியாது. அவர்களைப் பொறுத்தவரையில் புஞ்சி பொரளையிலுள்ள சந்தகிரி ஹோட்டேலில் ஒரு விம்ரோ போத்தலுடன் சாப்பிடுவதே தங்களது வாழ்வின் சிறந்த நாட்கள் என்று அவர்கள் இன்னமும் கருதிக் கொண்டிருந்தார்கள்**

(இன்னும் வரும்)

## புத்தகம் மீதான எனது வாழ்வு

கொஞ்சம் புத்தகங்களோடு தொடங்கியது வாழ்க்கை
புத்தகங்களின் சொற்களில் சோறு இல்லை என்பதே
பிரச்சினையாயிற்று வாழ்க்கை முழுக்க.
யாரும் நம்பவில்லை
தமது வாழ்க்கை
புத்தகங்களோடு தான் தொடங்கியதென்பதை
அவர்களே அப்படி நம்ப
யாரையும் அனுமதிக்கவில்லை.

புத்தகங்களில் சோறு இல்லை
புத்தகங்களில் துணி இல்லை
அணிவதற்கு தங்க ஆபரணங்கள் தானும் இல்லை
புத்தகங்களே பிரச்சினையாயிற்று வாழ்க்கை முழுக்க...

நான் புத்தகங்களில் வாழ்கிறேன் என்பதையும்
புத்தகங்களில் தூங்குகிறேன் என்பதையும்
இதயம் சிதையும் துயரின் ஒலியை
புத்தகங்கள் தின்னுகின்றன என்பதையும்
ஓ கடவுளே! யாரும் அதை நம்பவில்லை.
என்னையும் அனுமதிக்கவில்லை.

புறாக்கள் வாழ்ந்த கூரைகளில்
உதிர்ந்து கிடக்கின்றன வெண்சிறகுகள்

– போல் நிஹாலே

## நானும், நிலவும், நத்தையும்

முழு நிலவென்பது அனேகம் பேரிற்கு
கவிதைபாடுபொருளாக இருக்க,
எனக்கு மட்டும்
நடு இரவின் நிசப்தத்தைக் கிழிக்கும்
சுடலைக் குருவியின் அலறலாக
அவ்வப்போது வந்து பயம் காட்டுகிறது

இதற்கு என் கால ஓட்டத்தில்
நிகழ்ந்த சாத்தியமான அசாத்தியங்கள்
காரணமாக இருக்கலாம்

அப்போது எனக்கு
பத்து பதினொரு வயதிருக்கும்
கள்ளன் பொலிஸ் விளையாட்டில்
நான் கள்ளனாக வாசிகசாலையடி
பூவரச மர உச்சியில் ஒளிந்து கொள்ள
சடுதியாக வானத்தில் ஆர்ப்பரித்த
கெலிகொப்ரர் ஒன்று எதையோ
பார்த்து வேட்டுக்களை தீர்க்க
கொப்புமுறிந்து கிளையொன்று
காலில் கிழிக்க கீழே விழுந்தேன்
நிலவு வெளிச்சத்தில் இரத்தம்
இருண்ட சிவப்பாக தெரிந்தது.

பின்னொருமுறை இராணுவ ஆக்கிரமிப்பில்
எங்களூர் கோயிலில் தஞ்சமடைந்த போது
விழுந்த 'ஷெல்லினால்' இறந்த
பதினேழு உறவுகளின் வெற்றுடல்களையும்
நிலா வெளிச்சத்தில் அடையாளம் கண்டோம்.

எறும்பு கூட தன்னை விட ஐம்பது மடங்கு
பாரமான உணவுத்துகளை சுமக்குமாம்
நாங்கள் கூட அதைவிட பலமடங்கு
அவலங்களை தேக்கிக் கொண்டு
செம்மணி வெளியை எறும்புகளாக
ஊர்ந்து கடந்த போதும்
நிலவு வானில் முழுசாக பத்திரமாக இருந்தது.

இப்போதெல்லாம் நத்தைகளை ஒருவித
சுயபச்சாபத்தோடு பார்க்கிறேன்
நிலவு நாட்களில் ஓட்டுக்குள்
நத்தையாக என்னை சுருக்கிக் கொள்ள
முடியாத இயலாமையோடும்.

– த.தயாபரன்

நன்றி - நூலகத்திட்டம்



## ஓர நிகழ்வுகள்-4

தமிழ் இனி 2000 மாநாட்டின் போது இடம்பெற்ற மைய நிகழ்வுகளோடு சமாந்தரமாக இடம்பெற்ற ஓர நிகழ்வுகள் இன்னும் சுவையானவை. இது பல்வகைப்பட்ட மன ஓட்டங்களையும், அதன் நிறப்பிரிகைகளையும் காட்டுவனவாக அமைந்தன. எனது பார்வைக்கு அகப்பட்டவற்றின் பதிவே இது.

- மு.பொ.




ஹோட்டல் Atlantic இன் முன்னால் போவதும் வருவதுமாய் அங்கு மிதந்து கொண்டிருந்த எழுத்தாளர்களை பார்த்த போது எனக்கு இன்னொரு நினைவு வந்தது. இப்படி ஒரு எழுத்தாளர் மாநாட்டை 1998ல் இலங்கையிலும் கூட்டினார்கள். வட கிழக்கு பிரதேசக் கல்வி அமைச்சின் செயலாளராய் இருந்த டிவகலாவால் கூட்டப்பட்ட அம் மூன்று நாள் மாநாட்டுக்கு இலங்கையில் இருந்த சகல எழுத்தாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். தமிழ் நாட்டில் இருந்தும், சிறப்புச் சொற்பொழிவாற்ற வி.அரசு போன்றவர்களும், அழைக்கப்பட்டிருந்தனர்.

அம்மாநாடு நடைபெற்றது. திருகோணமலையில் உள்ள Hotel Oceanicல்! இப்போ இங்கே Hotel Atlanticல் தமிழ் இனி மாநாடு! எழுத்தாளர் மகாநாடுகளுக்கும் சமுத்திரங்களுக்கும் என்ன தொடர்பு? எழுத்தாளர்கள் 'சமுத்திர ஞானம்' உடையவர்களோ? எனக்கு ஏனோ இது வேடிக்கையாகப் பட்டது.

திருகோணமலையில் நடைபெறும் மாநாட்டுக்குப் போவதற்காக கொழும்பு Green Land Hotel லில் கொழும்பிலுள்ள எழுத்தாளர்கள் கூடியிருந்த போது ஒரு அதிர்ச்சியான செய்தி எமக்கு கிடைத்தது. அதாவது எங்களோடு மாநாட்டுக்கு வரவிருந்த எழுத்தாளர் மதுசூதனன் இலங்கைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார் என்ற செய்தியே அது. எனக்கு முன்னால் அப்போது முனைவர் அரசு அமர்ந்திருந்தார். எங்களுக்கு அச்செய்தி பெரும் துக்கத்தையும், சங்கடத்தையும் ஏற்படுத்தியிருந்தது. திருகோணமலை மாநாட்டின் போது மதுசூனன் அவர்களுக்கு நேர்ந்த அநீதியையும் எவ்வாறு இலங்கையில் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள் என்றும், இதற்கெதிராக எழுத்தாளர் குரல் கொடுக்க வேண்டும் என்றும் நான் அங்கு சிறிது நேரம் பேசியது எனக்கு நினைவு வந்தது.

ஆனால், இங்கே Hotel Atlanticக்கு முன்னால் எழுத்தாளர்கள் எவ்வளவு Free ஆக சந்தோசமாக திரிகிறார்கள்! எந்தவித அடக்குமுறை ஆபத்தும் இங்கே இல்லை! அப்படியா?

இல்லை. நீங்கள் நினைப்பது மாதிரி இல்லை. நீங்கள் கதைப்பதை கவனமாக கதையுங்கள். இங்கேயும் புலனாய்வுப் பிரிவினர் இருக்கவே இருக்கிறார்கள். Be careful என்று என்னை எச்சரித்தார் நண்பர் ஒருவர்.

எனக்குச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. மடியில் கனமிருந்தால் தானே வழியில் பயம்! அப்படி ஓடிய என் நினைவுக்கு சிறு அதிர்ச்சி தருவதாய் இருந்தது அதற்குப் பின் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி.

பெண்ணிய விமர்சனம் பற்றிய அமர்வில் வீரகேசரி பத்திரிகையாளர் சூர்யகுமாரியும் சரிநிகர் ரேவதியும் கலந்து கொண்டனர். அமர்வுக்கு அம்பை தலைமை தாங்கினார். வ.கீதாவும் அதில் கலந்து கொண்டார். சூர்யா மிகச் சிறப்பா தன்னுடைய விமர்சனத்தை முன்வைத்தார். அவருடைய கட்டுரை இன்றைய பெண்ணியவாதிகளிடையே பொதுவான தத்துவநோக்கும் அதன் அடிப்படையிலான ஒழுக்கக் கோட்பாடும் இருக்கிறதா என்ற கேள்வியை மையமாகக் கொண்டிருந்தது. "கோணேஸ்வரிகள்" கவிதை சம்பந்தமாக ஈழத்தில் பிளவுபட்டு நின்ற பெண்ணியவாதிகள் நிலை அவர் வாதத்தைப் பலப்படுத்திற்று. இதற்கடுத்து பேசிய ரேவதி, இன்னொரு கோணத்திலிருந்து இன்று ஈழத்தில் தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றிப் பேசினார். ஆரம்பத்தில் தயங்கித் தயங்சி ஆரம்பித்த ரேவதி சிறிது நேரத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு பெரும் மழை மாதிரியே பொழிந்து தள்ளினார்.

கூட்டம் முடிந்ததும் பலர் ரேவதியைப் பாராட்டினார். அப்போது ரேவதி அருகே நின்ற வ.கீதா ரேவதியின் பேச்சைப் பாராட்டுவார் என்று பார்த்தால் அவர் அதற்கெதிராக "இப்படியா பேசுவது?" என்ற ரீதியில் அதிருப்திப் பட்டுக்கொண்டார். காரணம் புரியாது நாம் நின்ற போது அங்கு

> **“““நாம் பேசுவதை கவனமாகப் பேச வேண்டும் என்று பதில் கொடுத்தார் கீதா”””**

நின்ற ஒருவர் "என் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று அவரைக் கேட்டார்.

"இந்த இடத்தில் எல்லாம் இப்படிக் கதைக்கக் கூடாது. நாம் பேசுவதைக் கவனமாக பேச வேண்டும்" என்று கீதா கேட்டவருக்குப் பதில் கொடுத்தார்.

ஓ, இப்போ எனக்குக் காரணம் விளங்கிற்று.

> **“வந்தாரை வாழ வைக்கும் தமிழ் நாடே நீ இப்படித்தான் நடந்து கொள்வாயோ?” என்று பாராசக்தி குணசேகரன் பாணியில் டயலாக் அடிக்கலாம் போல்பட்டது.**

அப்படியானால், பேசுவது பற்றி நான் எச்சரிக்கப்பட்டது உண்மைதானா?

அப்படியானால், கவிஞர் இன்குலாப் சொன்னது சரியா?

"நாங்களும் தமிழ் இனி 2000 போன்ற ஒரு மாநாட்டைக் கூட்டியிருப்போம், ஆனால், அதற்கு இந்த அரசு எங்களுக்கு அனுமதி தராது என்று எங்களுக்குத் தெரியும்' என்ற ரீதியில் இன்குலாப் சொன்னதில் உண்மை இருக்கிறதா?

ஈழத்தவர் தேசிய இனப்பிரச்சினைக்கு ஆதரவான சக்திகள் இவ்வாறு விழாக்கள் எடுப்பதை இந்திய அரசு சந்தேகத்தோடுத்தான் பார்க்குமா?

'ஆனால், இப்படியான ஒரு முயற்சியில் இன்குலாப் போன்றவர்கள் ஈடுபட்டு, அதாவது அவ்வாறு தடுக்கப்பட்டிருந்தால் அவர் சொல்வதில் நியாயமிருக்கிறது. அப்படியில்லாமல் வெறும் முற்கற்பிதங்களால் இந்த முடிவுக்கு வரலாமா?' என்று என் நண்பர் ஒருவர் கேட்டார். எது உண்மை.

0 0 0

Hotel Atlanticக்கு முன்னால் எழுத்தாளர்கள் கவிஞர்கள் ஆய்வாளர்கள் என்போர் போவதும், வருவதுமாய் மிதந்து கொண்டிருந்தார்கள்.

நான் அமர்வுகள் நடக்கும் ஹோட்டலுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தேன். அமர்வுகளில் பேசப்படுபவை அலுப்புத்தரும் போது வெளியே வந்து சிறிது ஆசுவாசப் படுத்திக் கொண்டு ஹோட்டலுக்கு முன்னாலிலுள்ள பெட்டிக் கடைகளில் ஒன்றில் யாரோடாவது கூட்டுச் சேர்ந்து போய் அங்கு கிடைக்கும் Strong 'சாயா' பருகுவதில் ஏற்படும் இன்பம் எந்த இலக்கியப் படைப்பும் தராது போலவே எனக்குப்பட்டது.

அன்று இரண்டாம் நாள் காலை அமர்வின் இடையில் வெளியே வந்து நண்பர் ஒருவரோடு 'சாயா' பருகப் போனேன். பெட்டிக் கடையில் 'சாயா'வுக்காகக் காத்துக் கொண்டிருக்கையில், எமக்கருகே இன்னொருவரோடு கதைத்துக் கொண்டிருந்தவரைச் சுட்டிக்காட்டி என் நண்பர், "இவர் தான் வெங்கட்சாமிநாதன்" என்றார்.

அவரை எனக்கு ஏற்கெனவே காலச்சுவடு புத்தக வெளியீட்டு விழா மண்டபத்தின் வெளியே யாரோ காட்டியதாக நினைவு. அப்போது அவரோடு கதைக்கும் ஆவல் எழவில்லை. இப்போதும் கதைக்கவேணுமா? சரி? எதற்கும் சும்மா கதைத்துப் பார்ப்போம். "ஹலோ, நீங்கள்தானே வெ.சா." என்று நான் கேட்டுவிட்டு. "மு.பொ." என்றேன்.

'ஹலோ' என்று பெரிதாகக் கூறி முறுவலித்ததுடன் அவர் என்னிடம் எதுவும் கேட்காது மீண்டும் தன் நண்பரோடு கதைக்கத் தொடங்கினார். 1962ல் இருந்து மு.த.வோடு தொடர்பு வைத்திருந்தவர் வெ.சா.

இவரோடு எனக்கு கதைக்க நிறையவே இருந்தது. இவரும் தருமு சிவராமுவும் "கூட்டாட்சி" நடத்திய காலத்தில் தம்மை விட இலக்கியக் 'கொடுமுடிகள்' இல்லை என்பது போல் நடந்து கொண்டதும் பின்னர் தமக்குள்ளே உட்பகைமை கொண்டு அக்கொடுமுடிகளில் இருந்து விழுந்ததும் நினைவு வந்தது. எனக்கு பொய்முகம் போட முடியவில்லை.

அப்பால் போனேன். எதிரே சாயாவனம் கந்தசாமி வந்து கொண்டிருந்தார். இவர் இலங்கை வந்திருந்த போது 'சரிநிகர்' காரியாலயத்தில் இவரோடு அதிகநேரம் இருந்து கதைத்து நினைவு வந்தது. இவர் தந்து விட்டுப்போன 'கவிதை என்றும்' மினி நூல் இவர் இலக்கிய உலகுக்குச் செய்த சேவை எனலாம். கண்டும் காணாததும் மாதிரி போகும் அவரிடம் 'என்னைத் தெரிகிறதா?' என்று சும்மா கேட்டேன். "ஓம் ஓம். நீங்க மு.பொ.தானே?" என்று கேட்டுக் கொண்டே கடந்து போனார்.

'வந்தாரை வாழ வைக்கும் தமிழ் நாடே நீ இப்படித்தான் நடந்து கொள்வாயோ?' என்று பாராசக்தி குணசேகரன் பாணியில் டயலாக் அடிக்கலாம் போல் பட்டது. ஹோட்டல் வளவுக்குள் சென்றேன். அங்கே ராஜகௌதமன் அவ்வளவு கலகலப்புக்குள்ளும் தானும் தானுமாக நின்றுகொண்டிருந்தார். அவர் அருகே சென்றேன்.

(இன்றும் வரும்)

## இரண்டாயிரத்துச் சொச்சங்களில்.....

எல்லாம்
முடிந்து போனது.
போரின் அனர்த்தங்களைத்
தேசம் -
படம் போட்டிருந்தது.

பூமியின் நிலப்பரப்பினடுவே
இறப்பிற்கு முன்
கடைசி மனிதன் ஏற்றிவைத்த
சுதந்திரக் கொடி மட்டும்
துருப்பிடித்த கம்பத்தில்
வர்ணமிழந்து
கந்தலான கோலத்தில்......
காற்றில் அலைக்கழிந்தபடி

எங்கும்
ஒரே நிசப்தம்!
கதைகளில் படித்த பூத பைசாசங்களின்
அமானுஷ்யமான ஒலிகளால்
நிரம்பப் பெற்ற வெற்றிடத்தில்
வாயு தேவனின் ஓலம்!

வானம்
அங்கு சிவப்பாயிருந்தது
ஞாயிறும் திங்களும்
மனித இரத்தத்தில் தோய்ந்திருந்தன

தனிமை...!
மிகக் கொடூரமான தனிமை!

சமுத்திரதேவன்
நிலமகள் தலைதடவி
ஆறுதல் தந்தான்

உன் வயிற்றில்
மூண்ட அக்னி
ஊழியின் முடிவை
படைப்பின் முதநிலையை
உலகிற்கீந்ததென்று
வாயுவும் சமுத்திரனும்
நிலமகளும்
சுதந்திர தேவியை
எட்டி உதைத்தனர்
புறக்கணித்தனர்

தொலைதூரம் வெறித்தபடி
உறக்கமற்ற இரவுகளுடன்
சுதந்திரதேவி தனித்திருந்தாள்
பசித்திருந்தாள்

ஒரு புதியமனிதனை
புதிய இரையை
எதிர்நோக்கியபடி......

அங்கு
சுதந்திரத்தின்
கடைசி நிலப்பரப்பு
மிகமிகச் சுருக்கமாகவே
இருந்தது.

- செல்வமனோகரி

நன்றி - நூலகத்திட்டம்



சித்தாந்தனின் காலத்தின் புன்னகையை முன்வைத்து,

# "நிசப்த வெளியில் பூசிய நிறங்கள் பிழியப்படுகின்றன"

~ போஸ்

எண்பதுகளின் பின் எமது வாழ்வில் போர் ஏற்படுத்திய அவலம் நிறைந்த வலிகள் குறித்து ஏராளமான படைப்புகள் வெளிவந்திருந்தாலும் யுத்தப் பிரதேசத்திற்குள் வாழும் கவிஞர்கள், படைப்பாளிகளின் படைப்புகள், இதுவரை காலமும் யுத்தப் பிரதேசம் தாண்டி வெளியே வரவில்லை. அல்லது மிகவும் கணிசமானவையே வெளித் தெரிந்திருக்கின்றன.

ஆயுதப் போராட்டத்திலும், அரசியலிலும் ஏற்பட்ட விருப்பு வெறுப்புகள் காரணமாக சகிப்புத் தன்மையை இழந்தோ அன்றி தனிப்பட்ட பார்வையில் ஆயுதப் போராட்டத்தையும் அரசியலையும் நோக்கி அதன் மூலம் எடுக்கப்பட்ட தனிநபர் முடிவுகளின்படியோ அல்லது போராட்டக் குழுக்களிடையே ஏற்பட்ட விரிசல்கள் காரணமாகவோ சுயதேவைகளின் பொருட்டோ யுத்தப்பிரதேசத்தை விட்டு வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் அல்லது புலம் பெயர்ந்து வெளிநாடுகளிலே இலக்கியத்திற்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் படைப்பாளர்களுடன்,

யுத்தப்பிரதேசத்தில் அதன் அழிவையும் இன்னல்களையும் நேரடியாக அனுபவித்து வரும் படைப்பாளர்களுக்கிடையே நிலவி வந்த, நிலவி வரும் புரிந்துணர்வு கொள்ள முடியாத இடைவெளி இருசாராரது இலக்கிய முயற்சிகளையும் ஒருவரையொருவர் அணுக விடாமல் தடுத்திருக்கிறது.

இது எதுவுமே இல்லையென்றால், யுத்தப் பிரதேசத்திற்குள் இருக்கும் படைப்பாளர்கள் மறுதரப்பினரால் புலிகளின் ஆதரவாளர்களாக நோக்கப்பட்டமையும், இந்த நோக்கம் தந்த புறக்கணிப்பு அல்லது அதனால் விளைந்த அச்சமும் நிச்சயமாக காரணமாகலாம்.

இந்த நிலைமாறி - பல ஆண்டுகளுக்கு முன்னமே நிகழ்ந்திருக்க வேண்டிய மாற்றம் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக நிகழ்ந்து கொண்டிருப்பதை சந்தோசத்துடன் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

கருணாகரனின் "ஒரு பொழுதுக்கு காத்திருத்தல்" தொடங்கி ஊழிப்பிரளயம் ஒன்றின் துயரங்களைப் பற்றியும் சந்தோஷங்களைப் பற்றியும் சொல்லிக் கொண்டே கிளிநொச்சி, முல்லைத்தீவு, சார்ந்த பிரதேசங்களிலிருந்து "இயல்பினை அவாவுதல்" (அமரதாஸின் கவிதைகள்),


**காலத்தின் புன்னகை**
(கவிதைத் தொகுதி)
ஆசிரியர் : **சிந்தாந்தன்**
விலை: 65.00
வெளியீடு:
குலன் வெளியீட்டகம்
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்

"மனமும் மனதின் பாடலும்" (முல்லைக்கமலின் கவிதைகள்), "ஆனையிறவு" (ஆனையிறவு வெற்றி குறித்து 42 கவிஞர்கள் எழுதிய தொகுப்பு)

"அந்த நாளை அடைவதற்காய்" (சுஜந்தனின் கவிதைகள்) "காலவெளி" (மயன் /2 என்ற பெயரில் கவிதைகளை எழுதிவரும் சு.மகேந்திரனின் சிறுகதைத் தொகுப்பு) "இரண்டாவது காலம்" (முல்லைக் கோணேசின் சிறுகதைகள்) ஆகியவற்றோடு தான் 48 பக்கங்களையும் 48 கவிதைகளையும் கொண்ட சித்தாந்தனின் "காலத்தின் புன்னகை"யும் சேர்கிறது.

இத்தொகுப்புகளின் மீது தென்னிலங்கையிலிருந்தும் ஈழத்தின் பிற பகுதிகளிலிருந்தும் வெளிவருகின்ற பத்திரிகைகளிலிருந்தும் சஞ்சிகைகளும் காட்டிவரும் ஆர்வமும் அக்கறையும் ஈழத்து இலக்கியத்திற்கு விமோசனத்தைக் கொடுக்கும் என்று நம்ப வைக்கிறது. இந்த நம்பிக்கையின் தொடர்ச்சி தான் "காலத்தின் புன்னகை" கவிதைத் தொகுப்பிற்கான இக்குறிப்பும்.

உண்மையில் "காலத்தின் புன்னகை" மட்டுமல்ல எமக்கான காலமும் கூட படிமங்களாலும், குறியீடுகளாலும் தானே கட்டப்பட்டிருக்கிறது. இத்தொகுப்பிலுள்ள அநேக கவிதைகளும் இப்படி இயங்கிக் கொண்டிருப்பதால் இத்தொகுப்பிற்கு முன்னுரை வழங்கியுள்ள கருணாகரன் அவர்கள் குறிப்பிடுவது போல இக்கவிதைகளை உணர்ந்து கொள்வதற்கு புதிய முறையிலான வாசிப்பு அவசியமாகிறது. படைப்பைப் புரிந்து கொள்ளல் என்பது வாசகனுடைய




உள்வாங்குதலிலும் படைப்புத் தொடர்பான ஈடுபாட்டிலும், வாசிப்பவர் அப்படைப்புத் தொடர்பாக எய்திருக்கும் பக்குவ நிலையிலிருந்துமே ஆரம்பிக்கிறது.

ஒரு படைப்பு எம்மால் புரிந்து கொள்ள முடியாததாயிருக்கிறது என்று தோன்றும் போது அதற்கான பங்கை எழுதுபவர் மேலே செலுத்தி விடுதல் பொருத்த மானதா? மாறாக அதற்குரிய கணிசமான பொறுப்பை வாசகரும் ஏற்றுக் கொள்ளத் தானே வேண்டும்.

காலத்தின் புன்னகைக்கு பின்னே இருக்கும் துயரமும் அழுகையும் பிரிவும், அவலமும் இடியாய் இறங்குகிறது கண்களிலும்.

எல்லையற்ற காலத்தின் மீது பயணம் செய்யும் அவரது கவிதை மொழி மூன்று ஆண்டுகளில் அபரிதமான வளர்ச்சி கொண்டிருக்கிறது. இந்த அபரிதமான வளர்ச்சியின் அடிச்சறுக்கல்களோடு தான் நகர்ந்து செல்கின்றன கவிதைகள். எனினும், ஒரே பிரதேசத்திற்குள் ஒரே காலத்தில், ஒரே பிரச்சினைக்குள் வாழும் எல்லாக் கவிஞர்களையும் போலவே இவரது உணர்தலும் இப்பிரபஞ்சத்தின் விடிவு நோக்கி விரிவதை நாங்கள் உணரலாம்.

இக்காலம் தனது புன்னகையால் தனது வலியால் தனது கண்ணீரால் எல்லோரையும் கட்டி வைத்திருப்பதைப் போலவே சித்தாந்தனையும் பிணைத்திருக்கிறது தனது விலங்கால்.

'இரவு சூரியனை
மெல்ல மெல்லத் தின்று கொண்டிருக்கிறது.
நீ இரவின் மடியை நிறைத்து
உறங்கிக் கொண்டிருந்தாய்.
நான் குழப்பங்களில் மனம் மோதிட
விழிகள் பெருத்துக் கிடந்தேன்
இரவு ஏளனம் ததும்பச் சிரித்தது'.

(குழம்பிப்போன மனதின் இரவு பக். 17)

இப்படித்தான் ஒவ்வொரு முறையும் நடக்கிறது. அவரது கவிதைகள் நிகழும் எல்லாக் காலங்களிலும் ஒரு பொறிக்கான காத்திருப்பிலும் தேடலிலும் கிடைத்த சந்தோஷத்திலும் கிடைக்காத துயரத்திலும் சறுக்கிச் சறுக்கியாவது எட்டிவிடத் துடிக்கும் அவரது வானம் காலத்தின் விதம் விதமான வர்ணங்களாலானது.

ii

படைப்பின் மூலம் தீர்வு சொல்லுதல் அல்லது தீர்வை வாசகருக்காக விட்டுவிடுதல், படைப்பொழுங்கை வலியுறுத்தல் என்பவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு படைப்பின் முதல் உரு படைப்பாளருக்காயிருத்தலே - படைப்பில் இயங்குவது படைப்பாளரின் மனவெளியே - இங்கு முக்கியமானது. தொகுப்பாக்குதல், பத்திரிகைகளுக்கு படைப்பை அனுப்புதல் போன்ற நிகழ்வுகளின்போது படைப்பாளனர் வாசகர்களுக்காகி விடுகிறார். சித்தாந்தனின் "காலத்தின் புன்னகை"யிலும் அவர் மன வெளியில் பயணம் செய்து வாசகர்களுக்கானவராக வருகிறார். தனது அநேகமான கவிதைகளில் வாசகர்களின் - அது தான் உணர்ந்த தன்னுடைய சமூகம் அனுபவித்துணர்ந்த பிரச்சினைகளாய் இருந்தாலும் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லிக் கொண்டே நம்பிக்கையூட்டுகிறார்.

'...ஒன்றை மட்டும் உணர்ந்திரு
பூமியின் சுழற்சியாய் காலமாற்றம்
இது உனக்கான காலமாய் இருக்கிறது
நாளை நமக்கான காலம்
திசைகளை கிழித்து நிமிரும்'.

(சக்கரம் பக். 28)

இப்படியும்

'... வாசல் வரை வந்தும்
நீட்டிய எம் கைகளில்
நீ விரல் பதிக்க மறுத்து திரும்பியது
ஞாபக ஊசிகளாய் குத்துகின்றன
இப்போது நீ உயிரில் தீ பற்றிக் கொள்ள
வெளிக்கிளம்பும் விருப்புற்று
இருப்பதாய்
அறிந்தேன்
வருவதற்குள் நீயும் உன் தடயங்களை
கொடுத்து விட்டு வா'

(நித்தியப்படுத்தல் பக்.29)

என்றும் கூறிக்கொண்டே,

சமூகத்தின் துரோகத்தனங்களுக்கும் போலியான வாழ்விற்கும் தன்னை ஆட்படுத்த விரும்பாத ஒரு மனிதர் எவ்வாறு அதனுடன் தன்னை சமரசம் செய்ய மறுக்கிறார். அதன் விளைவாக சமூகத்திலிருந்து விலகிப் போகிறார். அல்லது சமூகம் எவ்வாறு அவரைப் பின்தள்ளிப் புறக்கணிக்கிறது என்பது குறித்தெல்லாம் விசாரணை செய்து கொண்டு சித்தாந்தன் தனது காலத்தின் புன்னகையூடே எங்களைப் பயணிக்க வைக்கிறார். பல சந்தர்ப்பங்களில் தனது இருப்பை நிலைநிறுத்துவன் மூலம் வாசகரை நோக்கியும் இவ்வாறு இருத்தல் மூலமே உன்னைத் தற்காத்துக் கொள்ள முடியும்.

'என்னோடு உனக்கு சமரசம் இல்லை.
உலைத்தீயை உமிழும் உனது இதயத்தில்
வெண்சாமரை வீசும் எனது வார்த்தைகள்
எடுபட நியாயமில்லை
... ..................
... ..................
... ..................
..................
வதைப்பதை
நான் விரும்பியதே இல்லை
உனது அழிவிற்கு
என காரணமாகத் திணித்தும்
இருக்கிறாய்
நான் நெருப்பானது உன்னால்
நீ உனது பயணத்தில்
கல்லாயும் முள்ளாயும் இருக்கும் வரை
நானும் நெருப்பாகவே இருப்பேன்'

என்று சொல்கிறார்.

(கொதிப்பு பக். 41)

யுத்தப் பிரதேசத்துக் கவிஞர்கள் தங்கள் காத்திருப்பின் எல்லையை காலத்தின் கொடூரங்களை: சிங்கள அரசு மக்களின் மீது பிரயோகிக்கும், வன்முறைகளை, உணர்த்துவதற்கு பிரயோகிக்கும் குறியீடுகள், படிமங்கள், சொற்களின் ஒழுங்கு எல்லாம் மிகவும் வித்தியாசமான தளத்தினைக் கொண்டமைந்தவை.

சித்தாந்தனின் "பிணந்தின்னி" என்ற கவிதையும் நல்ல உதாரணம்,

கரிய வானத்தில்
தன் சிறகுகளின் படபடப்புடன்
வட்டமிடுகிற பிணந்தின்னி.
பரவசத்தில் தோய்ந்த
அதன் கனவுகளில் துர்நாற்றம்
பிசிறிப் படர்கிறது.
அதன் கரிய அலகுகளில்
குருதி எப்போதுமே வழியும்.
பிணந்தின்னி ஒரு பாலைநில வாசி.
அது நீண்ட தன் இறக்கைகளை
விரிக்கும் போதெல்லாம்
அக்கினி ஜூவாலையாய் உதிரும்
அதிலிருந்து எழும் உயிர்களின் ஓலங்கள்
இருள் வானச்சுவர்களில் எதிரொலிக்கும்.
பிணந்தின்னி எல்லாப் பறவைகளையும்
போலல்ல:
ஆனால் அது ஒரு பறவையும் கூட அல்ல.
அதன் உந்துதலின் ஒலியில்
உயிர்குடித்தலின் விகார ராகம்.
பிலிற்றியபடி இருக்கும்.

இதைவிட சித்தாந்தனின் நம்பிக்கையும் எமது நம்பிக்கையுமாகிய "ஆதியிலிருந்து என் வருகை" தான் இங்கு ஒளியாயிருக்கின்றது, எமது காத்திருப்பிற்கெல்லாம் மீண்டும் மீண்டும் உத்வேகமளித்தபடி.

'ஆதியிலிருந்து நான் வருகிறேன்.
என் வருகை முதலில்
நந்தவனங்களுக்கூடாய் நிகழ்ந்தது.
பின், எரிந்த வனங்களுடாய் நிகழ்கிறது.

சாம்பல் மண்டிய மேடுகளில்
என் சுவடுகள் முளைத்திருக்கின்றன.

யௌவனம் சுருங்கி துயர்கீறிய
என் முகம் விழிகளை
நந்தவனக் கனவுகளுக்குள்
தொலைத்திருக்கிறது.

வெப்பம் வழியும் போதுகளுக்குள்ளும்
என் வருகை நிகழ்கிறது.

வீச்சு நிரம்பிய என் பாதங்கள்
அனலில் நனைந்து நனைந்து
வீறடைந்து சுவடுகளைப் பெருக்குகிறது.

ஆதியிலிருந்து நான் வருகிறேன்
என் வருகை நந்தவனங்களுடாய் நிகழும்
கனவுகளில் திளைத்திட நான் வருகிறேன்.'

இந்த நம்பிக்கையோடு கிளிநொச்சி, முல்லைத்தீவு, பகுதிகளில் இருந்து வெளிவரவிருக்கும் எஸ்.உமாஜிப்ரானின் கவிதைத் தொகுப்பு, காக்கா அண்ணரின் நினைவுப் பதிவுகள், போராளிப் பெண்கவிஞர்களான ஆதிலட்சுமி, அம்புலி போன்றோரின் கவிதைத் தொகுப்புகள், போன்றவற்றோடு நிலாந்தனின் மண்பட்டினங்கள், கருணாகரனின் இரண்டாவது கவிதைத் தொகுதி, இளம் பெண் சிறுகதை எழுத்தாளராகிய ரஜனியின் சிறுகதை தொகுதி ஆகியவற்றிகாகவும் ஏனையவற்றிற்காகவும் நாங்கள் காத்திருக்கலாம்.

நன்றி - நூலகத்திட்டம்



– எம்.பௌஸர்

நமது வாழ்க்கை நமது அரசியல் மீதான விமர்சன ரீதியான ஒரு கவிதைக் குரல்.

ஔவை ஈழத்து தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தின் இரண்டு முக்கிய கட்டங்களின் கவிதா பரம்பரையின் மற்றுமொரு கிளை மஹாகவி, சேரன் என்ற அவ்விரு கவிதைப் பரம்பரையின் சிறந்த உறவாக இருந்தாலும் கூட அவரின் கவிதைத் துாறல் இவ்விருவர்களிலிருந்தும் வித்தியாசமானது.


குறிப்பாக ஒரு பெண் கவியாக இருந்தும் கூட, அவரது கவிதைகள் நமது ஒட்டு மொத்த வாழ்வின் மீதான அக்கறையுடனேயே பிறக்கின்றன. பெண்ணிய நிலைப்பட்ட் ஆணாதிக்கத்திற்கு எதிரான தளத்தில் மட்டும் அவர் வாசம் செய்யாது ஒட்டு மொத்த இன்றைய தமிழ் வாழ்வின் மீதான தனது குரலை கவிதைகள் ஊடாகப் பதிவு செய்திருக்கிறார். அந்த வகையில் ஈழத்து பெண் கவிகளுக்குள் ஔவை தனித்துவமாக வெளிப்பட்டு நிற்கின்றார்.

இன்றைய ஈழத்துக் கவிதைகளை விடுதலைப் போருக்கு நிபந்தனையற்று ஆதரவு தருபவை, விடுதலைப் போர் தொடர்பான விமர்சன பூர்வமானவை என இரு வகையாகப் பிரிக்கலாம் என யமுனா ராஜேந்திரன் நட்சத்திரன் செவ்விந்தியனின் "எப்போதாவது ஒரு நாள்" என்ற கவிதைத் தொகுதி முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

ஔவையின் கவிதைகளை இவ்விமர்சனத் தளத்தில் நின்று பார்க்கும் போது இரண்டாவது வகையைச் சார்ந்தவராகவே உள்ளார்.

தமிழர்களின் கலாசார வாழ்விற்கும் - அரசியல் போராட்டத்திற்கும் எதிரானவரல்ல ஔவை. ஆனால் இவற்றின் விளைவாக எழும் மனித வாழ்வின் மீதான, துன்பம், அடக்குமுறை, கருத்துச் சுதந்திரமறுப்பு, தனிமனித அழிப்பு, மனக்குமுறல், பிரிவு, ஆற்றாமை போன்ற மனித உணர்வுகளின் உன்னதங்களை நிராகரித்து விட முடியாத தமிழ்ச் சூழலின் தமிழ் வாழ்வின் மனச்சாட்சியின் பிரதிநிதியாகவே அவரின் கவிதைகள் உள்ளன.

எல்லை கடத்தல் என்ற இத்தொகுதியில் ஔவையின் பதினெட்டுக் கவிதைகள் உள்ளன. இன்னும் அவரது ஓரிரண்டு கவிதைகள் இத்தொகுதியில் விடுபட்டும் இருக்கலாம் என நம்புகிறேன். - எண்பதுகளில் எழுதத் தொடங்கிய ஔவை - கடந்த இரண்டு தசாப்தங்களாக இருபதுக்குட்பட்ட கவிதைகளையே எழுதியுள்ளார். ஆகவே, அவர் கவிதை எழுதுவதை அவரின் மனத் துாண்டலுக்குட்பட்ட பிரசவமாகவே நடாத்தி இருக்கின்றார். ஔவை கவிதைத் தயாரிப்பில் ஈடுபடவில்லை.




இத்தொகுதிக்கு முன்னுரை எழுதியுள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த அ.மங்கை இப்படித் தனது முன்னுரையைத் தொடங்குகிறார். "ஔவை நீ சைக்கிளிலும் நடந்தும் யாழ்ப்பாணத்து கிராமங்களில் பயணித்தாய், பாடல்கள் இசைத்தாய், மக்களோடு பேசினாய், பல்கலைக்கழக வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டாய், விஜிதரனில் தொடங்கி இன்னும் பலப் பல நட்புகள் ... கால் மட்டும் உன்னோடு கூடவர மண்ணை விட்டுப் புறப்பட்டாய், பள்ளி ஆசிரியையாய் சிறுமியர்க்கு தோழியாய் இருக்கின்றாய் - தாயாய், மனைவியாய், காலம் கழிகிறது.

உன்வாழ்வு தொடர்கிறது இன்றுவரை... இவற்றில் எதையும் நான் நேரில் கண்டவள் இல்லை. ஆனால் இதைப் போன்ற பலரில் ஒருத்தியாக நானும் இருந்திருக்கிறேன். மேலும் பலரைக் கண்டிருக்கிறேன். காண்கிறேன். எங்களின் குரலாக உன்கவிதைகள் உன் உள் மனப்பதிவாக உன் கவிதைகள்... என எழுதுகிறார்.

மங்கையின் முன்னுரையில் உள்ள "எங்களின் குரலாக உன் கவிதைகள், உன் உள் மனப்பதிவாக உன் கவிதைகள் என்கின்ற சிந்தனை வெளிப்பாடு மிகவும் முக்கியமாகிறது. பொதுவாக மனச்சாட்சியின், மானிட வாழ்வின் குரல் என்பது தேச எல்லைகளைக் கடந்து, மானிட வாழ்வின் பொதுவான குரலாக உள்ளதை ஔவையின் கவிதைகள் நமக்கு நிரூபிக்கின்றன.

இன்றைய தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட தவிர்க்க முடியாச் சூழலின் அரசியல் பகைப்புலத்தில் - ஔவையின் கவிதைக் குரல் தொடர்பாக பல்வேறுபட்ட விமர்சனங்கள் - கருத்து நிலைகள் எழ வாய்ப்பு உள்ளது. ஆனாலும் - ஒரு மனச்சாட்சியின் குரல் முற்று முழுதாக நிராகரிக்கப்பட முடியாத என்பதை உணர்வதற்கு இத்தொகுதியிலுள்ள ஔவையின் கவிதைகள் மிகப் பெரும் ஆவணமாக அமையும்.

**எல்லை கடத்தல்**

(கவிதைத் தொகுதி)

ஆசிரியர் : **ஔவை**

விலை:100.00

**வெளியீடு:**

மூன்றாவது மனிதன் பதிப்பகம்

37/14, வொக்ஷோல் லேன்,

கொழும்பு - 02

**கிடைக்குமிடம்:**

பூபாலசிங்கம் புத்தக சாலை,


கொழும்பு.

# சலுகைகளுக்கு அடி பணியோம்!

ஐயா தங்கள் பத்திரிகையின் ஒக்.8-14 வரையான இதழ் கிடைக்கப் பெற்றேன், அதில் கட்டுரை ஆசிரியர் டி.சி. அவர்களால் எழுதப்பட்ட "வெட்கம் கெட்டவர்க்கு வாக்குப் போட்டு வீழ்ந்து தான் போவோமா" என்ற கட்டுரை யாழ்ப்பாணத்து மக்களை சுயகௌரவத்தை விட்டுவிட்டு அற்ப சலுகைகளுக்காக அடிபணியும் இனமாகக் காட்டியுள்ளது. இது முற்றிலும் தவறு என்பதை மக்கள் தேர்தல் மூலம் நிரூபித்து விட்டார்கள்.

பெரும்பாலான மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. சில மக்கள் தாம் வாக்களிக்கச் செல்லாது விட்டால் தமது வாக்குகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டு விடும் என்பதற்காகவே வாக்களித்தார்கள்.

அவர்கள் சலுகைகள் அள்ளி வீசிய கட்சிகளுக்கு வாக்களிக்கவில்லை. மாறாக தமிழ் இன உணர்வின் அடிப்படையிலேயே கூட்டணிக்கும் காங்கிரசுக்கும் அளித்தனர். ஆனால், சலுகைகள் வழங்கிய கட்சி முறையற்ற விதத்தில் வாக்களித்துத் தான் தமக்கு 4 பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றது என்பது இன்று நாடு அறிந்த உண்மை.



குறிப்பாக அக்கட்சி ஊர்காவற்துறைத் தொகுதியில் பெற்ற 12,311 வாக்குகளே அவ் வெற்றியைப் பெரிதும் தீர்மானித்தது. ஊர்காவற்துறையில் நடந்த உண்மை என்ன? அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட பொறுப்பான அதிகாரிகளால் நண்பகலுக்குப் பின்னர் வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்காதோரது இலக்கங்கள் குறிப்பிடப்பட்டு வாசலில் காத்து நின்ற குறிப்பிட்ட கட்சிக்கு வழங்கப்பட்டது.

அவர்கள் அவசரமாக வாக்களித்ததும், இறுதியில் வேடிக்கை என்னவெனில், ஆண் வாக்காளர்களின் இலக்கத்திற்கு பெண் வாக்காளர்களும், பெண் வாக்காளர்களின் இலக்கத்திற்கு ஆண் வாக்காளர்களும் வாக்களிக்க பெருமளவு அனுமதிக்கப்பட்டதும் எல்லோருக்கும் தெரிந்ததுமான இரகசியம்.

ஒரு சில வாக்களிப்பு நிலையங்களில் மட்டுமே ஆண் பெண் வேறுபட்ட வாக்காளர் திருப்பி அனுப்பப்பட்டு அவர்கள் ஆண் பெண் திருத்தி பின்னர் வாக்களித்தனர். இவ்வாறான நிலையில் தான் யாழ் தேர்தல் முடிவு தீர்மானிக்கப்பட்டது. எமது மக்கள் அற்பசலுகைகளுக்காக வாக்களிக்கும் இனமாக ஒரு காலமும் இருக்க மாட்டார்கள் எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றேன்.

தயவு செய்து இவற்றைக் கருத்தில் எடுத்து வாசகர்களுடைய தப்பபிப்பிராயங்களை நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தே. செந்துாரன், யாழ்ப்பாணம்

# அவர்களே தயாரித்தனர்!

அண்மையில் யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தில் தொண்டர்களாகப் பணி புரியும் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். பல வருடங்களாகத் தொண்டர்களாக கடமையாற்றிவரும் இவர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. ஆனால், கொழும்பிலிருந்து சுகாதாரத் திணைக்கள சிற்றூழியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்காக பெயர்ப்பட்டியல் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

இந்தப்பட்டியலில் ஏற்கெனவே கடமையில் இருந்தவர்களில் (தொண்டர்களாகப் பணியாற்றியவர்கள்) ஒருவரின் பெயர் கூட இடம்பெறவில்லை. இதன் காரணமாகவே சுகாதாரத் தொண்டர்கள் யாழ். மாவட்ட சுகாதாரப் பணிமனை முன்பாக மறியல் போராட்டம் நடத்தினர். இவர்களின் மறியல் போரையடுத்து யாழ். மாவட்ட பிரதி சுகாதாரப்பணிப்பாளர் வடகிழக்கு மாகாண சுகாதாரப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டதையடுத்து நேர்முகப்பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய பட்டியல் தயாரித்தவர்கள் யார் என்பது தேவையில்லாத கேள்வி சமுர்த்தி தொண்டர்ராசிரியர், வங்கி நியமனங்களை வழங்கியவர்களே புதிய பட்டியலையும் தயாரித்துள்ளனர்.

~ எழுவான்

## சரிநிகர் வாசகர்களின் கேள்விகட்கு தலைவர்கள் பதிலளிக்கிறார்கள்!

| | |
|---|---|
| – டக்ளஸ் தேவானந்தா | ஈழமக்கள் ஜனநாயக கட்சி |
| – ஆனந்த சங்கரி | தமிழர் விடுதலைக் கூட்டணி |
| – விநாயக மூர்த்தி | அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் |
| – செல்வம் அடைக்கலநாதன் | தமிழீழ விடுதலை இயக்கம் |

உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். கேள்விகள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் பொதுசன அக்கறையை வெளிப்படுத்துபவையாகவும் இருக்கட்டும். (ஏற்கனவே வந்த கேள்விகளுடன் இவ்வாரக் கேள்விகளும் சேர்த்து பா.உக்களுக்கு அனுப்பப்படும். உங்கள் கேள்விகளை விரைவில் அனுப்புங்கள்)
கேள்விகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

ஆசிரியர் சரிநிகர், 19/04, 1/1 நாவல வீதி, நுகேகொட

## *சரிநிகர் வார இதழ் சந்தாதாரர்களுக்கு ஒரு அறிவித்தல் !*

*உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்!*

*புதிய சந்தா விபரம் :*

| சந்தா விபரம்: ஆயுள்சந்தா | மாதங்கள் | ஒரு வருடம் |
|---|---|---|
| உள்நாடு: | 350/= | 750/= |
| இந்தியா: | 15 US$ | 25 US$ |
| வெளிநாடு: | 30 US$ | 50 US$ |

முகவரி:
சரிநிகர், 19/4, நாவல வீதி, நுகேகொட, இலங்கை.

தொலைபேசி : 815004, 814859
தொலைமடல் : 815003

மின்னஞ்சல்:sarini@sltnet.lk

***ஏற்கனவே சந்தா கட்டியுள்ளவர்களுக்கு வார இதழ் சந்தா விபரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.***

*கவனத்திற்கு: சந்தாவுக்கான பணத்தினை காசோலையாக அனுப்புவோர் 'Sarinihar' என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.*

நன்றி - நூலகத்திட்டம்




# சரிநிகர்

வார இதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

மின்னஞ்சல்: sarini@sltnet.lk


## நிமலராஜன் படுகொலை: பொறுப்பு யாருக்கு?

பத்திரிகையாளரும், செய்தியாளருமான நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் அச்சுறுத்தலையும் நாடு பூராவும் ஏற்படுத்தி விட்டுள்ளது.

சுதந்திரமான பத்திரிகையாளர்களின் செயற்பாட்டுக்கு தொடர்ந்து நிலவி வந்த அச்சுறுத்தலுக்கும் மிரட்டலுக்கும் இறுதியாகப் பலியாகியுள்ளவர் நிமலராஜன்.

ஆட்சியிலுள்ள பொ.ஐ.மு. அரசாங்கத்தின் கடந்த பாராளுமன்ற காலத்தின் இறுதி வருடங்கள் தொடர்ச்சியான அச்சுறுத்தலை பத்திரிகையாளர் மீது கட்டவிழ்த்து விடுவதாக அமைந்திருந்தன. கடத்தல், கொலைமிரட்டல், கொலை, அடாவடித்தனம் போன்ற பல்வேறு வடிவங்களிலும் இந்த அச்சுறுத்தல் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

இப்போது யாழ் நகரில் வைத்து கொல்லப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலை, இந்த வகையிலான போக்கு இந்தப் பாராளுமன்ற ஆட்சிக் காலத்திலும் தொடரப் போகிறது என்பதற்கான சமிக்ஞையாக நடந்து முடிந்துள்ளது.

கடந்த தேர்தலின் போது நடந்த முறைகேடுகள் தொடர்பாகவும், அங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும் தகவல்களை தமிழ், சிங்கள மொழி மூலம் வழங்கி வந்த நிமலராஜனது வாயை மூடிவிட்டுள்ளனர் கொலையாளிகள்.

யாழ். பல்லைக்கழக மாணவர்களின் ஒன்றியம் முதல், பிற அரசியல் கட்சிகள் பத்திரிகைகள் தொடர்புசாதனங்கள் வரை அனைவரும் இப்படுகொலைச் சம்பவத்திற்கு காரணகர்த்தாக்கள் யார் என்று நேரடியாக குற்றம் சாட்டியுள்ளனர்.

இப்படுகொலையை கண்டிப்பது மட்டுமல்ல சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடித்து மக்கள் முன் நிறுத்தும் பொறுப்பு சகல தமிழ் இயக்கங்களுக்கும் கட்சிகட்கும் உளது.

அவர்கள் அனைவரதும் சுட்டுவிரல் ஈ.பி.டி.பியினை நோக்கியே நீட்டப்பட்டுள்ளது.

இப்போது அமைச்சராகியுள்ள, அரசாங்கத்தின் அங்கமாகிவிட்டுள்ள டக்ளஸ் தேவானந்தவின் ஈ.பி.டி.பியினராலேயே இந்தப் படுகொலை செய்யப்பட்டுள்ளதென்றே கொலை நடந்த சூழல் மற்றும் காரணகாரிய தொடர்புகள் அனைத்தையும் ஆதாரம் காட்டித் தெரிவிக்கின்றனர் அங்குள்ள செய்தியாளர்கள்.

இதேவேளை இப்படுகொலையை அரச உளவுப்படையினர் செய்திருக்கலாம் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. புலிகளுக்கு சார்பானவர் என்ற குற்றச்சாட்டுகளின் பேரில் இவர்களால் நிமல்ராஜன் பல தடவை எச்சரிக்கப்பட்டுள்ளார்.

செய்தியாளர் ஒருவரைக் கொல்வது என்பது ஒரு தேசத்தின் மக்களது மனச்சாட்சியைக் கொலை செய்வதாகும். மக்களின் மனச்சாட்சிக்கேற்ப அவர்களை நடக்கவிடாது, அவர்களது ஜனநாயக உரிமைகளை பிடுங்கித் தங்களது கைகளில் வைத்துக் கொண்டிருக்கும் அரசியல் அடாவடித்தனக் கும்பல்கள் மற்றும் ஆயுதக்குழுக்களால் மட்டுமே இத்தகைய ஒரு கொலையைச் செய்யமுடியும்.

மக்களின் ஜனநாயக உரிமைக்கு மதிப்பளித்து அவர்களது தேவைகள் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்காக செயற்படுவோம் என்று கூறிக்கொண்டு தேர்தலில் நிற்கும் 'ஜனநாயகப் பாதைக்கு' வந்த முன்னைநாள் விடுதலை இயக்கங்களும் கூட, இன்று மக்களை அடக்கி ஒடுக்கி ஆளும் ஆதிக்க மனோபாவத்துடன் செயற்பட்டு வருகின்றன. துப்பாக்கிகளாலும், குண்டுகளாலும் மக்களை அடிபணியவைத்து ஆட்சியதிகாரத்தில் வீற்றிருக்கும் அதிகார வெறியுடன் செயற்படுகின்ற இந்த மாதிரியானவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மக்களால் தூக்கிவீசப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறந்து விடுகிறார்கள். கடந்த தேர்தல் கூட இதற்கு ஒரு நல்ல உதாரணமாக இருந்தது என்பதை சொல்லிவிளக்கத் தேவையில்லை. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற இயக்கங்கள் தூக்கிவீசப்பட்டது இதற்கு நல்ல உதாரணம். வடக்கில் அடாவடித்தனமில்லாத வாக்களிப்பு நடந்திருந்தால் டக்ளஸ் அவர்களுடைய கட்சிக்கும் ஒரு ஆசனமாவது தேறியிருக்குமா என்பது சந்தேகமே.

தமக்கு சம்பந்தமிருப்பதாக 'விசமப்பிரச்சாரம் செய்கிறார்கள்' என்று பத்திரிகைகளை விமர்சிக்கும் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் கூட இந்தப் பொறுப்பு இருக்கிறது.

நிமலராஜனின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள இங்கிருந்து போகமுற்பட்டவர்களை போக அனுமதிப்பதற்கு கூட அரசாங்கத்திற்கு மனம்வரவில்லை என்றால், அந்த அனுமதியைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை தமது பொறுப்பாக எடுத்து செயற்பட புதிய பா.உக்களுக்கும் கூட நேரமில்லை என்றால், அவர்களால் வேறென்ன தான் செய்ய முடியும்?

கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களைப் பிடிப்பதற்கு இந்த இயக்கங்களுக்கும் அரசாங்கத்திற்கும் அக்கறை இருந்தால் அது நடக்க முடியாத காரியம் அல்ல. ஆனால், இவர்கள் இதைச் செய்வார்களா? வெறுமனே கண்ணீர் அஞ்சலி, விசாரணை என்று கத்திவிட்டு மௌனமாகி விடுவார்களா?

இன்று இக்கொலையை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடாத்தும் பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல, முழு மக்களுமே கிளர்ந்தெழுந்து இதை எதிர்த்து இறங்க வேண்டும். ஏனென்றால், இது வெறும் நிமலராஜனின் கொலையுடன் நிற்கப் போவதில்லை.

இது இந்த ஆட்சிக்காலத்தில் முழு தேசத்தின் மனச்சாட்சியையும் கொல்லப் போகும் நடவடிக்கைக்கான ஆரம்பம்!

## பண்டாரவளையில் நடந்த படுகொலைகள் :

## 25 தமிழ் இளைஞர்கள் வெட்டியும் குத்தியும் கொலை!

### 23பேர் படுகாயம்.! 16 பேர் நிலை கவலைக்கிடம்!!.

## சிங்கள வீர விதானவுக்குச் சம்பந்தம்?

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பண்டாரவளையிலுள்ள் பிந்துனுவேவ பகுதியில் அமைந்துள்ள புனர்வாழ்வு தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் மீது வாள்,கத்தி,கோடரி,பொல் போன்ற ஆயுதங்களுடன் கடந்த புதன அதிகாலை வந்த காடையர் கூட்டம் ஒன்று தாக்கியதில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதலில் படு காயமடைந்த 23 பேரில் 16 பேரின் நிலை கவலைக்கிடம் என்று தெரியவருகிறது. இவர்களில் 4 பேர் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பண்டாரவளை ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் கிராம வாசிகளது தன்னிச்சையான ஒரு தாக்குதல் என்று ஒரு சிலரால் சொல்லப்பட்ட போதும் சம்பவம் நடந்த விதத்தை நோக்கும் போது இது ஒரு திட்டமிட்ட படுகொலைத்தாக்குதலே என்று தோன்றுகிறது என்கிறார் பிரபல பத்திரிகையாளரும் மனித உரிமைவாதியுமான சுனந்த தேசப்பிரிய. இந்தக் கைதிகளை உடனடியாக அங்கிருந்து வெளியேற்றுமாறும் இந்த புனர்வாழ்வு முகாமை மூடிவிடுமாறும் பலதடவைகள் அதிகாரிகளை நோக்கி அங்குள்ளவர்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் அரசாங்கம் இது தொடர்பாக எந்த அக்கறையும் காட்டவில்லை என்பதாலேயே கிராமவாசிகள் இதைச் செய்துள்ளதாக கூறுகிறார்கள். கிராம வாசிகட்கும் இதில் பங்கிருக்கக் கூடுமாயினும் இது வெறுமனே அவர்களால் செய்யப்பட்ட விடயம் என்று ஒதுக்கிவிட முடியாது. ஏனென்றால் சம்பவம் நடப்பதற்கு முதல் நாள் பண்டாரவளை நகரெங்கும் "அரசாங்கத்தால் அகற்ற முடியாத முகாமை நாம் அகற்றிக் காட்டுவோம் "என்று குறிப்பிடப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுக் காணப்பட்டன. சம்பவம் நடந்த பின்னர் ஒட்டப்பட்டிருந்த இன்னொரு சுவரொட்டியில் "புலிகளின் இறைச்சி எங்கள் நாய்களுக்கு"என்ற வாசகங்கள் காணப்பட்டன. அத்துடன் தாக்குதலுக்காக வந்தவர்கள் இரத்தினபுரிப் படுகொலைகளின் போது வந்தது போல லொறிகளில் வந்து இறங்கியிருக்கிறார்கள். ஆகவே இது நிச்சயமாக ஒரு நன்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கை என்பதில் சந்தேகம் இல்லை என்கிறார் அவர். தடுத்துவைக்கப்பட்ட இளைஞர்களில் பலர் நீண்ட காலமாக எந்தவித விசாரணையுமின்றி தடுத்துவைக்கப்பட்டிருப்பது தொடர்பாக இளைஞர்களுக்கும் அதிகாரிகட்குமிடையே பிணக்கு இருந்து வந்தது.தமது பாதுகாப்புக்கருதி தம்மை வேறு இடத்திற்கு மாற்றும்படி கைதிகள் பல தடவை கேட்டபோதும் நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.கிட்டத்தட்ட 10இளைஞர்களுக்கு விடுதலை செய்யப்படலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவர்களும் பல நாட்களாக விடுவிக்கப்படவில்லை.இதுகுறித்து அதிருப்தி அடைந்த இளைஞர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியிருந்தனர். இதைத்தொடர்ந்து இவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றதாகவும் தெரியவருகிறது. அன்று தோன்றிய ஒரு பதட்டநிலையைத் தொடர்ந்து பாதுகாப்புக்கு இராணுவம் அழைக்கப்பட்டிருந்த போதும் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால் அது திரும்பிச் சென்று விட்டது என்று அறிவிக்கப்படுகிறது. ஆயினும் சுமார்35 பொலிசார் அங்கு காவலில் நின்றிருந்தனர்.மறுநாள் அதாவது புதன் அதிகாலை தாக்கிய கும்பலுக்கெதிராக பொலிசார் செயற்பட்டதாகத் தெரியவில்லை.காடையரது தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்த போது பல துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டனவாயினும் தாக்கவந்தவர்கள் யாரும் காயமுற்றதாகத் தெரியவில்லை. இதையும் தாக்கப்பட்ட இளைஞர்கள் பொலிசாருக்கெதிராக தாக்குதலெதிலும் ஈடுபட்டதற்கான தடயங்களெதுவும் இல்லாமலிருப்பதும் இத்தாக்குதலில் பொலிசாருக்கும் சம்பந்தமிருப்பதாக சந்தேகம் கொள்ள வைக்கிறது.

இந்தத் தாக்குதலின் போது யாரும் துப்பாக்கிகளால் தாக்கப்படவில்லை. கத்திகளாலும் கோடரிகளாலும் குரூரமாக வெட்டியும் கொத்தியுமே அனைவரும் கொல்லப்பட்டுள்ளார்கள் இச்சம்பவத்தின் போது முகாம் முற்றாக தீயிட்டுக் கொழுத்தி அழிக்கப்பட்டுள்ளது.கொல்லப்பட்ட இளைஞர்களின் சடலங்கள் எல்லாம் அடையாளம் காணமுடியாதபடி கருகிப்போயிருந்ததுடன் இச்சம்பவத்திற்கும் அப்பிரதேசத்தில் பலமாக இருக்கும் சிங்கள வீர விதானவுக்கும் நெருக்கமான தொடர்புகள் இருக்கலாமென்றும் அவர்களே இதனை திட்டமிட்டு செய்திருக்கலாமென்றும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான பூரண விசாரணைக்கான உத்தரவு ஜனாதிபதியினால் விடுவிக்கப்பட்டிருக்கிறது.


* இளைஞர்கள் விரும்புவது
யுத்தமும் வீரசாகசமுமா ?
* சமாதானத்தில் அவர்களுக்கு
அக்கறை இல்லையா?
* இன்றைய இளைஞர்கள்
என்ன சொல்கிறார்கள்?

ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு
ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்



செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு
ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது.


ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 26.10.2000